South Harrow Food & Wines
தமிழ்க் கடை
Tel: 0181-4236321
234 Northolt Road, South Harrow, Middleser Ha2 8 du
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள் மரக்கறி வகைகள்
CD Audio's அத்துடன் புதிய தமிழ் திரைப்படங்கள் வாடகைக்கு
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
(மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட)
We Accept All Credit cards & Cheques

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly

முரசு: 4 10 – 16 செப்டெம்பர் 1998 முழக்கம்: 191

Sakthy Video
Video Filming for Wedding's B'day's & any other Occasion's
By 3 CCD CAMERA'S
Please Cont: 0181-8956822
Mob: 0981313436
K.R.S.
33 Lee High Road, Lewisham Se -13
Tel: 0181-2979432

# நாங்களே அரசின் ஆட்சிக்காலத்தை தீர்மானிப்பவர்கள்

## ஜெயசிக்குறுய் ஒரு இராணுவத்தை உருவாக்க எமக்கு உதவியது
## – விடுதலைப் புலிகளின் அரசியல் பீடத்தலைவர் தமிழ்ச்செல்வன்

(07.09.98)

சிறிலங்கா அரசின ஆட்சிக் காலத்தையும் போரின் முடிவு காலத்தையும் தீர்மானிப்பவர் கள் விடுதலைப் புலிகள் என சண்டே லீடர் பத்திரிகைக்கு செவ்வி வழங்கிய விடுதலைப் புலிகளின் அரசியல் பீடத் தலைவர் தமிழ்ச் செல்வன் பிரகடனப்படுத்தியுள்ளார்.

சந்திரிகா அரசின் போலித் தனத்தை கடுமையாகச் சாடிய தமிழ்ச்செல்வன், ஜனாதிபதி சந்திரிகா யாழ்ப்பாணம் அனுப் பிய பேச்சுவார்த்தைக் குழுவில் அங்கம் வகித்தவர்கள், அவரது பிரத்தியேக கணக்காளரும், கட்டடக் கலைஞரும், செயலாளரும் ஆவர். ஆனால் இன்று அவர்களை அவர் தூக்கி எறிந்து விட்டார். அவர்கள் மீது சந்திரிகாவிற்கே நம்பிக்கை இல்லை எனில், எவ்வாறு நாம் அவர்களை நம்பி பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருக்க முடியும் எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரபாகரன் வரலாற்றால் உருவாக்கப்பட்ட ஒரு முன்னோடி. தமிழர்களுக்கு நிராகரிக்கப்பட்ட உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கே வரலாறு அவரை உருவாக்கியது. அவர் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(பேட்டியின் முழுவிபரம் 7-ம் பக்கத்தில்)

### முல்லைத்தீவில்
## தொடர்ந்து 6வது நாளாக நீர் - உணவு இன்றி உண்ணாவிரதப் போராட்டம்

(07.09.98)

சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரண வெட்டை எதிர்த்து முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் பல ஆயிரக்கணக்கான மக்கள் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் நீர், உணவு இன்றி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த யூன் மாதம் முதல் நிவாரணம் குறைக்கப்பட்டிருந்தது. சென்ற வாரம் முல்லைத்தீவு, கிளிநொச்சி அரச அதிபர்களுக்கு சிறிலங்கா அத்தியாவசிய சேவை ஆணையாளர் என். ஒபடசே வன்னி மக்களுக்கான நிவாரணம் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவித்ததைத் தொடர்ந்தே இப் போராட்டம் மேலும் வலுவடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இரண்டாம் திகதி காலை ஆரம்பிக்கப்பட்ட இவ் உண்ணாவிரதப் போராட்டம் இன்று வரை தொடர்ந்து நடைபெற்று [illegible] நடந்த போராட்டத்தில் மட்டும் 800க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு பேசிய புதுக்குடியிருப்பு போதகர் ஜாவின்

(☞ 2ம் பக்கம்)

## பட்டினி போட்டுக் கொல்வது கோழைத்தனம்
### – வன்னி அரச சார்பற்ற நிறுவனங்கள்

போர் மூலம் சாதிக்க முற்பட்டது தோல்வி அடைவதினால் பட்டினி மூலம் அதனைச் சமாளிக்க அரசு முற்படுகின்றது என வன்னி அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பின் தலைவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த அரசு, ஜனநாயகம் பற்றி பேசிக்கொண்டு, பெரும்பான்மை மக்களின் சர்வாதிகாரியாக செயற்படுகின்றது. தமிழர்களை பட்டினி போட்டுக் கொல்வதன் மூலம் அழிக்க முற்படுகிறது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

## விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டிற்கு பா.ஜ.க. வரவேற்பு

(07.09.98)

விடுதலைப் புலிகளின் அரசியல்பீட பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனின் அறிவிப்பை பாராடிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாட்டுப் பிரிவினர் பகிரங்கமாக வரவேற்றுள்ளனர்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்துவத்துடனான புதிய பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளதை பாராட்டிய பா.ஜ.க., இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இது தொடர்பான முன் முயற்சியில் ஈடுபட்டு தீர்வுகாணப் பாடுபட வேண்டும் எனக் கோரியுள்ளது.

தமிழர் பிரச்சினை சிறிலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினையல்ல எனக் குறிப்பிட்டுள்ள பா.ஜ.க., இப் பிரச்சினையை ஒதுக்கிவிட முடியாது என வர்ணித்துள்ளது. இவ் விடயத்தில் தமிழக மக்கள் இந்தியப் பிரதமருக்கு ஆதரவளிப்பார்கள் எனவும் அக்கட்சி அறிவித்துள்ளது.

## கிளிநொச்சியில் டாங்கி அழிக்கப்பட்டது

(02.09.98)

கிளிநொச்சி - பரந்தன் முன்னரங்க நிலைகளிலிருந்து இன்று காலை 9.00 மணியளவில் முன்னேற முற்பட்ட சிறீலங்கா இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் மீள அவர்கள் நிலைகளுக்கு விரட்டியடித்தனர். இத் தாக்குதலின் போது ஒரு பிரதான தாக்குதல் டாங்கி தாக்கி அழிக்கப்பட்டுள்ளது. பரந்தன் பிரதான தளத்தில் இருந்து இரண்டாம் மைல் கல் ஊடாகவும், கிளிநொச்சி முரசுமோட்டை ஊடாகவும் இராணுவத்தினர் நகர முற்பட்ட போதே கடும் சமர் இடம் பெற்றது. அரைமணிநேர சண்டைகளின் பின்னர் இராணுவம் பழைய நிலைகளுக்கு

(☞ 2ம் பக்கம்)

## யாழில் சிங்கக்கொடி ஏற்றியது தவறு - ரணில்

எம்முடன் உடன்பாடு ஒன்றைக் கண்டுவிட்டால் விடுதலைப் புலிகளை நசுக்கிவிடலாம் என சந்திரிகா அரசு கருதியது. ஆனால் நான் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றே விரும்பினேன் என ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கா யாழ் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். யாழ் மாவட்டத்தை சிறிலங்கா இராணுவம் கைப்பற்றிய பின்னர் அரசு சிங்கக் கொடி ஏற்றியதை தவறு என கூறிய ரணில், எதிரி நாடொன்றை கைப்பற்றும் போதுதான் எமது கொடியை ஏற்றலாம். ஜே.வி.பி. யை இல்லாது ஒழித்தபோது நாம் இவ்வாறு கொடிகளை ஏற்றவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்கள் எல்லாப் பிரதேசங்களிலும் துன்புறுத்தப்படு

(☞ 2ம் பக்கம்)

## பருத்தித்துறை சுற்றிவளைப்பு

(05.09.98)

பருத்தித்துறை நகரை சிறீலங்காப் படைகள் சுற்றிவளைத்து தேடுதல்வேட்டை நடாத்தியுள்ளன. நேற்றுக்காலை நகரின் நான்காம் குறுக்குத்தெரு, மற்றும் அயல் பகுதிகளில் சுமார் 500 பொதுமக்களை கைது செய்து அயலில் அமைந்திருந்த இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றனர்.

விசாரணைகளின் பின்னர் 11 தமிழ் இளைஞர்கள் தடுத்து

(☞ 2ம் பக்கம்)

உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது
Kumars Shop
S.A.R.L.
80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore Exchange Co.
90, Bld. Rochechouart, 75018 Paris. Mo: Anvers ou Pigalle
Tel: - Fax: 01 42 23 03 10
ou 01 42 59 53 91

**ஈழமுரசு**
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

RCS PARIS
B 399 678 110 (95B01491)

Directeur de la publication:
P. Velupillai

Redacteur:
P. Sivaguru

Impression:
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. கோபாலசிங்கம்

நிருவாக ஆசிரியர்:
அமரர் க. விஜயகுமார்

ஆசிரியர்:
பி. சிவகுரு

தமிழ் தொடர்புகளுக்கு
EELAMURASU
22, Rue Perdonnet
75010 Paris.
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்
Tel.: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
கே. சிவகுமாரன்
Tel: 03 04 35 29 23
அவுஸ்திரேலியா:
Tel / Fax: 02 151 38 73 63

டென்மார்க்:
R. ராஜசேகரன்
Grundtvigs Vej - 36, 1.th
7400 Herning, Denmark.
Tel: 97 12 03 76 - 97 21 78 49

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Heinrich Str-85, 8005 Zürich.
Druckerei: Frankreich.
Tel: 01-271 7374

கனடா:
ஜெயகுமார் - Tel: 0956308145
குணம்: - Tel: 0955277718

இத்தாலி:
மக்கள் கடை
VIA DANTE - 216A, PALERMO
Tel: 091-6824068

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
தமிழ்வாணன்
Tel: 076 5425804

# செம்மணிக்கு அமெரிக்க குழு விஜயம்

(07.09.98)

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உயரதிகாரி திரு ஜோர்ஜ் பிக்கொட் தலைமையிலான நிபுணர் குழு நேற்று செம்மணிப் புதைகுழிப் பகுதிக்கு விஜயம் செய்துள்ளது. இக் குழுவில் அமெரிக்க தூதரக உயர் அதிகாரி நிக்சாட் ஸ்மித்தேயும், இராணுவ நிபுணர் லெப். கேர்னல் மைக்கல் புரேயும் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

இக் குழு சிறீலங்கா அரசினால் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள் இரகசியமாக புதைக்கப்பட்ட இடம் எனக் கருதப்படும் செம்மணிப் பகுதிகளினை பார்வையிட்டதுடன் யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பலேகல்லவையும் சந்தித்துப் பேசியுள்ளது.

## செம்மணி புதைகுழிகளை தோண்ட 10,000 கையெழுத்துக்கள்

செம்மணியில் புதைக்கப்பட்டுள்ள 400-க்கும் மேற்பட்டவர்களின் புதைகுழிகள் உடனடியாகத் தோண்டப்பட வேண்டுமெனக் கோரி, காணாமல் போனோர் சங்கத்தினர் பத்தாயிரம் பொதுமக்களின் கையெழுத்து வாங்கி மனித உரிமை ஆணைக்குழுவிற்கும், சிறீலங்கா ஜனாதிபதிக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படாத கட்டத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கையெழுத்துக்களை வாங்கி அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் செம்மணிப் புதைகுழிகளை ஒளிப்பட நாடாக்களில் பதிவு செய்து அதனை அடையாளம் காட்டுமாறு, இரு சாத்தி கொலைக் குற்றவாளி கேட்கப்பட வேண்டும் எனயாழ். மக்கள் சக்தி இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### முல்லைத்தீவில்...

அவர்கள் 'இன்று மக்கள் பட்டினி நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டனர். இன்னும் சில நாட்களில் இதனது பாதிப்பு வெளிப்படையாகவே தெரியும்' என தெரிவித்துள்ளனர்.

மக்களின் இத் தொடர்ச்சியான போராட்டங்களினால் கச்சேரிகள் இயங்க முடியாதுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து நடைபெற்று வரும் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் இன்று இறுதியாக கிடைத்த தகவல்களின் படி 700க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதாக தெரிய வருகின்றது. சிறீலங்கா அரச இத்தடையை நீக்கும்வரை போராட்டம் சுழற்சி முறையில் நடைபெறும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இத்தடையை உடன் நீக்கக் கோரி, முல்லைத்தீவு, கிளிநொச்சி கச்சேரியின் அதிகாரிகள் ஒபடகேயுக்கு கடிதங்களின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளனர். சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ் நிவாரண வெட்டை உடனடியாக மறு பரிசீலனை செய்ய வேண்டுமென மனித உரிமை அமைப்புக்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் அவசர அவசரமாக வேண்டுகோள்களை விடுத்துள்ளன.

இந் நிவாரண வெட்டு உடனடியாக நீக்கப்படா விட்டால் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் இயல்பான வாழ்க்கை முற்றாக பாதிக்கப்படும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழில்...

கின்றார்கள். உணவு போருக்கான ஆயுதமாகப் பாவிக்கப்படக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

நாம் ஆட்சிக்கு வந்தவுடன் புலிகளுடன் போர் நிறுத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவேன். போர் நிறுத்தமே சராசரி தமிழனுக்குத் தேவையான விடயம் எனவும் அவர் கூறியுள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### கிளிநொச்சியில்...

விரட்டியடிக்கப்பட்டது.

இத் தாக்குதல் தொடர்பான மேலதிக விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை வடமராட்சி கட்டுக்கோவலம் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டு ஆறுபேர் காயமடைந்துள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### பருத்தித்துறை...

வைக்கப்பட்டனர். ஏனையவர்களை பலத்த எச்சரிக்கையின் பின் இராணுவம் விடுதலை செய்தது. இதன்போது ஒரு இளைஞன் சயனைட் உட்கொள்ள முற்பட்டதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

## இசைக் கலைஞர்களே இணையுங்கள்!

பிரான்சிலுள்ள பாடகர்கள், பாடகிகள், வாத்தியக் கலைஞர்கள், இசையமைப்பாளர்கள், இசையார்வலர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் முகமாக தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் பிரெஞ்சுக்கிளைக் கூட்டமொன்றை நடாத்தவுள்ளது.

எதிர்வரும் 20.09.98 ஞாயிறு மாலை 6.30 மணிக்கு, 26 Rue du département, Paris 75018. (M°: La Chapelle)-ல் அமைந்துள்ள மண்டபத்தில் அனைவரையும் ஒன்றுகூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ்

மேலதிகத் தொடர்புகளுக்கு Tel: 01 43 58 11 42


## விற்பனைக்கு

பரிஸ் நகரில் நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் 'இந்தியன் றெஸ்ரோரண்ட்' விற்பனைக்கு உள்ளது

விபரங்களுக்கு
Tel : 01 45 79 21 21
38, Rue Fondary, 75015 Paris.
(Mo: Avenue Emil Zola / La Motte Picquet Grenelle)

## மரண அறிவித்தல்

பிறப்பு:
21.01.32



இறப்பு:
02.09.98

### சுப்பிரமணியம் கந்தையா

தமிழீழம் வேலணை புங்குடுதீவைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் கந்தையா அவர்கள் 02.09.98 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் திரு.திருமதி கந்தையாவின் அன்பு மகனும், ரத்தினத்தின் அன்புக் கணவரும், இராமு - வள்ளியம்மை ஆகியோரின் மருகனும், செல்வநாயகி, செல்வரதி, செல்வரட்ணம், செல்வராணி, செல்வமலர், செல்வரஞ்சன் (ஜோதி - பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான செல்வநாதன் (மகான்), செல்வலிங்கம், திருச்செல்வலிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதாசிவம், காலஞ்சென்ற மதிபாபரமம், பகீரதி, தேவராஜா, குணசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 06 11 16 92 59
01 39 90 15 52

தகவல்: மகன் - செல்வரஞ்சன் (ஜோதி)

புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,800 Frs. |
| Singapour | - | 3,670 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

# ராசீக் குழு கப்ப வேட்டை

(07.09.98)

சிறீலங்கா இராணுவத்தின் துணைப்படையாக செயல்படும் ராசீக் குழு மட்டக்களப்பு பகுதியில் கப்பம் மற்றும் வழிப்பறி நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது. உள்ளூர் வர்த்தகர்களிடமும், மக்களிடமும் பணம் மற்றும் பொருட்களை கப்பமாகப் பறிக்கும் இவ் ராசீக் குழு, வர்த்தகர்களிடம் பறிக்கும் பொருட்களை மிகவும் அதிக விலையில் மட்டு. மக்களுக்கு பலாத்காரமாக விற்று வருகின்றனர்.

கட்டடத் தேவைகளுக்கான மண் போன்றவற்றினை தம்மிடம் வாங்குமாறு மக்களை இக் குழு மிரட்டியுள்ளது. இம் மண் வியாபாரத்திற்காக நகர்ப்புற டிராக்டர் உரிமையாளர்கள் தமது டிராக்டர்களை, முழுமையாக எரிபொருள் நிரப்பப்பட்ட நிலையில் இரு வாரங்களுக்கு ஒருதடவை தரவேண்டும் என ராசீக் குழு அறிவித்துள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவிலிருந்து பிரிந்து இராணுவத்தின் முழுமையான துணைப்படையாக செயல்படும் இக் குழு மீது சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட பல அமைப்புக்கள் பல ரகக் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ள போதிலும், சந்திரிகா அரசு ராசீக் குழுவிற்கான உதவிகளை மேலும் அதிகரித்து செயல்பட ஊக்குவித்துவருகிறது.

# அம்பாறையில் தமிழ் மக்கள் மீது தடை

திருக்கோவில், அக்கரைப்பற்று, பொத்துவில் பகுதிகளில் தமிழ் மக்களின் நடமாட்டத்திற்கு புதிய தடை உத்தரவு ஒன்றினை சிறீலங்கா அரசு பிறப்பித்துள்ளது.

இத் தடை உத்தரவு தொடர்பான மேலதிக விபரங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் தளங்கள் அமைந்திருக்கின்றன எனக் கருதப்படும் அம்பாறை மாவட்ட கஞ்சிக்குடிச்சாறு பகுதியின் தென்பகுதிப் பிரதேசங்களே இவ்வாறு தடை செய்யப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கஞ்சிக்குடிச்சாறு பகுதி மீது சிறீலங்கா விமானப்படை விமானங்கள் குண்டு வீச்சுக்களை மேற்கொண்டுள்ளன.

இக் குண்டு வீச்சுக்கள் நடந்தது குறித்து பத்திரிகைகளுக்கு அப்பகுதி மக்கள் தகவல் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெற்றிலைக்கேணி

# கடல்பகுதி மீது பீரங்கித் தாக்குதல்

(07.09.98)

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிலிருந்து கிழக்கு கடல் பகுதி மீது, சிறீலங்காப் படைகள் தொடர்ச்சியாக 45 நிமிடங்கள் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. கடந்த 02.09.98 புதன்கிழமை இரவு 10.30 மணி முதல் 11.15 மணி வரை கடற் பிரதேசத்தில் பீரங்கித் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஒளியூட்டும் குண்டுகளை கடற் பரப்பு மீது வீசி ஒளியூட்டிய படையினர் கடற்புலிகள் தொடர்பான பய பீதியினாலேயே இப் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதாக யாழ். செய்திகள் தெரிவிக்கின்றன.

குடாநாட்டின் கிழக்குக் கரையோரப் பகுதியில் கடற்புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக இராணுவ உளவுத்துறை கருதுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அக்கரைப்பற்றில் பி.எல்.ஓ. புதிய ஆயுதக் குழு

அக்கரைப்பற்றில் P.L.O. எனப் பெயரிடப்பட்ட புதிய ஆயுதக் குழு ஒன்று தமிழ் மக்களை அச்சுறுத்தி துண்டுப் பிரசுரத்தை விநியோகித்துள்ளது.

இத் துண்டுப் பிரசுரத்தில் தமிழர்கள் முஸ்லீம்கள் வாழும் நகரங்கள், கிராமங்கள் உள் நுழையக்கூடாது என எச்சரித்துள்ளது.

இப் P.L.O. குழுவானது மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்பு செயல்பட்ட ஜிகாத் குழுவிலிருந்து பிரிந்து வந்தவர்களால் ஆரம்பிக்கப்பட்டது எனத் தெரியவருகிறது.

புலிகள் உடனடியாக முஸ்லீம் பிரதேசத்தில் தமது நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் எனக் கோரியுள்ள இப் புதிய குழு, அக்கரைப்பற்று புறநகர்ப் பகுதிகளில் புலிகள் பெறும் உதவிகள் நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரியுள்ளது. இக் குழு சிறீலங்கா அரச படைகளின் உதவியுடன் அமைக்கப்பட்டது என அப் பகுதி மக்கள் நம்புகின்றனர்.

அக்கரைப்பற்றுப் பகுதி புலிகளின் நடமாட்டத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருப்பதால், அரச படைகள் உள்ளூர் முஸ்லீம்களை தூண்டி தமிழ், முஸ்லீம் மக்களிடையே முரண்பாட்டை உருவாக்க முயல்வதாக கருதப்படுகிறது.

# வெடிமருந்து விசாரணையில் மட்டு கிராம சேவகர்

(07.09.98)

மட்டக்களப்பைச் சேர்ந்த கிராமசேவகர் ஒருவர் கண்டி பேராதனைப் பகுதி வெடிபொருட்கள் தொடர்பான விசாரணைக்காக சிறீலங்காப் பொலிசாரால் அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 15.08.98 அன்று கண்டி பேராதனைப் பகுதியில் 106 கிராம் வெடி பொருட்களை பொலிசார் கைப்பற்றியதாகவும், இதன் போது மட்டக்களப்பைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிசார் அறிவித்துள்ளனர்.

இவ் வெடிபொருட்களின் விசாரணையின்போது இரு இளைஞர்கள் சயனைட் உட்கொண்டதாகவும் இவர்களில் ஒருவர் கைதுசெய்யப்பட்டதாகவும் பொலிசார் அறிவித்துள்ளனர்.

# கருவாக்கேணியில் கிளைமோர்த் தாக்குதல்

(09.09.98)

மட்டக்களப்பு வாழைச்சேனை கருவாக்கேணிப் பகுதியில் ரோந்து சென்ற பொலிசார் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் இரு பொலிசார் காயமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பகல் 12.15 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் காயமடைந்த இரு பொலிசாரும் விசேட இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் எனத் தெரியவருகிறது. இத் தாக்குதலைத் தொடர்ந்து இப் பகுதியில் படையினரால் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

# மட்டு சுதந்திரக்கட்சிக்கு எதிராக போராட்டம்

மட்டக்களப்பில் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மட்டக்களப்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக ஒருநாள் வேலைநிறுத்தம் ஒன்றினை நடத்தியுள்ளனர்.

மட்டுநகரில் பிரதான போக்குவரத்து ஊடகமாக திகழும் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு பிரிவு மேற்கொண்ட முயற்சியை எதிர்த்தே கடந்த 02.09.98 புதன்கிழமை முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கம் ஒருநாள் வேலைநிறுத்தத்தில் குதித்தது.

ஆளும்கட்சி மட்டுப் பொறுப்பாளர் ராஜன் மயில்வாகனம் உரிமையாளர் சங்கத்தினைச் சிதைப்பதற்கு பல தடவைகள் முயற்சித்தார் எனவும் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

# கிருசாந்தி கொலைக்குற்றவாளிக்கு பாதுகாப்பு கோரிக்கை

(05.09.98)

வெலிக்கடைச் சிறையில் வைத்து தாக்குதலுக்கு உள்ளான கிருசாந்தி கொலைக் குற்றவாளி தன்னை வேறுசிறைக்கு மாற்றுமாறு கோரியுள்ளார்.

செம்மணியில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொலை செய்து புதைக்கப்பட்டது தொடர்பான விசாரணைகளுக்கு பிரதான சாட்சியாகக் கருதப்படும் இவரை சிறைக்காவலாளிகள் தாக்கியும் எச்சரித்தும் வருவதால் இவரது உயிருக்குப் பாதுகாப்பு வழங்குமாறு சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

இவரது தாக்குதல், அச்சுறுத்தல்களுக்கு பின்னால் அமைச்சர் ஒருவர் உள்ளதாகத் தெரியவருகிறது.

## மன்னார்

# 5000 பொதுமக்கள் மீது கடும் சோதனை

(05.09.98)

இன்று மன்னார் நகரைச் சுற்றிவளைத்த சிறீலங்காப் படையினர் பலத்த சோதனை வேட்டையில் ஈடுபட்டனர்.

காலை 10 மணிக்கு ஆரம்பமான இச் சோதனை நடவடிக்கைகள் மாலை 3.00 மணிவரை தொடர்ந்துள்ளன. இச் சுற்றிவளைப்பு சோதனைகள் தொடர்பான மேலதிக விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து 1500 பொதுமக்கள் உயிலங்குளம் ஊடாக மன்னார் பகுதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### ரேடியோ ஆசியா கனடா பிரான்ஸ் கலையகம்

கனடாவிலிருந்து ஒலிபரப்பாகும் ரேடியோ ஆசியா கனடா தமிழ் ஒலிபரப்பு நிறுவனத்தின் பிரான்ஸ் கலையக அங்குரார்ப்பணம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (13.09.98) இரவு 9.00 மணிக்கு 16 RUE JACQUES LOUVEL TESSIER, 75010 PARIS (M° Goncourt) என்னும் முகவரியில் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கோலாகலமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது
அனைத்து மளிகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
லா சப்பல் மெற்றோ நுழைவாயிலின் முன்பாக
கோபால் & கோ
410 சதுர மீட்டர் பரப்பளவில் தமிழ் மக்களுக்காக மிகப் பிரமாண்டமான பல்பொருள் அங்காடி
GOPAL & COMPANY SUPER MARCHE
72, Rue Louis Blanc, 75010 Paris. - Metro: La Chapelle Tel: 01 53 26 09 25

மட்டக்களப்பு:

# கொலையுதிர் காலம்

## தொடரும் கொலைகள் பற்றி ஓர் அறிக்கை


மட்டக்களப்பில் அண்மைக்காலமாக தொடர் ஹூரறினை ஒத்த நிலைமை தென்படுவதினைக் காணக் கூடியதாக இருக்கின்றது. 90-களில் நடைபெற்ற கொலைகளுக்கும், ஆட்கடத்தலுக்கும் 'மூனான்' டும் புளொட் மோகனுமே காரணகர்த்தாக்களாக இருந்து செயற்பட்டு வந்தார்கள். ஆனால், தற்போது நடைபெற்று வரும் மர்மக் கொலைகளுக்கு 'ஷக்கியா', 'ராசிக்கா' சூத்திரதாரிகள் என்பதுதான் இன்று அனைவரிடமும் கேள்விக்குறியாக இருந்து வருகிறது. மட்டக்களப்பில் கடந்த இரு மாத காலத்தில் 5 மர்மமான கொலைகள் இடம் பெற்றிருக்கின்றன.

இந்த 5 கொலைகளும் ஒரே பாணியில் செய்யப்பட்டதுமல்லாமல், இக் கொலைகளுக்குப் பாவிக்கப்பட்ட துப்பாக்கி ரவைகளும் ஒரே இனத்தைச் (எம். 9 பிஸ்டல்) சேர்ந்தவையாகவே இருக்கின்றன. எனவே இந்த 5 கொலைகளையும் செய்தது ஒரே குழுவைச் சேர்ந்தவர்கள் என்பது நிரூபணமாகின்றது. இந்த ஒரே குழு எது என்பது தான் அடுத்த கேள்வி? இந்த 5 கொலைகளிலும் சம்பந்தப்பட்ட கொலையாளிகள் தமிழ் பேசியிருக்கிறார்கள். இந்த ஒரே ஒரு காரணத்தினாலேயே கொலையாளிகள் ராசிக்கினுடைய ஆட்கள் என்ற சந்தேகங்கள் எழ ஆரம்பித்தன. உண்மையில் இந்தக் கொலைகளைச் செய்தவர்கள் ராசிக் குழுவினர் அல்ல என்பதுதான் புதிய செய்தியாக இருக்கிறது.

### - சற்குரு -

'புச்சான்' என்பவரே இந்தக் கொலைகளின் சூத்திரதாரி என்பது புதுத் தகவல். ராசிக் குழுவில் இவர் ஆரம்பத்தில் செயற்பட்டு வந்தார். தற்போது அதில் இருந்து விலகி இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் சேர்ந்து செயற்பட்டு வருகின்றார். இவர் மட்டக்களப்பு கூழாவடி கிராமத்தைச் சேர்ந்தவர், தனது பாதுகாப்பு காரணம் கருதி ஜெயந்திபுர பொலிஸ் காவலரணுக்கு அருகில் மனைவியுடன் குடித்தனம் நடத்துகின்றார். இவருடன் புன்னைச்சோலையைச் சேர்ந்த 'தங்கன்' என்பவரும் சேர்ந்தே இக் கொலைகளைச் செய்து வருகின்றனர் எனத் தெரிய வருகின்றது.

இவர்கள் இருக்கின்ற பகுதிகளில் யாருடைய குடும்பத்திலாவது புலியோடு சம்பந்தப்பட்டவர்கள் இருப்பின் அவர்கள் பற்றிய தகவலை இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு வழங்கி, அதற்கூடு தங்களது குடும்ப எதிரிகளையும், புலிச்சாயம் பூசி அவர்களையும் காட்டிக்கொடுப்பதே இவர்களின் வேலையாக இருக்கின்றது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், இராணுவ அதிகாரிகளும் இவர்களைப் பயன்படுத்தி இக் கொலைகளைச் செய்து வருகின்றனர். இந்த 5 கொலைகளில் உதயசேகர், அருளானந்தம் ஆகியோரின் கொலைகள் தனிப்பட்ட விரோதத்தை வைத்துச் செய்யப்பட்டவை எனத் தெரிய வருகின்றது.



சம்பவ தினம் இரவு 7.20 மணியளவில் புச்சான், தங்கன் ஆகியோர் உதயனின் வருகைக்காக புகையிரதக் கடவை அருகில் காத்து நின்றதைப் பலரும் அவதானித்திருக்கிறார்கள். இவர்களின் நடமாட்டம் பற்றியும், உதயனின் வருகைக்காகத்தான் காத்து நிற்கிறார்கள் என்பதையும், இவர்களுடைய கதைகளில் இருந்து அவதானித்திருக்கிறார்கள். இவர்கள் நின்ற இடத்திலிருந்தே உதயன் சுடப்பட்ட சத்தம் கேட்டதும், அவரது சடலம் அவ்விடத்திலேயே கிடந்ததும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

இதேபோன்று சத்துருக்கொண்டானில் நடைபெற்ற கணவன், மனைவி இரட்டைக் கொலையிலும் இவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். சம்பவம் நடப்பதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன் இவர்கள் இராசரத்தினம் அவர்களின் வீட்டு வேலி ஓரத்தில் பதுங்கியிருக்கிறார்கள். இவர்களுக்குப் பரிச்சயமான ஒருவரை இவர்கள் கண்டதும் மரத்துக்குப் பின்னால் இவர்கள் ஒளித்திருக்கிறார்கள். இராசரத்தினம் சுடப்பட்ட வேளையில் சட்டவுடைய பெயரைச் சொல்லி மனைவி நாகேஸ்வரி கத்தியபடியேயே காரியம் பிழைத்ததால் நாகேஸ்வரியும் சுடப்பட்டார். நாகேஸ்வரியின் கொலையின் பின்பே இவர்கள் முகத்திற்கு கறுப்புத் துணி கட்டத் தொடங்கியுள்ளார்கள். தங்களை இனம் காணாமல் இருக்கட்டும் என கறுப்புத் துணி கட்டி, செய்யப்பட்ட முதற் கொலை இன்னாசி பிரான்சிஸ்ஸினுடையதாகும். பிரான்சிஸ்ஸினுடைய வீட்டுக்கும் புச்சானுடைய வீட்டிற்கும் இடைப்பட்ட தூரம் 250 யார் வரை இருக்கும். ஒருவேளை தன்னை அடையாளம் கண்டு விடுவார்கள் என்று கறுப்புத் துணி கட்டினார்களோ என்னவோ தெரியாது.

ஆனால் இது எல்லாவற்றையும் விட விசித்திரமானது என்னவென்றால், இராசரத்தினம், நாகேஸ்வரி கொலைசெய்யப்பட்ட சிறிது நேரத்தில் 3-வது படைப்பிரிவு முகாமிலிருந்து ஒரு அதிகாரி இராசிக்கிற்கு டெலிபோன் பண்ணியிருக்கிறார். சம்பவம் நடந்த இடத்தைச் சுட்டிக்காட்டி (சம்பவத்தைக் குறிப்பிடாமல்) புலிகள் அப்பகுதிக்கு வந்திருப்பதாகவும் அந்த இடத்துக்குப் போய் சுற்றி வளைக்குமாறும் கூறியிருக்கிறார். இவர்கள் இங்கு வந்த போது இந்தக் கொலைச் சம்பவம் நடந்து முடிந்திருந்தது. இதே போன்று பிரான்சிஸ் கொலை செய்யப்பட்ட அன்றிரவும் அச் சம்பவத்தைக் குறிப்பிடாமல் குறித்த இடத்தை குறிப்பிட்டு அங்கு புலி வந்ததாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கும் இதே அதிகாரி தொலைபேசி மூலம் தெரிவித்தாராம். உண்மையில் இந்த 'தொலைபேசி' புலி வந்திருக்கின்றது என்ற தகவலைக் கொடுக்கின்ற போர்வையில், தங்களால் செய்யப்படுகின்ற கொலைகளைத் தாங்கள் செய்யவில்லை என நிரூபணப்படுத்தப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்றே கொள்ள முடிகின்றது.

இதே போன்று காரைதீவு இராணுவ முகாமைச் சேர்ந்த கமால் பெரேரா என்பவரும் புலி வேட்டையாடி வருகின்றார். கடந்த இரு மாதங்களுக்கு முன், கல்முனையில் அவரது வீட்டில் வைத்து சுடப்பட்ட பொடியப்பு சாமி ஜெயகாந் (??) ஒரு ஒன்றுமறியாத அப்பாவி மாணவன். சம்பவ தினம் 6.30 மணியளவில் வீதியால் சென்று கொண்டிருந்த கமால் குழுவினர் வேலியால் எட்டிப்பார்த்திருக்கின்றனர். ஜெயகாந்த் வீட்டுத் திண்ணையில் இருந்திருக்கின்றார். உடனேயே படலையை உடைத்து வளவுக்குள் வந்தவர்கள், ஜெயகாந்தை உறவினர்கள் முன் தாக்கியிருக்கின்றார். தமது மகனை அடிப்பதைக் கண்டு பதைப்போய் குறுக்கே போன தாயும் தாக்கப்பட்டார். சற்று நேரத்தில் பிடிபட்டவராக உள்ள வளவுக்குள் இழுத்துச் சென்று அவரைக் கமால் சுட்டுள்ளார். தனது மகன் சுடப்பட்டதைக் கண்முன்னே பார்த்து நின்ற தாய் சுட்டவர்களைக் குறிப்பிட்டுச் சாட்சியம் கூறியும் 'இனம் தெரியாத நபர்களினால் சுடப்பட்டு ஏற்பட்ட இரத்தப் பெருக்கினால் மரணம்' என்றே மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

தனது மகன் சுடப்பட்டதைக் கண்முன்னே பார்த்து நின்ற தாய் சுட்டவர்களைக் குறிப்பிட்டுச் சாட்சியம் கூறியும் 'இனம் தெரியாத நபர்களினால் சுடப்பட்டு ஏற்பட்ட இரத்தப் பெருக்கினால் மரணம்' என்றே மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று சங்கர் கண்ணன் (19) என்பவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே 3 மாத காலமாக காரைதீவு முகாமில் வைக்கப்பட்டு இருந்து வந்தவர். ஆனால், சம்பவம் நடப்பதற்கு 3 வாரங்களுக்கு முன்னர் முகாமுக்கு கையெழுத்திட சென்ற வேளை இனி வரத்தேவையில்லை என்று இவருக்கு கூறப்பட்டிருக்கின்றது. இவர் திருமணம் முடித்து 9 மாதம்தான். புதுவருடத்திற்காக சாமான் வேண்டுவதற்காக கல்முனைக்கு வந்தவர். தனது நண்பர் ஒருவருடன் மருதமுனைக்கு வந்திருக்கின்றார். அங்கு நண்பர்களுடன் கதைத்துக்கொண்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கண்ணனை கைகளைக் கட்டி மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றிருக்கின்றார்கள். வந்தவர்களில் ஒருவர் கமால். இவரை துரவந்திய மேடு என்ற இடத்திற்கே கொண்டுசென்றார்கள். இதே வேளை அங்கு சுற்றிவளைப்பு நடந்துகொண்டிருந்தது. துரவந்திய மேட்டுக்கு கண்ணனைக் கொண்டு சென்று மிகவும் மோசமாகத் தாக்கிய பின் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். ஆனால், நீதிமன்றில் வழக்கு நடந்த வேளையில் கண்ணன் ஆயுதம் இருக்கும் இடத்தைக் காட்ட வென்றே கூட்டிச் செல்றதாகவும் அங்கு புலிகள் மறைந்து நின்று சுட்டதில் கண்ணன் இறந்ததாகவும் கமால் சாட்சி சொன்னார். ஆனால கண்ணனின் கைகள் முறிக்கப்பட்டு உடம்பில் அடிகாயங்கள் இருந்திருக்கின்றன. இதனால் அதிர்ச்சியடைந்த கண்ணனின் மனைவி இ. ஜீவராணி (19) மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் வீட்டில் இருக்கின்றார்.

இதே கதிதான் கதாகரனுக்கும் ஏற்பட்டது. கமால் புலிச்சாயம் பூசி அப்பாவிகளைச் சுடுவதிலும், அடிப்பதிலும் திருப்தி அடைபவன் என்றும் கூறுகின்றார்கள் மக்கள்.

நன்றி: 'சரிநிகர்'

| திகதி | பெயர் | இடம் | காரணம் | யாரால் |
|---|---|---|---|---|
| 18.06.98 | இ.உதயசேகரன் | புன்னைச்சோலை | – | புச்சான், தங்கன் |
| 18.07.98 | ஆ.அருளானந்தம் | நாவற்குடா | – | – |
| 10.08.98 | இ.பிரான்சிஸ் | கருவேப்பங்கேணி | புலிச்சாயம் பூசப்பட்டவர் | புச்சான் |
| 07.08.98 | இ.இராசரெத்தினம் | சத்துருக்கொண்டான் | புலிச்சாயம் பூசப்பட்டவர் | புச்சான் |
| 07.08.98 | இ.நாகேஸ்வரி | சத்துருக்கொண்டான் | புலிச்சாயம் பூசப்பட்டவர் | புச்சான் |

(மட்டக்களப்பு மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டவர்கள்)

| திகதி | பெயர் | இடம் | காரணம் | யாரால் |
|---|---|---|---|---|
| 02.05.98 | பொ.ஜெயகாந் | கல்முனை | புலி என்ற சந்தேகம் | காரைதீவு எஸ்.டி.எப். முகாமைச் சேர்ந்த கமால் பெரேரா |
| 13.01.98 | ச. கண்ணன் | 4-ம் கொலனி | புலி என்ற சந்தேகம் | |
| 02.06.98 | ந.புஸ்பராசா | பெரியநீலாவணை | புலி என்ற சந்தேகம் | |
| 05.04.98 | சோ.கதாகரன் | பழுகாமம் | புலி என்ற சந்தேகம் | |

சிவாசினி வாகன சேவை
Chivashini Transport
வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை
தொடர்புகட்கு: ஜெயா
0614616984 / 0611289118 / 0614424117 / 01 42 05 44 04

டிஸ்னி றெஸ்றோறன்ட்

# போலந்து – ஜேர்மன் எல்லையில் இறந்த தமிழர்களுக்கு ஜேர்மனியில் நினைவுச்சின்னம்

எமது நாட்டில் சிறீலங்கா அரச தமிழ்மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விட்டுள்ள வெறித்தனமான தாக்குதலுக்கு அஞ்சி மூன்று வருடங்களுக்கு முன்பு போலி ஏஜன்சிகளை நம்பி வந்த 7 தமிழர்களும் ஒரு பாகிஸ்தானியரும் ஜேர்மனிக்கு அரசியல் தஞ்சம் கோரி வருகையில் போலந்து ஜேர்மன் எல்லையில் உள்ள 'னைச' (Neisse) என்னும் ஆற்றைக் கடக்க முற்படுகையில் பரிதாபகரமாக இறந்தது யாவரும் அறிந்ததே!

இவ்விடயம் ஆரம்பத்தில் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த போதிலும் சில மனித உரிமை ஸ்தாபனங்களின் தலையீட்டினால் இறந்தவர்களின் உறவினர்களுக்கும், ஏனையவர்களுக்கும் தெரிய வந்தது என்பது குறிப்பிட வேண்டிய ஒரு விடயம்.

கடந்த 23.08.98 அன்று உலகத் தமிழர் இயக்கத்தினாலும், சர்வதேச மனித உரிமைச் சங்கத்தினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட அகதிகள், குடிபெயர்ந்தோர் உரிமைக்கான பேரணி யாத்திரையானது, போலந்து ஜேர்மனி எல்லையைப் பிரிக்கும் 'னைச' எனும் ஆற்றங்கரையோரமாக சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரை ஊர்வலமாகச் சென்று, அங்கு 'னைச' ஆற்றைக் கடக்கையில் அகால மரணமடைந்த ஏழு தமிழர்களுக்கும், ஒரு பாகிஸ்தானியருக்கும் தமது அஞ்சலியை செலுத்தினார்கள்.

அதேவேளை அவ் ஆற்றங்கரையில் இறந்தவர்களுக்கான நினைவுச் சின்னம் ஒன்றும் நிறுவப்பட்டது.

இதில் பல மனித உரிமை ஸ்தாபனங்கள், அகதிகளுக்கான நிறுவனங்கள், குடிபெயர்ந்தோர் அமைப்புக்கள், மற்றும் இனத் துவேசத்திற்கு எதிரான அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இரங்கலுரை நிகழ்த்தினார்கள்.

இதில் அகால மரணமடைந்தவர்களுக்கு தற்போது தற்காலிக நினைவுப்பலகை நிறுவப்பட்டாலும், அரசியல் ரீதியாக நிரந்தரமான நினைவுக்கல் நாட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக போலந்து, ஜேர்மன் எல்லையில் உள்ள ஜேர்மன் நாட்டின் ஒரு சிறு நகரமான 'Forst' என்னும் இடத்தில் உள்ள மனித உரிமை ஸ்தாபனம் ஒன்று தெரிவித்துள்ளது.

- V.S.

## அகதிகளை திருப்பி அனுப்பும் முயற்சியை எதிர்த்து அமைதிப் பேரணி

ஜேர்மன் கிறிபெல்ட் (krefeld) நகர தமிழர் ஒன்றியமும், ஏனைய வெளிநாட்டோர் ஒன்றியங்களும் இணைந்து எதிர்வரும் 17.09.98 வியாழனன்று அமைதிப் பேரணி ஒன்றை நடாத்த முடிவு செய்துள்ளன.

Neu markt . krefeld (kauf hof) அருகாமையில் பி.ப. 3.30 மணியளவில் ஆரம்பிக்கும் இப் பேரணி, கிறிபெல்ட் நகரபிதா வாசஸ்தலத்துடன் முடிவடைகின்றது.

தமிழ்மக்கள் திருப்பி அனுப்பப்படுவதை தடுக்கும் அதே வேளை, சிறீலங்கா அரசின் பொய்ப் பிரச்சாரங்களை முறியடிக்கவும், சிறீலங்கா இராணுவத்தினரின் மனித உரிமை மீறல்களை வெளிக்கொணர்ந்து அம்பலப்படுத்தவும் அனைத்து தமிழ் மக்களையும் இப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு கிறிபெல்ட் தமிழர் ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது. இப் பேரணிக்கு பத்துக்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜேர்மன் கிறிபெல்ட் நகரில் 1994-ம் ஆண்டு தொடக்கம் அகதி அந்தஸ்து கோரி வசித்து வந்த ஈழத் தமிழர் ஒருவர் தனது தங்குமிட அனுமதியை புதுப்பிக்கச் சென்ற வேளை அவரது அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு பிடித்து நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். இதே போல் ஜேர்மனில் பல மாநிலங்களில் நிகழ்வதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.


## இந்திய மீனவர்கள் உண்ணாவிரதம்

கடந்த யூலை மாதம் சிறீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் மூவர் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

காரணங்களின்றி தாம் கைது செய்யப்பட்டு விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதை எதிர்த்தும், குறிப்பிட்ட நாளைக்குள் தம்மை இந்தியாவிற்கு அனுப்ப வேண்டுமெனக் கோரியே இவ் உண்ணாவிரத போராட்டத்தை நடாத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இவர்களை பார்வையிட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இவர்களை இந்தியாவிற்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.


பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்
CENTRE PARISIEN D'EDUCATION POUR LES TAMOULS



புதிய Computer வகுப்புக்கள்
ஆரம்பமாக உள்ளன
12.09.1998 சனி பிற்பகல் 3 மணி
165 RUE DE CHARONNE, 75011 PARIS
M°: CHARONNE OU ALEXANDRE DUMAS
புதிய பிரெஞ்சு வகுப்பு
12.09.1998 சனிக்கிழமை பிற்பகல் 5.30 மணி
புதிய ஆங்கில வகுப்பு
12.09.1998 சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணி


## சந்நிதி செல்பவர்களுக்கும் கட்டுப்பாடு

யாழ் தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவிலில் ஆரம்பமாகி உள்ள உற்சவத்தில் கலந்து கொள்ள வலிகாமத்தில் இருந்து வருகை தரும் பக்தர்கள் வல்லை வெளியில் பல மணி நேரம் காத்திருக்கின்றனர்.

செல்வச்சந்நிதி செல்பவர்கள் இராணுவத்தினரின் அனுமதி பெற்று அங்கு வழங்கப்படும் விசேட அடையாள அட்டையுடனே செல்ல முடியும். இதற்காக இராணுவ காவலரண்களில் மக்கள் பலமணி நேரம் காத்திருப்பதாகவும் இராணுவத்தினர், அவர்களது விண்ணப்பங்களைப் பரிசோதித்து குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே அனுமதி வழங்கி வருகின்றனர். இதனால் சந்நிதி சென்ற பலர் அனுமதி கிடைக்காமல் திரும்பி வருகின்றனர்.

சென்றவாரம் சுமார் ஒரு மைல் தூரத்திற்கு மக்கள் சந்நிதி செல்ல காத்து நின்றதாகவும், இவர்களில் சிலரே விசாரணைகளின் பின்னர் விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டு தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களுக்கும் குறிப்பிட்ட மணி நேரம் சந்நிதி கோவிலில் நிற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## திரும்பும் மக்கள் ஒளிப்பதிவு செய்யப்படுகின்றனர்

வன்னியில் இருந்து யாழ். குடா செல்லும் மக்கள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே யாழ். குடா செல்ல அனுமதிக்கப்பட்டு வந்தமை தெரிந்ததே.

தற்போது யாழ். குடா செல்ல விரும்புபவர்கள் படையினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன் புகைப்படங்களும் எடுக்கப்பட்டு தனித்தனியாக ஒளிப்பதிவு (வீடியோ) நாடாக்களிலும் பதிவு செய்யப்படுகின்றனர்.

இதே வேளை இவர்கள் யாழ் குடா சென்ற பின்னரும் இவர்களை படையினர் கண்காணிப்பார்கள் எனவும் தெரிய வருகிறது.

விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினர் மக்களோடு மக்களாக கலந்து சென்று விடுவார்கள் என்பதனாலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக படை அதிகாரிகள் சிலர் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நாம் நிராகரிக்கிறோம் – பீரிஸ்

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தை நாம் நிராகரிக்கின்றோம் என நேபாளம் சென்றிருக்கையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசிய சிறீலங்கா அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த நாம் விருப்பம் கொண்டுள்ளோம். தற்போது நாம் முன்வைத்துள்ள அரசியல் திட்டங்களுக்கு எதிர்க்கட்சியும், சிங்கள மக்களும் ஆதரவு தரவேண்டும். அதன் பின்னரே புலிகளுடன் பேச முடியும். அதற்கு இன்னொரு நாடு மத்தியஸ்தம் வகிப்பதை நாம் விரும்பவில்லை, எனவே நாம் அதை நிராகரிக்கிறோம் என தெரிவித்துள்ளார்.

இப் பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்தியா தனது பங்களிப்பை வழங்கவேண்டும். விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தை குறைப்பதற்கு, 1987-ல் வழங்கியது போன்று நேரடிப் பங்களிப்பு வழங்காவிட்டாலும், இந்தியா தனது நல்லெண்ணத்தை சிறீலங்காவிற்கு வழங்குவதன் மூலமும் இப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரலாம் என மேலும் அவர் தெரிவித்தார்.

## படையில் இருந்து தப்பி ஓடியவர்கள் தமிழர் வீடுகளில் கொள்ளை

சிறீலங்கா படைகளில் இருந்து தப்பியோடிய படையினர் கொழும்பில் உள்ள தமிழர்களின் வீடுகளில் கொள்ளையடித்து வருகின்றனர். கொழும்பில் உள்ள தமிழர்களின் வீடுகளில் பகல், இரவு வேளைகளில் நுழையும் இவர்கள், தாம் உளவுப் பிரிவை சேர்ந்த பொலிசார் என்று கூறி வீடுகளை சோதனையிடுவதாகவும் அதன் போது பணம், நகை உட்பட விலை உயர்ந்த பொருட்களையும் கொள்ளையடித்து செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதங்களுடனும், பொலிசாரின் அடையாள அட்டைகளுடனும் இவர்கள் வீடுகளில் நுழைவதால் தமிழ் மக்கள் எவ்வித எதிர்ப்பினையும் காட்ட முடியவில்லை என கொழும்பு தமிழர் ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார்.

சென்ற வாரம் இவ்வாறான கோஷ்டி ஒன்று கொழும்பு நகரப்பகுதியில் கைத்துப்பாக்கிகள் சகிதம் சிறீலங்கா பொலிசாரிடம் பிடிபட்டுள்ளது. இவர்களை விசாரணை செய்த பொலிசார், இவர்கள் படையில் இருந்து தப்பி ஓடியவர்கள் எனவும், இவர்களுக்கு படையில் இருப்பவர்களும் துணை புரிகின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

# தமிழ் மக்களின் உரிமையை யாரும் தடுக்க முடியாது; எந்த சட்டத்திற்கும் மனித உரிமையைப் பறிக்க அதிகாரம் இல்லை

மனித உரிமைகளுக்கான ஐ.நா சபையின் 20 வருடங்களுக்கு மேலாக மனித உரிமை அமைப்பில் பணியாற்றி வருகிறார். 1983-ம் ஆண்டுகளில் இருந்து தமிழர் மீதான மனித உரிமை மீறல்களை சர்வதேச நாடுகளின் முன்னிலைக்குக் கொண்டுவந்து புலம்பெயர்ந்தோர் மத்தியிலும் அப் பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றார். அண்மையில் ஜெனிவாவில் மனித உரிமை உப குழுவின் அமர்வில் கலந்து கொண்ட அவர் ஈழமுரசு பத்திரிகைக்கு வழங்கிய விசேட செவ்வியைத் தருகின்றோம்.

**கேள்வி:- நீங்கள் ஐரோப்பா வந்த தன் நோக்கம் என்ன?**

பதில்:- ஐரோப்பாவுக்கு என்பதை விட, குறிப்பாக ஜெனிவாவிற்கு வந்துள்ளேன். நடைபெற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமைகள் உப குழுவில் பங்கு பற்றுவதற்காக வந்துள்ளேன். நான் இந்த உப குழுவில் 1983 தொடக்கம் சில வருடங்கள் தவிர, மற்ற வருடங்களில் எல்லாம் அதிகம் பங்கு பற்றி உள்ளேன்.

தமிழ் மக்களுக்கு குறிப்பாக இலங்கை தமிழ் மக்களுக்கு ஏற்படும் மனித உரிமை மீறல்களை பற்றி, கூடுதலாக யுத்தத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தெரிவித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தும் உள்ளேன்.

**கேள்வி:- இந்த ஜெனீவா மனித உரிமைகள் உபகுழு என்பது எவ்வகையான கடமைகளை ஆற்றுகின்றது. எவ்வகையில் அது முக்கியத்துவம் உடையதாக இருக்கின்றது?**

பதில்:- ஆரம்பமாக ஐக்கிய நாடுகள் சபையில் பலதரப்பட்ட குழுக்கள் இருக்கின்றன. இதில் மனித உரிமைகள் என்ற அமைப்பும் உள்ளது. இதில் 52 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அநேகமாக மார்ச், ஏப்பிரல் மாதங்களில் இக்கூட்டத்தொடர் நடப்பது வழக்கம். அதன் கீழ்த் தான் இம் மனித உரிமைகள் உப குழு அடங்குகின்றது இதனை மனித உரிமை மீறல்களை ஆராயும் உப குழு என்றும் கூறுவார்கள். இது 26 அங்கத்தவர்களைக் கொண்டது. அவர்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் மாதத்தில் ஒன்று கூடுவார்கள். இங்கு பல விதமான வேலைத்திட்டங்கள் உள்ளன. அதன் கீழ் ஒரு தேசத்தில் நடக்கும் மனித உரிமை மீறல்களை பற்றியும் ஆராய்வதற்கு வேலைத் திட்டங்கள் இருக்கின்றன. அதன்படி இவ் வருடம் இலங்கை பிரச்சினையை எடுத்திருந்தார்கள். அதனை 'வேலைத்திட்டம் 2' என்று சொல்வார்கள்.

ஆகவே என்னுடைய - குறிப்பாக உயிர் வாழ்வதற்கான உரிமை, சித்திரவதைக்கு உள்ளாகாதிருக்கும் உரிமை, காரணமின்றி கைதாவது - ஆகாமல் இருப்பதற்கான உரிமை, விசாரணையின்றி தடுத்து வைத்தல் போன்ற பல்வேறு உரிமைகள் பற்றி இச்சந்திப்பில் ஆராய இருந்தது. ஆகவே இவ் வருடம் இலங்கைத்தமிழர் பிரச்சினை பற்றி ஆராய உள்ளோம்.

வருடாவருடம் இது பற்றி விண்ணப்பங்கள் செய்தும், முறையீடு செய்தும், மனுக்கொடுத்தும், உள்ளோம். 1983-ம் ஆண்டு முதன் முதலாக இச்சபையில் வாதாடி நாம் தீர்மானம் கொண்டு வந்தோம். அதன் பின்பு இதன் அடிப்படையில் தான் 1987-ம் ஆண்டு மனித உரிமைகள் குழுவில் ஒரு பிரேரணை கொண்டு வந்தோம். I.C.R.C. இலங்கைக்கு அனுப்பப்படுவதற்கு அந்தப் பிரேரணைதான் அடிப்படைக் காரணமாக இருந்தது. இப்படி நேரடியாகவும் மறைமுகமாகவும் நாங்கள் எங்களால் செய்யக்கூடிய அளவுக்கு செய்து கொண்டு வருகிறோம். எமக்கு இலங்கையில் மனித உரிமைகள் கழகம் இருக்கின்றது. அதன் உதவி அத்தியட்சராக நான் இருந்துள்ளேன்.

**கேள்வி:- இம்முறை இவ் உப குழுவில் கலந்து கொண்ட போது எவ்வகையான பிரச்சினைகள் முன்னெடுக்கப்பட்டு பேசப்பட்டன. நீங்கள் எவ்வகையான பிரச்சினையை முறையிட்டு இருந்தீர்கள்?**

பதில்:- நாம் குறிப்பாக 1983 தொடக்கம் இந்த பிரேரணை கொண்டு வந்த நாள் தொட்டு இலங்கைப் பிரச்சினை, குறிப்பாக அதன் மையமித்த உரிமை மீறல்கள் குறித்து ஒரு முடிவு கொண்டுவர வேண்டும்' என அங்கத்தவர்கள் அனைவருக்கும் தெளிவாக ஒரு விண்ணப்பம் மூலம் விளங்கப்படுத்தினோம். அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். ஏற்றுக் கொண்டார்கள் என்றால் அதில் பல அர்த்தங்கள் உள்ளன. இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார்கள். அதைவிட, இம்முறை செம்மணியில் புதைக்கப்பட்டுள்ள 400-க்கும் மேற்பட்ட தமிழர்களின் விடயத்தை தெளிவாக மற்றவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்று வந்துள்ளேன். அதைவிட்டு ஆகவேண்டிய முயற்சிகளை தொடர்ந்து செய்கிறேன்.

இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப் படவேண்டுமென்று கோரி, பலவிதமான நடவடிக்கைகள் எடுத்துள்ளோம்.

எங்களைப் பொறுத்தவரை 96-97ம் ஆண்டுகளில் காணாமல் போனவர்களுக்கும், செம்மணிப் புதைகுழிகளுக்கும் தொடர்பிருக்கிறதா என்பதைப் பற்றித் தான் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறோம். இதைப் பற்றி சர்வதேச ரீதியில் கூடுதல் விளக்கம் அளித்து உலக நாடுகளுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பது தான் எமது அடிப்படை நோக்கம். இதற்கு பல வருடங்கள் செல்லக்கூடும். இருந்தாலும் இதில் தொடர்ந்து வேலைசெய்தால் சிறிலங்காவில் தமிழ் மக்களுக்கு எதிரான படுகொலைகள் எவ்வளவு கடுமையாகவுள்ளன என்பதை உலக நாடுகள் அறிய வாய்ப்பாக இருக்கும் என நம்புகிறோம்.

> *அரசசார்பற்ற நிறுவனங்கள் இயங்கினும் அவை செயற்படுவது சில அரசாங்கங்கள் சார்பாகத்தான். இன்று ஈழத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் காட்டும் அக்கறையை விட, அவை சீனா ஆக்கிரமித்துள்ள திபெத்தில் காட்டும் அக்கறை கூடுதலாக உள்ளது. இதற்கான சரியான பதிலை வரவழைக்க வேண்டியது புகலிட நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் கைகளில் தான் உள்ளது.*

**கேள்வி:- செம்மணி புதைகுழி பற்றி ஏற்கனவே இந்த ஐநா சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளதா, அல்லது நீங்கள் தான் இவ்விடயத்தைக் கொண்டு செல்ல முயன்றீர்களா, இவ்விடயத்தைக் கொண்டு வந்தபோது உலக அரங்கில் எவ்விதமான பிரதிபலிப்புகள் இருந்தன?**

பதில்: இதை முதன் முதலில் சர்வதேசமன்னிப்புச்சபை எடுத்துக்காட்டி இருந்தது. அது பற்றி இன்னமொரு சரியான முடிவு அதாவது அப்புதைகுழிகளைத் தோண்டி, அங்குள்ள சடலங்களை வெளியில் எடுத்து அடையாளம் காணக்கூடிய நிலைமையைக் கொண்டுவரக் கூடிய சூழ்நிலை உருவாக்கப் பட்டுள்ளது

1996-ம், 1997-ம் ஆண்டுகளில் காணாமல் போன 600-க்கும் மேற்பட்ட இளைஞர் - யுவதிகளைப்பற்றி நாம் முறைப்பாடு செய்திருந்தோம். அதற்குப்பின்பு யாழ் குடா நாடு சென்று அது விசாரணை நடாத்தவேண்டுமென்று ஐநாவில் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரதிபலிப்பாக சிறீலங்கா ஜனாதிபதியை

**கேள்வி:- சர்வதேச ரீதியில் சில நாடுகள் குறிப்பாக கொஸ்சோவா பிரச்சினை, பொஸ்னியா பிரச்சினை பற்றி ஐரோப்பிய ஆணைக் குழுக்கள் காட்டுகின்ற அக்கறை, இவற்றை எல்லாம் விட மிகவும் மோசமான நிலையில் உள்ள ஈழத்தமிழரின் பிரச்சினையில் அக்கறை காட்டாமைக்கு ஏதாவது காரணம் உள்ளதா?**

பதில்:- உலகநாடுகள் சர்வதேச மட்டத்தில் இவ் மனித உரிமை மீறல்களைக்கூட ஒரு தன்னல நோக்கு அணுகுமுறையில் தான் பார்க்கின்றன. குறிப்பாக சீனாவில் தியென் அன்மென் சதுக்கத்தில் 200 பேர் கொல்லப்பட்டமையை அமெரிக்க அரசும் அது சார்ந்த நிறுவனங்களும், அதுவே உலகின் பாரிய படுகொலை என பிரச்சாரம் செய்து வருகின்றன.

இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் 20,000 பேருக்கு மேல் 88 - 97இற்கு இடையில் காணாமல் போயுள்ளனர். அந் நிலைமையை எடுத்துக்காட்ட வெட்கப்படுகிறார்கள். சில இடங்களில் அதைப்பற்றி போதிய அக்கறை காட்டுவதும் இல்லை.


**கேள்வி:- சீனா என்று நீங்கள் குறிப்பிடுவது, இலங்கையிலுள்ள மனித உரிமை வாதிகளையா... அல்லது சர்வதேச ரீதியில் உள்ள மனித உரிமை அமைப்புக்களையா?**

பதில்: இலங்கையில் உள்ள மனித உரிமைவாதிகளிடமும் சில குறைபாடுகள் இருக்கின்றன. ஆயினும் உலக ரீதியில் உள்ள மனித உரிமை அமைப்புக்களில் தான் இதனைத் தெளிவாகக் காணக் கூடியதாக உள்ளது. அடிப்படைக் காரணம் என்னவென்றால், அங்குள்ள அரசாங்கம் காட்டும் அக்கறைப் பொறுத்துத்தான் இதனை அவர்கள் செய்கின்றார்கள்.

**கேள்வி:- ஆனால் அரச சார்பற்ற நிறுவனங்கள் (N.G.O) எனும்**

(தொடர்ச்சி 22-ம் பக்கம்)


# ரவி வாகனசேவை



உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

தொலைபேசி: 0148765190 அல்லது 0607622689

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த நவனையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

# தமிழ் அச்சகம்

(மக்கள் கடை முன்பாக)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணிவரை

60, Rue-Louis Blanc, 75010 Paris

Tel & Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்.

தமிழ் அச்சகத்தின் கிளை நிறுவனம் Marcadet Poissonniers இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

20 Rue Labat, 75018 Paris

M°: Marcadet Poissonniers

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!

திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்,

அழைப்பிதழ் மாதிரிகள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

# போரின்காலத்தை நாங்கள் தீர்மானிப்போம்

(விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள் கொழும்பு 'சண்டே லீடர்' வார ஏட்டிற்கு வழங்கிய செவ்வியின் தமிழாக்கம்)



- தமிழ்ச்செல்வன் -

**கேள்வி: ஜெயசிக்குறுய் சமரானது ஈழப்போர் மூன்றின் தீர்க்கமான விடயமாகியுள்ளது. அரசுக்கு மட்டுமல்ல உங்களுக்கும் இது தீர்க்கமான விடயமாகும். ஜெயசிக்குறுய் நடவடிக்கைகள், ஈழப்போரின் எதிர்காலம் தொடர்பான அரசின் நிகழ்ச்சி நிரலையும் விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சி நிரலையும் தீர்மானிக்கும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?**

பதில்: ஆம், இது தான் உண்மை. இரு வழிகளில் தீர்க்கமான நிலையினை ஜெயசிக்குறுய் நடவடிக்கைகள் தீர்மானிக்கின்றன. முதலில் அரசின் வாழ்க்கைக் காலத்தை தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தை ஜெயசிக்குறுய் எமக்குத் தந்தது. இரண்டாவதாக விடுதலைப் புலிகளை கெரில்லா அமைப்பு என்ற ஸ்தானத்திலிருந்து மாற்றி போரை நேருக்குநேர் நின்று நடாத்தக்கூடிய இராணுவமாக அது உருவாக்கியுள்ளது. நாங்கள் அல்ல அரசுதான் இத்தகைய சூழ்நிலையை உருவாக்கியது. தனது நிகழ்ச்சித் திட்டத்தை வெல்லுவதற்காக இப் போர் நடவடிக்கையை அரசு உருவாக்கியது. மேலும் போர் பற்றிய தீர்மானத்தை எடுக்கும் உரிமையை எமக்கு இது பழகப்படுத்தியது. ஒருவர் ஏற்றுக் கொள்கிறாரோ இல்லையோ, நாங்கள் தான் போரின் காலத்தையும் அரசின் வாழ்க்கைக் காலத்தையும் தீர்மானிப்பவர்கள். இந்த யதார்த்தத்திலிருந்து ஒருவரும் தப்பிக்க முடியாது.

**கேள்வி: போரின் மூலம் இப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமென நீங்கள் கருதுகிறீர்களா?**

பதில்: இல்லை இந்தப் பிரச்சினைக்கு தெளிவானதொரு அரசியல் தீர்வு தேவைப்படுகிறது. நாங்களும் இப்பிரச்சினைக்கு போரை நடாத்தாமல் தீர்வைக் காண விழைகின்றோம். ஆனால் இன்றைய சூழ்நிலைகளைப் பார்க்கும்போது இரு தரப்பினருக்கும் உள்ள சில பொதுவான பிரச்சினைகள் இரு தரப்பினரும் ஒரு அரசியல் தீர்வைக் காண்பதற்குத் தடையாகவுள்ளன. நம்பிக்கையின்மையே இப் பிரச்சினையாகும். நாங்களும் அரசும் ஒருவரை ஒருவர் நம்பவில்லை. இதனால் முதலில் இரு தரப்பினருக்குமிடையே பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்ப முயல வேண்டும். ஆனால் இரு தரப்பினராலும் சுயமாக இதனைச் செய்ய முடியாது. இன்றைய நிலை என்னவென்றால், சுயாதீனமான மூன்றாம் தரப்பினர் நம்பிக்கையும் புரிந்துணர்வையும் இரு தரப்பினருக்கிடையேயும் கட்டியெழுப்பலாம். ஆனால் அம் மூன்றாம் தரப்பானது இந்தப் போருடன் சம்பந்தப்படாதவர்களாக இருக்க வேண்டும். பரஸ்பர நம்பிக்கை உருவாக்கப்பட்ட பின்னர் மூன்றாம் தரப்புத் தலையீட்டுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படலாம்.

அடுத்த பிரச்சினை என்னவெனில், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேவையான நம்பிக்கையினை எவ்வளவு தூரம் நேர்மையாக அரசு ஏற்படுத்தும் என்பதேயாகும்.

தமிழர்களுக்கான தீர்வுப் பொதியொன்றை நாங்கள் முன்வைத்துள்ளதாக அரசு கூறுகின்றது. ஆனால் தீர்வுப்பொதி பற்றி குறிக்கோளற்று செயல்படும் அரசு, தமிழ் மக்கள் மீது ஒரு போரை நடாத்துகின்றது. இதற்கான முடிவு தான் என்ன?

தமிழ் மக்கள் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மக்களின் பிரதான வருவாய் என்ன? இது விவசாயமாகும். வவுனியா கிளிநொச்சி பாதையானது அறுவடைக்கான மிகச் சிறந்த பிரதேசமாகும். இது இப்போது கைவிடப்பட்ட பிரதேசமாகியுள்ளது. ஒரு விவசாய வட்டத்திலுள் வாழும் தமிழ் மக்கள் தமது எல்லா உற்பத்திகளையும் இழந்து விட்டனர். அரசு என்னத்தைச் செய்ய விழைகின்றது? ஒரு புறம் தீர்வுப் பொதியைக் காட்டி தமிழர்களை ஏமாற்றுகின்றது. மறுபுறம் தமிழ்மக்கள் துன்புறுத்தப்படுகின்றனர். இது தான் உண்மை நிலை. நாங்கள் உலகத்தின் முன் இவ்வுண்மைகளை முன்வைப்பதற்கு அனுமதிக்கப்பட்டோமா? இல்லை. இது பெரிய வேடிக்கையல்ல. தங்களின் கட்டுப்பாட்டிலுள்ள தகவல் தொடர்பு சாதனங்களைப் பாவித்து விடுதலைப் புலிகளை கொடூரமான பயங்கரவாத இயக்கமாக அரசு குற்றம் சாட்டுகின்றது. அதேவேளையில் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமானால் விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் எனவும் கூறுகிறது. இதுதான் அரசின் பிற்போக்குத்தனம். தமிழ் மக்கள் தொடர்பான விடயத்தில் மட்டுமல்ல விடுதலைப் புலிகள் தொடர்பான விடயத்திலும் இந்த பிற்போக்குத்தனமான கொள்கையை அரசு பின்பற்றுகின்றது. விடுவிக்கப்படும் பிரதேசங்கள் எனச் சொல்லப்படும் பிரதேசங்களில் வாழும் சாதாரண தமிழ் மக்களின் துன்பங்களை எடுத்துப் பாருங்கள். யாழ்ப்பாண நகருக்கு ஒரு தமிழன் செல்ல விரும்பினால் ஐந்து முதல் பத்து வரையிலான இராணுவ காவலரண்களில் அவன் பூரண பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றான். 'இவ் துன்பியல் அனுபவங்கள் அவனிடம் அவமான உணர்வையும் மனோவியல் அசௌகரியங்களையும் ஏற்படுத்தாதா?

விவசாயம் முழுமையாக கைவிடப்பட்டு விட்டது. விவசாயிகள் கைவிடப்பட்டவர்களாகிவிட்டனர். அவர்களைப் பற்றி நீங்கள் முதலில் சிந்திக்க வேண்டும். சாதாரண வாழ்வு நிலைக்கான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். மக்களைப் பற்றி முதலில சிந்திப்போம் பின்னர் தீர்வு தொடர்பான பேச்சுக்கள் பற்றிச் சிந்திக்கலாம்.

(அடுத்த வாரம் தொடரும்)

## வன்னி மக்களுக்கு நிவாரணம் முற்றாகத் தடை மன்னார் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் வந்தால் மட்டுமே நிவாரணம்!

சிறீலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து வன்னியில் தங்கியிருக்கும் இலட்சக்கணக்கான மக்களின் நிவாரணங்களை, சிறீலங்கா அரசு முற்றாகத் தடை செய்துள்ளது. அங்குள்ள மக்கள் மன்னார் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்குள் வந்தால் மட்டுமே நிவாரணம் வழங்கப்படுமென முல்லைத்தீவு, கிளிநொச்சி அரச அதிபர்களுக்கு சிறீலங்காவின் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ். ஒபடசே கடித மூலம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் பிற மாவட்டங்களில் இருந்தும் இடம்பெயர்ந்து வந்து தங்கியுள்ள இம்மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட நிவாரணம் நாற்பது வீதம் குறைக்கப்பட்டிருந்தது. தற்போது கையிருப்பிலுள்ள நிவாரணம் முடிவடைந்த பின்னர் இம்மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படமாட்டாது. இவர்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வந்து தங்கினால் மட்டுமே நிவாரணம் வழங்கப்படும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே நாற்பது வீதம் குறைக்கப்பட்டபோது பாதிக்கப்பட்ட மக்கள் பல போராட்டங்களை நடத்தியுள்ளனர். அரசின் இத்திடீர் அறிவிப்பினால், இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு செல்ல வரும்போது மக்கள் பெரும் நெருக்கடியை என்றுமில்லாதவாறு சந்திக்கவுள்ளனர். ஏற்கனவே மருந்துப்பொருட்களுக்கு விதிக்கப்பட்ட தடையினால் நோய்வாய்ப்பட்டு பலர் உயிரிழந்துள்ளனர். உணவுப் பொருட்களின் தடையினால் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட உள்ளனர். சிறீலங்கா அரசின் இத்தடைக்கு பல மனித உரிமை அமைப்புக்களும், சர்வதேச அமைப்புக்களும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

## யாழில் இரு படையினர் பலி இருவர் காயம்!

யாழ். நெல்லியடி பகுதியில் சிறீலங்கா ஆக்கிரமிப்பு படையினர் மீது மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டதாக பலாலி இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது.

இச்சம்பவம் சனிக்கிழமை 29.08.98 இடம்பெற்றுள்ளது. மரம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர், படையினர் மரத்தின் அருகில் வந்த போது வெடிக்க வைக்கப்பட்டதாகவும், அதன் போதே இரு படையினர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மறுநாள் புத்தூர் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகளின் ரகசிய படையணி தாக்குதல் ஒன்றை நடத்தியதாகவும் இதன்போது இரு படையினர் காயமடைந்ததாகவும் இராணுவ தரப்பு தெரிவித்துள்ளது.


ASCES வகுப்புக்கள்

97, 98 கல்வியாண்டில் எமது மாணவர்கள் 14 ஆசிரியர்களின் கல்விபுகட்டலில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முதன் மாணவர்களாகத் திகழ்கின்றனர்.

Bio, Chimie, Physique, Maths, Anglais, Informatique etc...
13.09.98 ஞாயிறு காலை 10 மணி முதல்

பிரெஞ்சு
12.09.98 சனி பி.ப. 1.30 மணி
15.09.98 செவ்வாய் பி.ப. 3.30 மணி (Paris 18 இல்)
31.08.98 திங்கள் பி.ப. 2.30 மணி (Paris 18 இல்)
13.09.98 ஞாயிறு காலை 10.00 மணி (பேச்சுப் பயிற்சி வகுப்பு)

மீண்டும் சிறுவர்களுக்கான தமிழ், பிரெஞ்சு, கணிதம், ஆங்கில, நடன வகுப்புகள் பிரதி புதன் பி.ப 3.30 மணி முதல்

திங்கள், செவ்வாய், புதன் வகுப்புகள் நடைபெறும் இடம்
2, Rue Eslagnon 75018 Paris MO: Porte de Clignancourt,
Tel: 01.42.57.23.56.

ஆங்கிலம்:
Cambridge - Toefl பரீட்சைகளுக்கும், பாடசாலை மாணவர்களுக்குமான வகுப்புகள்.
13.09.98 ஞாயிறு காலை 10.00 மணி
14.09.98 திங்கள் மாலை 3.30 மணி

கம்பியூட்டர்:
13.09.98 ஞாயிறு பி.ப.3.00 மணி
07.09.98 திங்கள் மாலை 4.30 மணி

சிறுவர்களுக்கான தமிழ், பிரெஞ்சு, கணிதம், ஆங்கில, நடன வகுப்புகள் பிரதி சனி பி.ப. 1.30 மணிமுதல்
வயலின், கேக், அலங்காரம் சனி பி.ப. 2.00 மணி
கராத்தே - திங்கள், புதன் பி.ப. 3.30 மணி

சனி, ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்:
41, Rue Didot, 75014 Paris. M°:- Pernety. Dir. N° 13
Tel: 01.42..57.23.56.



திருமணவிழாக்களா, பூப்புனித நீராட்டு விழாக்களா, பிறந்த நாள் வைபவங்களா, மேடை நிகழ்ச்சிகளா இசை மழையில் நனைந்து மகிழ

ஐரோப்பா புகழ்

பாரிஸ்

ஈழநிலா

தொடர்புகட்கு: இயக்குநர் S.S. தில்லைச்சிவம்
Tel: 0140375669



விலைக்கு வாடகைக்கு

Mo: Poissonnier-இற்கு அண்மையில் 'சான்ட்வி' கடை விற்பனைக்கு / வாடகைக்கு உண்டு.

வாடகை: 3,000 பிராங்குகள்
விலை: 150,000 பிராங்குகள்

இரவு 8 மணிக்கு மேல் 06 14 08 77 02 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்

# சிறையில் அடைப்பு: முதல் முறையாக 'ராக்கிங்' தடுப்புச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது!


(கோவை, செப்.6)

கோவை கல்லூரியில் 'ராக்கிங்' செய்த மாணவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இதன் மூலம் முதன் முறையாக ராக்கிங் தடுப்பு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. கோவை பீளமேடு பி.எஸ்.ஜி.கலை அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வருபவர் சரவணகுமார் (வயது 18). கடந்த 2-ம் தேதி சரவணனை 'ராக்கிங்' செய்து தாக்கினார்கள். இதில் சரவணன் படுகாயமடைந்தார். அவரை கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

இது குறித்து பீளமேடு போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீஸ் கமிஷனர் கே.ராதாகிருஷ்ணன், துணை போலீஸ் கமிஷனர் பெ.கண்ணப்பன் ஆகியோரின் உத்தரவின்பேரில் பாலமுருகன் (பி.எஸ்ஸி.கம்ப்யூட்டர் அறிவியல்), ரமேஷ்(பி.பி.எம்.), முத்து வெங்கடேஷ் (பி.ஏ. இலக்கியம்), கார்த்திகேயன் (பி.ஏ. உளவியல்), மகேஷ்குமார் (பி.ஏ.இலக்கியம்) ஆகிய 5 பேரை போலீசார் கைது செய்தனர். தமிழ்நாடு ராக்கிங் தடுப்புச்சட்டம் 1997 பிரிவு 4-ன் கீழ் தேவையற்ற வகையில் கூடுதல், காயப்படுத்துதல் உட்பட பலவேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இந்தச் சட்டம் முதன் முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கோவை ஜுடிசியல் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் எண் 6-ல் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை 17-ம் தேதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார் இதையடுத்து, அவர்கள் 5 பேரும் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இதற்கிடையில் 5 மாணவர்களையும் கல்லூரி நிர்வாகம் இடைநீக்கம் செய்துள்ளது. ஆனால் மாணவர்கள் கல்லூரியிலிருந்து நீக்க வேண்டும் என்று குறிப்பிட்டு கல்லூரி நிர்வாகத்துக்கு போலீஸ் கமிஷனர் பரிந்துரைத்துள்ளார்.

'ராக்கிங்கில்' ஈடுபடும் மாணவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீஸ் கமிஷனர் உத்தரவிட்டார்.




# 37 பெண்களின் தாலியைப் பறித்த டாக்சி டிரைவருக்கு 111 ஆண்டுகள் சிறை

## மும்பை நீதிமன்றம் தீர்ப்பு

(மும்பை, செப்.6)

37 பெண்களின் தாலியைப் பறித்த டாக்சி டிரைவருக்கு 111 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து மும்பை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மும்பையைச் சேர்ந்தவன் முகம்மது யாகூப். டாக்சி டிரைவர். காரின் இலக்கப் பலகையை மாற்றியதற்காக போலீசார் இவனைப் பிடித்து விசாரித்தனர். விசாரணையில் அவன் பல பெண்களின் தாலியைப் பறித்த விவரம் தெரிய வந்தது. தொடர்ந்து போலீசார் அவனிடம் தீவிரமாக விசாரணை நடத்தினர்.

அப்போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாயின. 37 பெண்களின் தாலியைப் பறித்ததாக அவன் ஒப்புக்கொண்டான். மும்பை குர்லா மற்றும் கன்டிவேலி பகுதிகளில் அதிகாலை நேரங்களில் பெண்களிடம் தாலியைத் திருடியதாகக் கூறினான். மேலும் அடிக்கடி கார் இலக்கத்தை மாற்றி தப்பி வந்தான்.

கடந்த நவம்பர் மாதம் இவன் மீது மும்பை நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை நீதிபதி பட்டேல் விசாரித்தார்.

ஒவ்வொரு பெண்ணிடமும் தாலியைப் பறித்த குற்றத்திற்காக 3 வருடம் சிறைத் தண்டனையும் ரூ.1000 அபராதமும் விதித்தார். 37 பெண்களிடம் தாலியைப் பறித்த குற்றத்துக்காக மொத்தம் 111 ஆண்டு சிறைத் தண்டனையும் 37 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பு கூறினார்.

இந்தத் தீர்ப்பினால் மும்பை நீதிமன்றத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இதுபோன்ற திருட்டுக் குற்றத்திற்காக 111 ஆண்டுகள் சிறைத் தண்டனை இந்தியாவில் எந்த ஒரு குற்றவாளிக்கும் இதுவரை அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பா.ம.க.வுக்கு மாங்கனிச் சின்னம்

(சென்னை செப்.7)

தமிழகம் பாண்டிச்சேரி ஆகிய இரண்டு மாநிலங்களிலும் பாமகவுக்கு இனி மாங்கனி சின்னம்தான்.

கடந்த தேர்தலில் தமிழகத்தில் மாங்கனி சின்னத்திலும், பாண்டிச்சேரியில் யானை சின்னத்திலும் பாமகபோட்டியிட்டது. தமிழகத்தில் யானைச் சின்னம் பகுஜன் சமாஜ் கட்சிக்கு வழங்கப்பட்டு விட்டது.



இதையடுத்து பா.ம.க.வுக்கு சின்னம் விசயத்தில் சின்னப் பிரச்சினை ஏற்பட்டது. இரு மாநிலங்களிலும் ஒரே சின்னத்தில் போட்டியிடுவது தான் குழப்பத்தைத் தவிர்க்கும் என்று முடிவுக்கு பா.ம.க. வந்தது. அதன் படி பாண்டிச்சேரியிலும் எங்கள் கட்சிக்கு மாங்கனிச் சின்னம் வழங்கும்படி தேர்தல் ஆணையத்தை இக்கட்சி கேட்டுக்கொண்டது. இதை ஏற்று பாண்டிச்சேரியிலும் பா.ம.க.வுக்கு மாங்கனிச் சின்னத்தை ஒதுக்கி தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

35 % முதலீடு - 65 % சேமிப்பு


எமது தொலைபேசி அட்டைகளை விற்பதன் மூலம் அதிக லாபம் பெறுங்கள்!

இலங்கை 45 நிமிடம்
இந்தியா 45 நிமிடம்
கனடா 100 நிமிடம்
லண்டன் 100 நிமிடம்
ஐரோப்பா 70 நிமிடம்

King Telecom ஸ்தாபனத்தின் கிளை நிறுவனம் ஜேர்மனியில் ஆரம்பம்!

ஒக்டோபர் மாதம் முதல் ஆரம்பிக்கவிருக்கும் எமது கிங் தொலைபேசி அட்டைகளை விற்பதற்கு விநியோகஸ்தர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
33–144629396



92, Rue de Bellville
75020 Paris (M°: Pyrénees)
Tél.: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96

33, Place de Général de Gaulle
60100 Creil (Place de la Gare)
Tél.: 03 44 55 41 59 Fax: 03 44 55 42 51

KING Telecom

## உலகத்திலேயே 9வது ஊழல் நாடு இந்தியா!

# ஊழல்வாதிகளை விடமாட்டேன்

### - லஞ்ச ஒழிப்புத்துறை ஆணையராக பதவியேற்ற தமிழர் சபதம்

உலகின் ஊழல் நாடுகளில் இந்தியா 9வது இடத்தை வகிக்கிறது. இதனால் ஏற்பட்டுள்ள அவப் பெயரை நீக்கி ஊழல் வாதிகளை ஒழித்துக்கட்டுவேன் என்று லஞ்ச ஒழிப்புத்துறை புதிய ஆணையர் 'விட்டல்' சபதம் எடுத்து உள்ளார். சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைந்து அவர்களால் தப்பிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த ஜெயலலிதாவும், அ.தி.மு.க. அமைச்சர்களும் ஊழல் செய்து பல வழக்குகளில் சிக்கி இருப்பது தெரிந்ததே.

இதனால் தனிநீதிமன்ற படிகளில் அவர்கள் ஏறி இறங்கி வருகிறார்கள். அதே சமயத்தில் இந்த தனிநீதிமன்ற நியமனத்தை எதிர்த்தே ஜெயலலிதா வழக்கு தொடர்ந்து உள்ளார். இதனால் ஜெ.ஊழல் வழக்குகளில் இன்னும் விசாரணை முடிக்கப்படாமல் தீர்ப்பு கூறப்படாத நிலை உள்ளது.

இதேபோல பீகார் முதல் அமைச்சராக இருந்த லல்லு பிரசாத் யாதவ் மீதும் ரூ.1000 கோடிக்கு மேல் கால்நடைத் தீவன ஊழல் வழக்கு உள்ளது. இதை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. மேலும் பல ஊழலில் சிக்கிய மத்திய அமைச்சர்கள் மீதும் விசாரணையை சி.பி.ஐ. முடுக்கி விட்டு உள்ளது.

இதுதவிர வங்கி ஊழல், பங்கு சந்தை ஊழல் போன்றவற்றையும் சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. இந்த நிலையில் லஞ்ச ஊழல் தடுப்புச்சட்டத்தின் கீழ் பதிவான இந்த ஊழல் வழக்குகளில் சி.பி.ஐயின் செயல்பாடு எப்படி இருக்கிறது என்று மேற்பார்வையிட தலைமை கண்காணிப்பு ஆணையராக 'விட்டல்' என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டார். 1960-ம் ஆண்டு ஐ.ஏ.எஸ். பட்டியலில் இடம் பெற்ற இவர் ஒரு தமிழர். இவரது பூர்வீகம் தமிழ்நாடு தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

இவரைப் பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி, மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் சரத்பவார் அடங்கிய குழு தேர்ந்து எடுத்தது. இவர் வியாழக்கிழமை பதவி ஏற்றார்.

அதிபர் மாளிகையில் நடந்த விழாவில் விட்டலுக்கு அதிபர் கே.ஆர்.நாராயணன் பதவிப் பிரமாணமும், இரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் துணை அதிபர் கிருஷ்ணகாந்த், உள்துறை அமைச்சர் அத்வானி மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

லஞ்ச ஒழிப்பு தலைமை ஆணையராக பொறுப்பு ஏற்று உள்ள என். விட்டல் தனது பணி பற்றி கூறியதாவது:

உலகில் உள்ள ஊழல் நாடுகளில் இந்தியா 9வது இடத்தைப் பிடித்து உள்ளதாக ஜெர்மனி ஏஜென்சி ஒன்று கூறுகிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். என்னுடைய முதல் பணியே லஞ்ச ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஊழல் வழக்குகளில் சி.பி.ஐயின் செயல்பாடு எப்படி இருக்கிறது என்பதை மேற்பார்வையிடுவது தான். இந்தியாவில் பரவிவரும் இந்த ஊழல் விதைகளை ஒழித்துக்கட்டுவதே எனது முன்னுரிமை பணியாக இருக்கும். ஊழலைப் பற்றி உள்ள நிலை முற்றிலும் மாற்றப்பட வேண்டும்.

'ஒரு மனிதன் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் வரை அவன் குற்றவாளி அல்ல' என்று சட்டக்கருத்து உள்ளது. இந்த சந்து பொந்துகளால் ஊழல்வாதிகள் வெளியே உல்லாசமாக உலாவி வருகிறார்கள். இதற்கு ஒரு முடிவு கட்டப்பட வேண்டும்.

லஞ்ச ஊழல் ஒழிக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட சட்டத்தை எப்படி வெற்றிகரமாக நிறைவேற்றுவது என்பதற்கு நான் முன்னுரிமை அளிப்பேன். அரசியல் ஊழலை ஒழிக்க இத்தச்சட்டம் வகை செய்யும். சி.பி.ஐ. செயலாக்கப் பிரிவு இயக்குனர்கள் நியமிப்பது தொடர்பாக விரைவில் கலந்து பேசி முடிவு எடுப்போம்.


ஊழலை ஒழிப்பதற்கு தேவையான ஆலோசனைகளைக் கேள்விப் பட்டியலாக உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி பெற்றுக் கொள்வேன். ஊழல் வளருவதற்கு நடவடிக்கைகள் தாமதம் ஆவது, சேவை மனப்பான்மை இன்மை ஆகியவைதான் காரணம். இந்த அமைப்புக்கு இதர உறுப்பினர்கள் நியமிப்பது பற்றி அரசுடன் கலந்து பேசுவேன். இவ்வாறு அவர் கூறினார்.

ஜெயலலிதா உள்ளிட்ட பல அரசியல் வாதிகள் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களில் தலையிட மாட்டோம் என்று ஏற்கனவே வாஜ்பாய் அரசு அறிவித்துள்ளது.

## அக்னி 2-வது ஏவுகணை சோதனை விரைவில் நடத்தப்படும்! ஜார்ஜ் பெர்னாண்டஸ் அறிவிப்பு!!

(புதுடில்லி, செப்ட்.)

இரண்டாவது அக்னி ஏவுகணை சோதனை விரைவில் நடத்தப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.



பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் நேற்று முன்தினம் டில்லியில் நிருபர்களிடம் கூறியதாவது:

மிகவும் சக்தி வாய்ந்த இரண்டாவது அக்னி ஏவுகணை சோதனை விரைவில் நடத்தப்படும். அக்னி ஏவுகணை 2,500 கிலோ மீட்டர் தூரம் செல்லும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. முற்றிலும் இந்திய தயாரிப்பிலேயே உருவான இந்த ஏவுகணை, பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சியிலேயே உருவானது. முதலாவது சோதனை செய்யப்பட்ட அக்னி ஏவுகணை உற்பத்தியில் முழுமையாக ஈடுபட்டு வெற்றிகரமாக முடித்துள்ளார்கள். பாரதிய ஜனதா ஆட்சிக்கு முன்பு ஐக்கிய முன்னணி ஆட்சியின் போது இரண்டாவது அக்னி ஏவுகணை சோதனை விரைவில் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டது. இப்பொழுது தயார் நிலையிலுள்ள அக்னி ஏவுகணை முன்பு சோதனை செய்யப்பட்டதை விட 1000 கிலோ மீற்றர் கூடுதலாக செல்லக்கூடிய தன்மை வாய்ந்தது. தேவைப்பட்டால் 3000 கிலோ மீற்றர் தூரம் செல்லக்கூடிய அளவிலும் தயாரிக்கப்படும். முன்பு முதலாவது அக்னி ஏவுகணை மூன்று தடவை சோதனை செய்யப்பட்டது. 1994-ம் ஆண்டு நரசிம்மராவ் ஆட்சியில் முதலாவது அக்னி ஏவுகணை சோதனை செய்யப்பட்டது.

இரண்டாவது அக்னி ஏவுகணை உரிய நேரத்தில் சோதனை செய்யப்படும் தேதி விரைவில் அறிவிக்கப்படும். அமைப்பு, தொழில்நுட்பம் பற்றி இராணுவத்துறை மூலம் தெரிவிக்க இயலாது. மத்திய அரசு சோதனை நடத்த அங்கீகாரம் அளித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## சோனியாகாந்தியுடன் மோதல் இல்லை - சரத்பவார்



மத்தியப் பிரதேச மாநிலத்துக்கு சென்ற நாடாளுமன்ற காங்கிரஸ் தலைவர் சரத்பவார், நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

கட்சித் தலைவர் சோனியாவுக்கும் எனக்கும் மோதல் இருப்பதாக வெளியான செய்தியில் உண்மை இல்லை. இது போன்ற செய்திகள் சில பத்திரிகைகளில் மட்டுமே வந்து உள்ளது. அதில் உண்மை எதுவும் இல்லை.

மத்தியில் உள்ள வாஜ்பாய் அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் காங்கிரஸ் கட்சி ஈடுபடாது. ஆனால் இந்த அரசு தானாகவே கவிழும்.

வெளிநாடுகள் வாஜ்பாய் அரசு மீது நம்பிக்கை வைக்கவில்லை. இதனால் வெளிநாட்டு முதலீடு பெறும் அளவு குறைந்து உள்ளது.

மத்தியபிரதேச மாநிலம் பச்மாரி என்ற இடத்தில் காங்கிரஸ் கட்சியின் 3 நாள் முகாம் நடக்கிறது. ஆலோசனைகள் வழங்கப்பட உள்ளது. அது தவிர தற்போதைய அரசியல் சூழ்நிலை, பொருளாதார நிலை, விவசாயம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் பற்றியும் ஆலோசனை நடக்கிறது. இவ்வாறு சரத்பவார் கூறினார்.

## வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

இளையராஜா. இருபதாண்டுகளுக்கு முன் பண்ணைபுரத்திலிருந்து புறப்பட்ட இந்த இசை மேகத்தின் சாமைமழைக்கு இன்னமும் ஓய்வில்லை.

பரிசுகளும், விருதுகளும் அடுக்கடுக்காய் இவரை முற்றுகையிட்ட நிலையில்..., சிறப்புகளுக்கெல்லாம் சிகரமாய்... சிம்பொனி இசை.

வடபுலத்தை மட்டுமல்ல, அகில உலகத்தையும் தமிழ்த்திரை இசையின் மீது கவனம்கொள்ள வைத்த இசைஞானிக்கு...

இப்போது அரசாங்க அங்கீகாரமும் கிடைக்கப்போகிறது. கலைஞர்களுக்கு வழங்கப்படும் நியமன ராஜ்யசபா எம்.பி.பதவியை, இளையராஜாவுக்குப் பெற்றுத்தரும் முயற்சியில் தீவிரமாயிருக்கிறார், மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் தலித் எழில்மலை.

— 01.09.98 நக்கீரன் இதழில்

உள்ளூர் காவல் நிலையங்களால் கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்த முடியாது. தமிழ் நாட்டில் சுமார் 58,000 கிராமங்கள் உள்ளன. ஆனால் இருப்பதோ 1300 காவல்நிலையங்கள் தான். சராசரியாக 45 கிராமங்களுக்கு ஒரு காவல் நிலையம் என்ற அளவில்தான் நம் காவல்துறை செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இவர்களால் எதைக் கண்காணிக்க முடியும்.

— 02.09.98 தமிழன் எக்ஸ்பிரஸ் இதழின் தலையங்கம்.

மண்ணிலிருந்து உணவினை விளைவித்து வாழ்ந்த மனிதன் மண்ணையே மருந்தாகவும் பயன்படுத்தி வாழ்ந்து வந்தான். இன்றும் கிராமப்புறங்களிலேயே வாழும் பாமரமக்கள் சோப்பு, சீயக்காய்த்தூள் இவைகளுக்குப் பதிலாக மண்ணைத் தேய்த்துக் குளிக்கும் வழக்கம் உள்ளது. ஏன் துணிகளுக்குக்கூட மண்ணைத்தேய்த்து பின்பு நீரில் அலசி பிழிந்து உலர்த்தி உடுத்தி வருகிறார்கள். இந்த மண்ணில் உயிரினங்கள் பிறந்து மண்ணை ஆண்டு, மண்ணோடு கலந்து விடுகின்றன. மனிதனும் அவ்வாறே. இதனை நடைமுறைப் படுத்துவது இந்த இயற்கை 'மண்சிகிச்சை முறை' நீர்சிகிச்சை முறையைப் போன்றே, மண்ணும் நோய்களைத் தீர்க்கும் வல்லமை பொருந்தியதால் இன்றைக்கு மண் சிகிச்சைமுறை மருத்துவ உலகம் வியக்கும்படி சாதனைகள் செய்துவருகின்றது.

— செப்.98 ஹெல்த்.

பேரானந்தத்திற்கு என்னவழியென்று கேட்டுப்பாருங்கள். ஐந்து மாதப்பிரதமர் பதவிவகித்த அனுபவத்தில் 'அம்மா இல்லாத வாழ்க்கை' என்பார். போதுத்தேர்தலில் அவர் வெற்றிபெற்றார் என்று அவர் அறிவிக்கப்பட்டதில் இருந்தே 'சுதாசித்த சுதாபித்த ஜெயலலிதா' அவரை பாடாய்ப் படுத்தி எடுக்கிறார்.


— 02.09.98 இந்தியா டுடே கட்டுரையில்.

உங்கள் மீது நிலுவையில் உள்ள வழக்குகள் நிரூபணமானால், கட்சித் தலைமையிலிருந்து ராஜினாமா செய்வீர்களா...?

அதற்குக்கு மீசை முளைக்கப் போவதுமில்லை; உங்கள் ஆசை நிறைவேறப் போவதுமில்லை.

வாசகர் ஒருவரின் கேள்விக்கு ஜெயலலிதா பதில்.

— 02.09.98 ஜூனியர் விகடன்.




நன்றி: தினமணி




ரஷ்யா

## புதிய அரசிற்கு அதிக அதிகாரங்கள்

சோவியத் யூனியன் உடைந்து அப்பிராந்தியத்தில் புதிய நாடுகள் உருவாகியதன் பின், ரஷ்ய கூட்டமைப்பு, மிகப்பெரும் அரசியல் பொருளாதாரச் சிக்கல்களை இம்முறை சந்தித்துள்ளது. இதிலிருந்து விடுபட முன்னாள் பிரதமர் 'விக்டர் செர்னமைடின்' மீண்டும் பிரதமராக ஜனாதிபதி ஜெல்சினால நியமிக்கப்பட்டார். அனுபவம் வாய்ந்த புதிய பிரதமரின் நியமனத்தை பாராளுமன்றத்தில் பெரும்பான்மையாயுள்ள கம்யூனிஸ்ட் கட்சியினர் ஏற்றுக்கொள்ள மறுத்து வருகின்றனர்.

இவரது நியமனத்தை ஏற்றுக்கொண்டு நாட்டைப் பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து விடுவிக்க எதிர்க் கட்சியினர் உதவவேண்டும் அவர்களும் அரசில் பங்குகொள்ள வேண்




டும் என ஜனாதிபதி ஜெல்சின் கோரியுள்ளார். இவர் கடந்த திங்கள் அன்று பாராளுமன்றத் தலைவர்களைத் தனித்தனியாக அழைத்து பேச்சுக்களை மேற்கொண்டார். இதற்கிடையே தொலைக்காட்சியில் தோன்றிய புதிய பிரதமர், 'நாம் கடந்த இரண்டு வாரங்களாக அரசாங்கமில்லாது இருக்கின்றோம்'.


ரஷ்யா இருக்கிறது ஆனால் தலைவர் இல்லை. இரண்டு கைகளும் கட்டப்பட்ட ஒரு பிரதமர் தற்போதைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா? என்னால் நிச்சயமாக முடியாது. எமக்குத் தேவை ஓர் அணி. தொழிற்படக்கூடிய ஒரு அரசாங்கம். ஆனால் எம்மிடையே அவையில்லை. இவற்றையெல்லாம் தீர்ப்பதற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். நாட்டின் பொருளாதாரச் சிக்கல்களை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர திட்டங்களையும் தீட்டியுள்ளோம். அவை நடைமுறைப் படுத்தப் படும் பட்சத்தில் இதுவரை காலமும் ஓய்வூதியம், சம்பளங்கள் வழங்கப்படாத தொழிலாளர்கள் அவற்றைப் பெறுவார்கள். பொருட்களின் விலை ஸ்திரம் அடையும். இதில் சர்வதேசப் பங்களிப்பும் எமக்கு அவசியமாகின்றது எனத் தனது உரையில் தெரிவித்தார்.

ஆசியா

# இந்திய - பாக் பிரதமர்கள் இவ்வாரம் சந்திப்பு

பாகிஸ்தானிப் பிரதமர் நவாஸ் செரிப்பும், இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயும் இம்மாதம் நியூயோர்க்கில் ஐநாவின் பொதுச்சபையில் உரையாற்றவுள்ளார்கள்.





இச் சமயம் இவ்விரு தலைவர்களுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் அங்கு இடம் பெறும் என்றும், இந்தியப் பிரதமர் சார்பான செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக UNI செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. இது பற்றிய அறிவிப்பு இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் பேச்சாளரான பிரஜேஸ் மிஸ்ரா கடந்த ஞாயிறு அன்று வெளியிட்டார். அன்று செய்தியாளர்களைச் சந்தித்த போதே மிஸ்ரா, இம் மாதம் 23ம் திகதி நியூயோர்க்கில் இச் சந்திப்பு நடைபெறும் எனக் கூறியுள்ளார்.

கடந்த மே மாதம் இரு நாடுகளும் மேற்கொண்ட தொடர் அணுச் சோதனைகளின் பின் தேக்கமடைந்த இரு நாட்டு உறவுகளையும் சரி செய்யும் வகையில் பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இதன்படி 2 மாதங்களின் முன் சிறீலங்காவில் நடந்த பிராந்திய உச்சி மாநாட்டின் போது இரு தலைவர்களும் சந்தித்துக்கொண்டனர். ஆனாலும் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.


இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான முக்கிய பிரச்சினையாக இருந்து வருவது காஷ்மீர் பிரச்சினையே.

இந்தியாவும் பாகிஸ்தானும் 1947ம் ஆண்டு சுதந்திரமடைந்த பின் இக் காஷ்மீர் பிரச்சினைக் காகவே 2 முறை மோதிக் கொண்டுள்ளன. 1989ம் ஆண்டின் பின் காஷ்மீர்ப் பிரிவினைவாதிகளுக்கும் பாதுகாப்புப் படைகளுக்கும் இடையிலான மோதல்களில் 16,000 பேர் வரை கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் காஷ்மீர் மாநிலமே முஸ்லீம்களைப் பெருந்தொகையாகக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

SKM TELECOM
மேலதிக தொடர்புகளுக்கு முகுந்தன் (Raja) 01 42 05 19 09
வினியோகஸ்தர்கள் தேவை:




மிகவிரைவில்
லண்டன்,
சுவிஸ், ஜேர்மனி,
நோர்வே, இத்தாலி
நாடுகளில்




SKM NET TELECOM

SKM TELECOM
24 RUE DU DEPARTEMENT
75018 PARIS,
Tél: 01 42 05 19 09
Fax: 01 42 05 21 42
/ M°: La chapelle
பாரீஸ் முத்துமாரியம்மன் கோவிலுக்கு அருகாமையில்

| | | |
|---|---|---|
| இலங்கை | 62 | Mn |
| இந்தியா | 50 | Mn |
| பாக்கிஸ்தான் | 50 | Mn |

SKM TELECOM
VEDERSGADE 13
7000 FREDERICIA, DANEMARK
Contact: Seelan
Tél/ Fax: 00 45 64 42 29 63
Mobil: 00 45 21 60 83 35

ஆபிரிக்கா

# கொங்கோ (சயிர்) அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பம்


மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசின் தொடர்ந்து வரும் பிரச்சனைகளை முடிவுக்குக் கொண்டு வரும் இறுதி முயற்சியாக ஆபிரிக்கத் தலைவர்களை உள்ளடக்கிய உச்சி மகாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டும் என்றும், அதில் தற்போதைய அரசிற்கெதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கொங்கோ ஜனநாயகக் கூட்டணியும் அழைக்கப்பட்டு, முடிவுகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் கடந்த வாரம் தென்னாபிரிக்காவில் முடிவடைந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. இதன்படி கொங்கோ ஜனநாயகக் குடியரசின் தலைநகர் 'கின்சாசா'வில் 07.09.98 அன்று இவ்வுச்சி மாநாடு ஆரம்பமாகியது. ஆனாலும் கொங்கோ ஜனநாயகக் கூட்டணியின் பிரதிநிதிகள் விமான இயந்திரக் கோளாறு காரணமாக வந்து சேராதநிலையில், மாநாடு தாமதமாகி வருகின்றது.



ஆகஸ்ட் 2ம் திகதி கொங்கோவின் கிழக்குப் பிராந்தியத்தில் ஆரம்பமாகிய அரச எதிர்ப்பு மற்றும் 'சிம்பாவே' 'அங்கோலா' 'நமீபியா' போன்ற நாடுகளின் உதவிப்படையினரின் முயற்சியால் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து முன்னேறிய அரச எதிர்ப்புப்படையினர், தலைநகருக்குள் நுழைகையிலேயே உதவிப் படையினர் தாக்குதலை நடாத்தி அவர்களது முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தினர். ஆனாலும் நாட்டின் கிழக்குப்பகுதி தொடர்ந்தும் புரட்சிப் படைகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது.

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் தலைவர் லோரண்ட் கபிலா உகண்டாவும், ருவண்டாவும் கொங்கோவின் கிழக்குப் பகுதியில் போராட்டம் நடாத்தும் ரூட்சி இனப் போராளிகளுக்கு ஆதரவாகப் படைகளை அனுப்பியுள்ளதாக குற்றம் சாட்டினார். ஆனால் இவ்விரு நாடுகளும் இக்குற்றச்சாட்டினைத் தொடர்ந்து மறுத்து வந்துள்ளன. 1996ம் ஆண்டு மொபூட்டுவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக கபிலா தலைமையில் யுத்தம் ஆரம்பித்த பொழுது, இவ்விரு நாடுகளும் தமது ஆதரவையும் படை உதவியையும் அவருக்கு வழங்கியிருந்தன ஆனால் ஆட்சிக்கு வந்த கபிலா ரூட்சி இன மக்களைப் பாதுகாக்கத் தவறி விட்டார் என்றும், அவரது ஆட்சிக்காலத்தில் கொங்கோ முன்னர் இருந்த அமைதியையும் கூட இழந்து விட்டது என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

இவ்வாறான தொடர்ந்து ஆரம்பமான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியை ஆபிரிக்கத்தலைவர்கள் மேற்கொண்டார்கள். இதன்படி பரந்த அடிப்படையிலான சகல பிரிவினரையும் உள்ளடக்கிய அரசு அமைக்கப்பட வேண்டும் என்றும் முன்னர் திட்டமிட்ட தேர்தல்களை உடன் நடாத்த வேண்டுமென்றும் அரச எதிர்ப்பாளர்கள் தரப்பிலிருந்து கூறப்பட்ட நிபந்தனைகளை ஆபிரிக்கத் தலைவர்கள் பரிசீலித்தனர். தற்போது கின்சாவில் ஆரம்பமாகியுள்ள மாநாட்டில் சாம்பிய ஜனாதிபதி பிரெடெரிக் சிலுபா (Shiloops) உட்பட பல்வேறு ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.




ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான் தனது சார்பில் ஒரு விசேட தூதுவரையும் அங்கு அனுப்பியுள்ளார்.

இவ்வுச்சி மாநாட்டில் உடனடியான யுத்த நிறுத்தமொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் இரு தரப்பினரும் தொடர்ந்து பேச்சுக்களை மேற்கொள்ளவேண்டு மென்றும் கூறப்பட்டுள்ளது. அதே வேளை தென்னாபிரிக்காவை பிரதானமாகக் கொண்ட சுமார் 26ஆயிரம் அமைதிப்படையினரை அங்கு அனுப்பிவைப்பது பற்றியும் ஆராயப்பட்டது. இதேவேளை உகண்டாவின் முசேவேனி, 'கொங்கோவில் ஜனநாயகரீதியான பிரச்சினைகள் ஏற்படுமாக உகண்டு நாட்டின் பிரச்சனையுமே அறுநால்! அங்கு ஜனநாயக முறை உறுதியாக ஏற்படுத்தப்பட்டால் பிரச்சனைகள் முடிந்து விடும். அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதில் தனது நாடு பூரண ஒத்துழைப்புக்களை வழங்கும்' எனக் கூறியுள்ளார்.

அமெரிக்கா

# விமானக் கறுப்புப்பெட்டி கண்டுபிடிக்கப்பட்டது மேலதிக சோதனைக்காக ஒட்டாவாவில்

அமெரிக்க ஜோன் எவ். கெனடி விமானநிலையத்தில் இருந்து ஜெனிவாவிற்கு புறப்பட்ட 'சுவிஸ் எயார்' விமான நிறுவனத்திற்கு சொந்தமான MD111 விமானம் கடந்த புதன் கிழமை இரவு கடலில் விழுந்து நொருங்கியது தெரிந்ததே. நியூ யோர்க்கில் இருந்து புறப்பட்டு 16 நிமிட நேரத்தில் விமானத்தின் விமானிகளின் பகுதியில் (கொக்பிட்) புகை கிளம்புவதாகவும் பயணத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றும் விமானி கனேடிய விமானக்கட்டுப்பாட்டு நிலையத்திற்கு தெரிவித்துள்ளார். தாம் உடனடியாக தரையிறக்க கிழக்கு கனேடிய HELIFAX விமானம் ராடார் திரைகளில் இருந்து காணாமல் போனது. கனடாவின் கிழக்கில் உள்ள உல்லாசப்பயணிகள் தீவான nova scotia விலிருந்து சில மைல்கள் தொலைவில் இவ்விமானம் கடலில் விழுந்து நொருங்கியுள்ளது.

விபத்துக்குள்ளாகிய விமானத்தில் 215 பயணிகளும் 14 விமான சிப்பந்திகளும் இருந்துள்ளனர். விமானம் விபத்துக்குள்ளாகியது அறிந்தும் உடனடியாக கனடிய மீட்புப் பணிகள் ஆரம்பமாகின. ஆனால் எவரையும் உயிருடன் காப்பாற்ற முடியவில்லை. அக்கடல் பிராந்தியத்தில் இருந்த கடுமையான காலநிலையால் விமானத்தின் பயணிகளை கண்டு பிடிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் தாமதமடைந்தன. பல நாடுகளின் மீட்புக்குழுவினர்களும், விசாரணைக் குழுவினர்களும் 'பெக்கிஸ் கோவ்' பகுதிக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் கனடிய அரசின் வேண்டுகோளுக்கு இணங்க 1996ம் ஆண்டு TWA விமானம் விபத்துக்குள்ளானபோது ஆழ் கடல் ஆய்வில் மேற்கொண்டு சிதைவுகளைக் கண்டு பிடித்த USS GRAPPLE எனும் கப்பல் 30 ஆழ்கடல் சுழியோடிகளுடன் விபத்து நடந்த பிரதேசத்தில் தேடுதல் முயற்சிகளை கடந்த சனி காலை ஆரம்பித்தது.

தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இக்குழு விமானத்தின் 2 கறுப்புப் பெட்டிகளில் ஒன்றினை ஞாயிறு காலை கடலிலிருந்து 8 km தொலைவில் கண்டெடுத்தது. இக் கறுப்புப்பெட்டி பின்னர் மேலதிக சோதனைகளுக்காக கனடிய தலைநகர் ஒட்டாவாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இப்பகுதியிலேயே விமானத்தின் முன்பகுதியை உள்ளடக்கிய பாகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விமானம் விபத்துக்குள்ளான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில் இக்கறுப்புப்பெட்டி கண்டு பிடிக்கப்பட்டது, விசாரணைகளில் திருப்பத்தை ஏற்படுத்தலாமென நம்பப்படுகின்றது.

ஈராக்

# ஐ.நாவின் நிலைப்பாட்டை வன்மையாகக் கண்டிக்கும்

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் ஈராக்கின் மேல் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை தளர்த்தும் ஐ.நா சபையின் திட்டங்களை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும், இது பற்றிய கூட்டுத் தீர்மானம் ஒன்றினை ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

இந்நாடுகளின் நடவடிக்கைகள் நீதியற்றது என்றும் அராஜகமானது என்றும் ஈராக் குற்றம் சாட்டியுள்ளது. ஈராக் கடந்த சில மாதங்களாகவே பாதுகாப்புச் சபையுடன் பொருளாதாரத் தடை சம்பந்தமான பேச்சுக்களை மேற்கொண்டு வருகின்றது இப்படியான வேளையில் இவ்விரு நாடுகளும் ஈராக்கிற்கு எதிராக மேற்கொண்டுள்ள நடவடிக்கை முறையற்றது என 'பாக்தாத்' திலிருந்து வெளிவரும் 'அல் - தாவ்ரா' எனும் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் கூறியுள்ளது. தொடர்ந்து அச்செய்தியில் இவ்விரு நாடுகளும் மேற்கொள்ளும் முயற்சியானது ஈராக்கிற்கும் அதன் தலைமைத்துவத்திற்கும் அதன் மக்களிற்கும் எதிரான நடவடிக்கை என்றும், ஈராக்கின் தார்மீகக் கோரிக்கைகளுக்கு எதிரானது என்றும் கூறியுள்ளது.

இதேவேளை ஈராக்கின் உதவிப் பிரதமர் 'தாரிக் அசீஸ்' கடந்த புதன் அன்று பாதுகாப்புச்சபை, பிரித்தானிய அமெரிக்க தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் தமது நாடு வேறு புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முயலும் எனக் கூறியுள்ளார்.

கம்போடியா

# கம்போடியா பிரதமரின் வாசஸ்தலத்தில் கைக்குண்டு வீச்சு!

கம்போடியாவின் பிரதமர் 'குண்சென்'னின் வாசஸ்தலத்தில் கடந்த திங்களன்று கைக்குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன. மோட்டார் சைக்கிளில் வந்ததாகக் கூறும் 2 இளைஞர்கள் கம்போடியா பிரதமர் குன் செனனின் வாசஸ்தலத்தில் மீது கைக்குண்டுகளை வீசித் தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதல் நடைபெற்ற சமயம் குன்சென் அங்கு இருக்கவில்லை. வடபகுதி நகரமான 'சியாம் ரீப்பில்' எதிர்கட்சிப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையிலேயே தலைநகர் 'பனாம்பென்'னில் இக்குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது.

கடந்த ஜூலை மாதம் கம்போடியாவில் இடம்பெற்ற பாராளுமன்றத்தேர்தல்களைத் தொடர்ந்து எதிர்கட்சியினருக்கும், குன்செனுக்கும் இடையே முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. தலைநகரில் எதிர்க்கட்சியினர் தொடர்ந்தும் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களிலும் மறியல் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தனது இல்லம் மீது நடாத்தப்பட்ட குண்டு வீச்சின் பின் பத்திரிகையாளரைச் சந்தித்த கம்போடியா பிரதமர், தொடரும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஒரு முடிவினைக் கொண்டுவரும் வேளை தோன்றியுள்ளதென்றும், தனது பொறுமையைச் சோதிக்கும் நடவடிக்கை இது வென்றும் கூறினார்.

தலைநகரின் பொலிஸ் பிரமுகர்கள் இதுபற்றிக்கூறும் போது, மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் 12 அடிகள் உயரமான பிரதமரின் வீட்டு மதிலுக்கு மேலாக குண்டுகளை எறிந்துள்ளனர். 2 குண்டுகள் வெடித்துள்ள நிலையில் 3வது குண்டு வெடிக்காத நிலையில் வீட்டு வளாகத்திலுள் கண்டு பிடிக்கப்பட்டது.

இக் கைக்குண்டு வீச்சுடன் தொடர்புடையவர் கண்டுபிடிக்கப் படுமிடத்து, அவர் சம்பந்தப்பட்ட அமைப்பின் மேல் கடும் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் அவர் மேலும் கூறினார்.

2 வாரங்களுக்கு முன் தேசிய தேர்தல் ஆணைக்குழு தலைமைக் காரியாலயத்தின் மீது குண்டு வீசப்பட்டதில் ஒருவர் இறந்தார் இதேபோன்று கடந்த வருடம் தேசிய சபையின் முன் நடாத்தப்பட்ட குண்டு வீச்சில் 16 பேர் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

தேவை
Bombay Palace Restaurant (Nice)
குசினி, தந்தூரி வேலை தெரிந்தவர் தேவை.
தொடர்புகட்கு:- 04 93 56 12 20

குடிபெயர்ந்தோர் குடியேறியோர் உரிமைக்கான

# மாபெரும் யாத்திரைப் பேரணி

## 20.09.98 கேல்ண் நகரில்
## இறுதிநாள் நிகழ்ச்சிகள்

14.08.98 பிறேமன் நகரில் ஆரம்பித்த பேரணி, 40 நகரங்களுக்கூடாக 5 வாரகாலமாக தொடர்ச்சியாக நகர்ந்து 19.09.98 இரவு கேல்ண் நகரை வந்தடைய இருக்கின்றது. குடிபெயர்ந்தோர், குடியேறியோர் உரிமைகளைப்பாதுகாக்க நடைபெறும் இப்பேரணியின் இறுதிநாள் நிகழ்ச்சிகள் வருமாறு.

20.09.98 அன்று பகல்12 மணிக்கு கேல்ண் EBERT PLATZ இல் ஊர்வலம் ஆரம்பமாகி 14 மணிக்கு NEU MARKT ஐ வந்தடைந்ததும் இறுதி நிகழ்ச்சிகளாக தமிழர் பண்பாட்டு நடனங்கள், மற்றைய கலை நிகழ்ச்சிகள், தகவல் மேசை ஆகியவற்றுடன் நிறைவு பெறும்.

இப்பேரணியின் இறுதிநாள் நிகழ்ச்சிகளில் தமிழீழ மக்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறீலங்கா அரசின் தமிழர்களுக்கெதிரான மனித உரிமை மீறல்களை, கொடுமைகளை வெளிப்படுத்துமாறு யேர்மன் உலகத் தமிழர் இயக்கம் கேட்டுக்கொள்கின்றது.

ஒழுங்கு செய்வோர்:
சர்வதேச மனித உரிமைச் சங்கம் - பிறேமன்.
உலகத் தமிழர் இயக்கம் - யேர்மனி.
- ஒரு மனிதனும் சட்டவிரோதமாக இல்லை என்பதை வலியுறுத்தும் குழுவுடன் மேலும் 50ற்கும் மேற்பட்ட அகதிகள் வெளிநாட்டவருக்கு ஆதரவான குழுக்களும்.


**Basel S.P. JEWELLERY**
**TEXTILES & PROVISON**

பஞ்சாபி வகைகள், பலதரப்பட்ட சாறிவகைகள்,
ரீ சேட், ரவுசர் வகைகள், ஆண்களின் சேட்,
சிறுமிகளின் பஞ்சாபிவகைகள்,
மைசூர் சில்க், பனாரஸ் பட்டு,
கூறைபட்டு வகை சாறிகள் அனைத்தையும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்

பட்டுப் புடவைகளும் தங்க நகைகளும்
அணியும் நாளெல்லாம் ஆனந்த திருநாளே

திறம் என்பார்..... முதன் முறையாக சுவிஸில் அதிக குறைந்த விலை என்பார்...... கூறுவதோ தரமான பொருட்கள் நியாயமான விலை அத்துடன்

தொகையில் நவநாகரிகமான தெரிவு



பஞ்சாபி வகைகள்
காதலுக்கு மரியாதை, ஜீன்ஸ்,
பொற்காலம்
நேருக்கு நேர் இன்னும்
பலவகைப்பட்ட
பஞ்சாபி வகைகள்

Ramly யின் தரமான CD
மாபெரும் மலிவு விற்பனை
CD 2.50 Sfr இருந்து

**S.P. Textiles**

தொடர்புகளுக்கு:
பாசல் Ravi கடை

Nauen unter Furng-14, 4055 Basel, Swiss.
Tel. & Fax: 061-2720990 / Mobel: 079 356 22 78




# வெளிவந்துவிட்டன

# ரமி யின்












RAMIY
RECORDS



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# நம்மால் முடியும்

சிறீலங்காவின் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தற்போது அமுலுக்குக் கொண்டுவந்திருக்கும் உணவு நிவாரண வெட்டானது, தமிழீழ மக்களை பட்டினிச் சாவுக்குள்ளாக்கும் அபாயத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

குறிப்பாக சிறீலங்கா அரசாங்கத்தின் இந்த உணவு நிவாரண வெட்டானது வன்னிப் பெரு நிலப்பரப்பிலும், கிழக்கு மாகாணத்திலும் அரச இராணுவ நடவடிக்கைகள் காரணமாக காடுகளுக்குள் தஞ்சமடைந்திருந்த 8 இலட்சம் மக்களை சாவின் விளிம்பிற்கு தள்ளியிருக்கின்றது.

யாழ்ப்பாணக் குடாநாடு சிறீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்ட பின்பு 5 1/2 இலட்சம் மக்களும் - கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சுமார் 3 இலட்சம் மக்களும் தங்கள் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து காடுகளுக்குள் தஞ்சமடைந்திருக்கிறார்கள்.

ஏறத்தாழ இரண்டு வருடங்களுக்கு மேலாக அகதி வாழ்க்கை வாழும் இந்த மக்களுக்கு நிரந்தரமான தொழிலோ, நிரந்தர வருமானமோ எதுவும் இல்லை. அரசசார்பற்ற சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களின் உதவியுடனும், தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த இந்த மக்களுக்குரிய உணவு மானியத்தை சிறீலங்கா அரசு திடீரென்று வெட்டிய செயலானது, ஒரு இனத்தை திட்டமிட்டு பட்டினிச் சாவுக்குள்ளாக்கி 'படுகொலை செய்ய முற்படும்' செயலாகவே கருதவேண்டும்.

ஏனென்றால் சிறீலங்கா அரசாங்கத்தால் உணவு மானிய வெட்டு அறிவிக்கப்பட்டிருக்கும் வன்னிப்பெரு நிலப்பரப்பிலும், கிழக்கு மாகாணத்தின் எல்லைப் பிரதேசங்களிலும் வாழும் தமிழ் மக்கள் - சுதந்திரமாக செயற்படுவதற்கும், வெளிநாடுகளிலுள்ள தங்களது நண்பர்கள், உறவினர்களிடமிருந்து பொருளாதார உதவிகளைப் பெறுவதற்கும் அரசசார்பற்ற உதவி நிறுவனங்கள் சுதந்திரமாக அவர்களுக்கு உதவி வழங்குவதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

ஏறக்குறைய இந்த மக்களின் நிலை என்பது இழப்பதற்கு உயிரைத்தவிர வேறு எதுவுமே இல்லாத நிலையே. எனவே இந்த மக்களிடமிருந்து அவர்களது உயிரையும் பறிக்கும் ஒரு நடவடிக்கையாகவே இந்த உணவு மானியக்குறைப்பு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அதாவது இந்த மக்களை பட்டினி போட்டு சாகடிப்பதன் மூலம், தமிழீழ விடுதலைப்போரை நசுக்கி விடலாம் என்று அரசாங்கம் கனவு காண்கிறது.

யுத்தத்தில் உணவை மக்களுக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்தக் கூடாது என்பது சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உடன் படிக்கையாகும்.

இதை அப்பட்டமாக மீறிச் செயற்படும் சிறீலங்கா அரசாங்கம், தன்னை நியாயப்படுத்துவதற்காக - மக்களுக்கு தாங்கள் அனுப்பும் உணவை விடுதலைப்புலிகள் எடுத்துச்சென்று விடுகின்றார்கள் என்று உலக அரங்கிற்கு காட்டமுனைகின்றது. உண்மையில் யுத்த நடவடிக்கைகளின் போது தங்களுக்கு வேண்டிய ஆயுதத்தை அரசபடைகளிடமிருந்து பெற்றுக்கொள்வதைப் போல உணவையும் அவர்களிடமிருந்தே விடுதலைப்புலிகள் பெற்றுக்கொள்கின்றார்கள். இது அரசாங்கத்திற்கு நன்கு தெரியும். அரசாங்கத்தின் உண்மையான நோக்கம், விடுதலைப்புலிகளுக்கு உணவு செல்லாமல் தடுப்பதல்ல. தமிழ் மக்களை பட்டினி போட்டு சாவின் விளிம்புக்கு தள்ளுவதன் மூலம் அல்லது சாகடிப்பதன் மூலம், விடுதலைப்புலிகளை அவர்கள் வெறுக்கும்படி செய்ய வேண்டும் என்பதுதான்.

ஏற்கனவே யாழ்ப்பாணக்குடா நாட்டை கைப்பற்றி விடுவதன் மூலம், இதைச் சாதித்து விடலாம் என்று அரசாங்கம் நினைத்திருந்தது. ஆனால் அந்த நினைப்பு நிர்மூலமாக்கப்பட்டு விட்டது. ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையால் யாழ், வவுனியா நெடுஞ்சாலையைக் கைப்பற்றி விடுவதன்மூலம் மீண்டும் அதைச் சாதிக்கலாம் என அரசாங்கம் நினைத்தது. அதிலும் கூட அரசாங்கத்துக்கு தோல்வி மேல் தோல்வியே கிடைத்தது.

எனவே தான் தற்போது உணவை ஆயுதமாகப் பயன்படுத்தி அதைச் சாதிக்க அரசு நினைக்கிறது.

அரசாங்கம் இந்த கபட நாடகத்தை அம்பலப்படுத்தும் விதத்தில் அங்கே நமது மக்கள் தொடர் உண்ணாநோன்பு போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இங்கே புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள நாமும், அவர்களது இந்தப்போராட்டத்தை சர்வதேச அரங்கிற்கு தெரியப்படுத்தும் விதத்தில் அமைதிப் போராட்டங்களையும், பிரச்சாரங்களையும் நடத்துவதன் மூலம் - அரசாங்கத்தின் இந்த முயற்சியை நிச்சயம் நம்மால் தோற்கடிக்க முடியும்.

# பேச்சுவார்த்தை வன்னித் தோல்விகளின் எதிரொலி

மீண்டும் 'பேச்சு வார்த்தைகள்' பற்றிய செய்திகள் வெளியாக ஆரம்பித்துவிட்டன. 'புலிகளுடன் பேசுவதற்கு தயாராக மட்டுமல்ல ஆர்வமாக உள்ளோம்' என சந்திரிகாவின் நீதி அமைச்சர் பீரிஸ் சென்னையில் கடந்தவாரம் அறிக்கை விடுத்துள்ளார். ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒருபடி மேலே சென்று நிபந்தனைகள் அற்று புலிகளுடன் பேசவேண்டுமென அதே வாரத்தில் கோருகின்றார். இவ்விரு கட்சிகளையும் இனப்பிரச்சனை தொடர்பான விடயத்தில் ஒன்றுபட வைக்க முயலும் பிரித்தானியாவின் இலங்கைக்கான தூதுவர், புலிகளுடன் பேசுவது அவசியம் ஆனது என வலியுறுத்தியுள்ளார்.

போர் மூலம் சமாதானம் காணமுற்பட்ட சிங்கள அரசும், போரை நிபந்தனைகளின்றி ஆதரிக்கும் எதிர்க்கட்சிக்காரரும் மீள ஒரு முறை பேச்சுவார்த்தைகள் பற்றி ஏட்டிக்குப் போட்டியாக அறிக்கை விடுப்பதன் 'மர்மம்' என்ன?

இராணுவத்தின் ஆள் பலத்தை ஒரு இலட்சம் புதிய படையினரால் அதிகரிக்கும் உத்தியோகபூர்வ இராணுவ செலவீனத்தை 60 வீதம் அதிகரிக்கும் புலிகளை அழிக்கும் போரை நடத்திய சிறீலங்கா, போர் ஏற்படுத்திய சுமையினுள் மீண்டும் மூழ்க ஆரம்பித்துவிட்டது.

வன்னி சமர்க்களம் சிங்களதேசத்தினை எட்டி உதைத்து இராணுவ - அரசியல் - பொருளாதார சகதியினுள் தள்ளி விட்டுள்ளது. இதிலிருந்து சிறீலங்காவை மீட்பதற்கு ஒரு கால அவகாசம் தேவைப்படுகிறது. இதற்காகவே இப்பேச்சுவார்த்தை மீதான கரிசனை எழுப்பப்படுகிறது.

அண்மையில் இராணுவ செலவீனத்திற்காக எட்டு பில்லியன் ரூபாய்களை (8000 மில்லியன்கள்) ஒதுக்கீடு செய்தபோது, இதற்கான காரணம் 'நீண்டு செல்லும் ஜெயசிக்குறுய் சமர்' என அரசு கூறியது. மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைத்த போது அதற்கும் காரணம் ஜெயசிக்குறுய் என கூறப்பட்டது. அவசரகால சட்ட விதிகள் சிங்கள நாடு பூராவும் அமுல்படுத்தப்பட்ட போது 'ஜெயசிக்குறுய்' மீண்டும் காரணம் காட்டப்பட்டது.

பார்வை

எவ்வாறு வன்னியில் சிங்களம் பொறிகுழியினுள் வீழ்த்தப்பட்டது என்பதற்கு ஆதாரம் இவை.

இன்று 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கையை வென்றாகவேண்டும் என்ற வரட்டுத்தனமான கௌரவப்பிரச்சினை சிறீலங்காவை ஆளும் கண்டி பிரபுத்துவ குடும்பத்திற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் போரை வெல்வதற்கான இராணுவ, பொருளாதார, அரசியல் வளங்கள் போதிய அளவு அரசிடம் இல்லை.

இந்தப் பலவீனத்தைக் குறிபார்த்து சிங்கள எதிர்க் கட்சிகள் தமது தாக்குதல்களை ஆரம்பித்துள்ளன. சந்திரிகா தன்னைச் சுற்றிக் கட்டியெழுப்பிய போலித் தோற்றத்தினை ரணில் அம்பலப்படுத்த முயல்கிறார். சிங்கள இனவாதி தினேஷ் குணவர்த்தனா, சந்திரிகா அரசின் சிவில் மற்றும் மனித உரிமைகள் பற்றிய 'கரிசனை' மீது கேள்வி எழுப்புகிறார். வாசுதேவ நாணயக்கார போன்ற இடது சாரிகள் சந்திரிகாவின் பொருளாதார கொள்கையை சந்தேகிக்கின்றனர். இவற்றினூடாக சந்திரிகாவின் தலைமைத்துவ ஆற்றலை சிங்கள எதிர்க் கட்சிகள் கேள்விக்குள்ளாக்குகின்றன.

இங்கே 'சமாதானம்' 'பேச்சுவார்த்தைகள்' 'மனித உரிமைகள்' என சந்திரிகா குத்தகைக்கு எடுத்து வைத்திருந்த வார்த்தைகளை அவரிடமிருந்து ரணில் விக்கிரமசிங்க பறித்தெடுக்க முயல்கின்றார். அவர் வன்னி உணவுநிலை பற்றி கரிசனை தெரிவித்திருக்கின்றார். போரின் தோல்வி பற்றி பேசுகிறார். புலிகளுடன் பேசவேண்டுமென கோருகின்றார். இது 1994-ம் ஆண்டுக்கு முன் சந்திரிகா எழுப்பிய குரலின் எதிரொலி போன்றுள்ளது.

இந்த ஆபத்தை சந்திரிகா உணர்ந்துகொண்டதன் வெளிப்பாடுதான் பீரிஸ் முடுக்கி விடப்பட்டது ஆகும். புலிகளுடன் தாம் பேசத் தயாராக மட்டுமல்ல, ஆர்வமாகவும் உள்ளோம் என பீரிஸ் கூறுகிறார். ஆர்வமாகவும், தயாராகவும் உள்ள பீரிஸ், தாம்தான் பேசப்போகிறோம்; ரணிலை நம்பிவிடாதீர்கள் என மறைமுகமாகக் கூறுகிறார். ரணில் ஒரு படி மேலே போய் புலிகளுடன் பேசவேண்டும், மத்தியஸ்தத்துடன் கூட பேசலாம் எனக்கூறி சந்திரிகாவை வம்புக்கு இழுக்கிறார்.


இப்போக்கு தமிழர்களுக்கு பரிட்சயமானது. போரில் தோல்விகள் ஏற்படும்போதும், தேர்தல் கோஷங்கள் எழுகின்ற வேளையிலும் சிறீலங்காவின் பிரதான கட்சிகள் போரைப்பற்றியும் கதைத்து, பேச்சுவார்த்தைகள் பற்றியும் பேசுவார்கள்.

இப்பேச்சுவார்த்தை கோஷங்களின் பின்னால் உண்மையில் இருப்பது 'ஜெயசிக்குறுய்' ஏற்படுத்திய தோல்வியே ஆகும். பாரிய உயிர் இழப்புகள், ஆயுத தளபாட இழப்புகள் என்பன ஒருபுறமும், நீடித்த போரினால் ஏற்படுத்தப்படும் மனோவியல் இழப்புகள் மறுபுறமும் சிங்கள இராணுவத்தினை நெருக்கிவருகின்றன.

இராணுவத்தின் மேல் தமது அரசியல் பொருளாதார எதிர்காலத்தையே பணயம் வைத்துள்ள சிங்கள இனவாத இயந்திரம், வன்னியில் புலிகள் கொடுத்துவரும் பல பரிமாணப் போரினால் குத்துக்கரணங்கள் அடிக்கின்றன.

பேச்சுவார்த்தைகள் பற்றிய திடீர் கரிசனைகள், இவ் வன்னிச்சமர் எதிரொலியும் ஆகும். தேசியத் தலைவர் துல்லியமாக இனங்கண்டு கணித்து குறிப்பிட்டது போன்று ஜெயசிக்குறுய் தாய்ச் சமராகத்தான் உருவாகியுள்ளது. சிறீலங்காவின் அரசியல், பொருளாதார, இராணுவ எதிர்காலம் வன்னியில் தலைவர் வைத்துள்ள பொறியினுள் சிக்கிக் கிடக்கின்றது என்பதற்கு இப் பீரிஸ் - ரணில் குத்துக்கரணங்கள் உதாரணமாகும்.

- ராஜா



நன்றி: 'தினக்குரல்'

சிறு கதை

# வேலை... வேலையே வாழ்க்கை

கி. ராஜநாராயணன்

தலைக்கோழி கூப்பிட்டதும் வழக்கம் போல முழிப்புத் தட்டியது. தொழுவில் மாடுகளின் மணியோசையும் அவைகள் கூளம் தின்னும் போது காடிப் பலகையில் சத்தமும் கேட்டது.

கெங்கம்மா படுக்கையில் இல்லை; படுக்கையின் கதகதப்பு ஆறி ஜில்லிட்டிருந்தது. அவள் மாடுகளுக்குக் கூளம் போட்டுவிட்டு இன்னேரமெல்லாம் முற்றம் தெளிக்கச் சாணிப்பால் கரைத்துக்கொண்டிருப்பாள். நாகையா புரண்டு படுத்தார். அடித்துப்போட்டது போல மேல்லெல்லாம் ஒரு அசதி. போர்த்திக்கொண்டிருந்த கட்டிய வேட்டியைக் காதோடு சேர்த்து முக்காடிட்டுக்கொண்டு ஒருக்களித்துப் படுத்து, கைகளிரண்டையும் தொடை இடுக்கில் செருகிக்கொண்டு, விட்ட தூக்கத்தைப் பிடிக்க முயன்றார். முற்றம் தெளிக்கும் சத்தம் கேட்டது.

ராத்திரி போடவேண்டிய நாத்துக் கூளத்தை மண்போக நன்றாகத் தட்டியெடுத்து நாகையா வைத்துவிடுவார். ரெண்டு தரம் எழுந்து அவர் கூளம் போட மாட்டார்; அதை கெங்கம்மாவே செய்து விடுவாள். மத்தியில் இவருக்கு ஒரு தரம் 'ஒண்ணுக்கு' எழுந்திருப்பதே பெரிய காரியம்!

கெங்கம்மா பாத்திரங்களைத் தேய்க்க ஆரம்பித்து விட்டாள். ரெண்டாங்கோழி கூப்பிட்டது. இனி அவள் தன்னைத் தூங்கவிடமாட்டாள்; எழுந்திருந்தாக வேண்டியது தான். எழுந்து வேட்டியைக்கட்டிக் கொண்டார். சுருக்கி வைக்கப்பட்டிருந்த முண்டெண்ணெய் வாந்தரைத் தாண்டினார். குழந்தைகள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தன. ரோகிணி வழக்கம் போலப் பாயிலிருந்து உருண்டு விலகிப்போய்த் தரையில் ஒரு மூலையில் கோடுபோய் வழியத் தூங்கிக்கொண்டிருந்தாள். அவளைப் பிரியத்தோடு எடுத்து படுக்கையில் படுக்கவைத்தார். தூளியில் கைக்குழந்தையும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது.

பருத்திமார் முடிவினால் தொழுவைத் தூக்க ஆரம்பித்தார். தூத்த சாணியை அள்ளிப் பெரிய கூடையில் எடுத்து வைத்தார். அந்தக்கைகளை தொழுவின் கல்தூணில் தேய்த்துத் துடைத்துவிட்டு, கோவணத்தை ஒரு தரம் இறுக்கிக் கட்டிக் கொண்டு, பழைய கோணிச்சாக்கை நாலாக மடித்து தலையில் போட்டுக்கொண்டார். கெங்கம்மா வந்து சாணிக் கூடையைக் கூடப்பிடித்துத் தலையில் தூக்கிவிட்டாள்.

தொழுக்குப்பையை எடுத்து முடித்ததும், கண்டாங்கிச்சேலையில் கிழித்த துண்டை வேட்டியின் மேல் இடுப்பில்சுற்றிக்கொண்டு பானையில் நனையப்போட்டு வைத்திருந்த பருத்தி விதையை ஆட்டுரலில் போட்டு ஆட்ட ஆரம்பித்தார். ஆட்டும் போதே 'இந்தப் பருத்தி விதையை ஆட்டுகிறது ஒரு பெரிய பாடு' என்று அவர் மனசு முணங்கிக்கொண்டது. பருத்தி விதையை மெஷினில் கொடுத்து பவுடராக்கி வைத்துக்கொண்டு இந்தத் தொல்லைபடாமல் மாட்டுக்குக் கலக்கிவிட்டால் என்ன என்று நினைத்தார்.

மாடுகளுக்கு தண்ணீர் காட்ட ஆரம்பித்தார். மனுசர்களில் உள்ளது போலவே மாடுகளிலும் புத்திகெட்டதும் உண்டும்! என்ன தொறுதட்டியம் பண்ணுகிறதுகள் இந்த மாடுகள். கலக்கி விட்டோம் குடிச்சோம் என்று உண்டுமா; சனியன்: ஒரு மாடு டப்பைப் போட்டுகலக்கி விட்டால் தான் குடிக்கும். ஒரு மாட்டுக்கு கரைகோடு காடித் தண்ணீர் விடவேண்டும். ஒரு மாட்டுக்குத் தவிடு. ஒரு மாட்டுக்குத் தனி பருத்திவிதைப் பால். இன்னொரு மாட்டுக்குப் புண்ணாக்கும் கரைல் கலந்த பருத்திவிதைப் பாலும். அடுத்த மாட்டுக்கு பருத்திவிதைத் தொக்கு கட்டியாக. மற்றதுக்கு அதோடு கம்பஞ்சோறு கலந்து பிசைந்து வைக்க வேண்டும். அதிலும் இந்தப் பால் மாடு இருக்கே, ரொம்பச் செல்லம். பால் கொடுக்கிறோம் என்கிற மேட்டிமை அதுக்கு ரொம்ப!

பால் மாட்டுக்கு மட்டும் தண்ணீர் காட்ட அவருக்குப் பொறுமை இருப்பதில்லை; அதை அவள்தான் கட்டி அடைக்கணும். கெங்கம்மா பால் மாட்டுக்கு 'ஒரு அஞ்சலில்' தண்ணீர் காட்டிவிடுவாள். 'பசுமாடுகள் ரொம்ப நுட்பமுடையதுகள்' நம்முடைய ஆத்திரப்படுதல் பொறுமையின்மை இதுகளை எப்படியோ தெரிந்து கொண்டுவிடுகின்றன! நிச்சயம் இவைகளுக்கெல்லாம் அவை பணிந்து போவதில்லை.

அவருடைய அம்மா இருந்தபோது அடிக்கடி சொல்லுவாள். "ஓ நாகையா, மாடுகளுக்குக் கூளம் போட்டதும் அதுகளைத் தட்டித் தடவிக் கொடு. மனசோடு, பிரியமாய்த் தண்ணீர் காட்டு. முக்கியமாக தண்ணீர் காட்டும் போது கோபப்படாதே" என்று பாடிப் பாடிச் சொல்லியிருக்கிறாள். ஆனால் நாகையா தண்ணீர் காட்டும் போதுதான் மாடுகளுக்கு அடிவிழும்.

கெங்கம்மா கம்மம்புல் குத்தி, குடிக்க ஆரம்பித்தாள். அவளுடைய வலுவான ஒவ்வொரு உலக்கைப் போட்டுக்கும், வீட்டின் கதவுத் தாட்பாள் அதிர்ந்து சத்தங்கொடுத்தது. இப்படிக் கம்மம்புல் இடிக்கும் போதெல்லாம் நாகையா நினைப்பார், இந்த தானியத்தை மட்டும் சமைக்க இவ்வளவு கஷ்டப்பட வேண்டியதிருக்கிறதே! பேசாமல் மில்லில் கொண்டுபோய் அரைத்து வைத்துக்கொண்டால் எவ்வளவு சௌகரியமாய் இருக்கும்? இந்த அபிப்பிராயத்தை அவர் முதலில் வெளியிட்டபோது வீட்டுப்பெண்கள் சிரித்தார்கள். அம்மா மாத்திரம் அவருக்குப் படும்படி பதில் சொன்னாள். 'உலையை அடுப்பில் வச்சிக்கிட்டுத்தானே கம்பம்புல்லை இடிக்க ஆரம்பிக்கோம். இடிச்சி கொஞ்சம் நேரமாயிட்டாலுங்கூட சோறு காரல் ஆகிக்கசக்கவும் ஆரம்பித்துவிடுமே. அரைச்சி வச்சிக்கிட்டு சமைக்கிறதாவது! அதென்ன தெல்லரியோ!'


ஆனாலும், இந்த அநியாயப்பாடு வேண்டாம். ஏதாவது ஒரு மாற்றம் செய்தே ஆகணும். உடல் நைரியத்தில் இந்த மக்கள் சிந்திக்க மறுக்கிறார்கள் என்று எண்ணுவார் நாகையா.

குழந்தைகள் படுக்கையில் இருந்து ஒவ்வொருத்தராய் எழுந்திருக்க ஆரம்பித்தார்கள். ஆரோக்கியமான குழந்தைகள் சிரித்துக்கொண்டே எழுந்திருக்கின்றன. அனாரோக்கியமான குழந்தைகள் அழுதுகொண்டே எழுந்திருக்கின்றன. நாகையா தம்பதிக்கு இரண்டு மாதிரிகளிலும் குழந்தைகள் இருந்தன.

அடுப்பில் அவள் கம்பஞ் சோற்றைக் கிண்டிக்கொண்டே குழந்தைகளை சமாதானப்படுத்தினாள். காப்பி போட்டு எல்லோருக்கும் தந்தாள். கைக்குழந்தைக்குப் பால் கொடுத்து இறக்கிக் கீழே விளையாட விட்டாள்.

எரியும் அடுப்புக்குப் பக்கத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் கைக்குழந்தை, வேலைக்காரர்களான ஆடு மேய்க்கிறவன், மாடு மேய்க்கிறவன், குடிமகன், ஏகாலி இவர்களுக்குச் சோறு போடுதல், வீட்டைப் பெருக்குதல், ஓசி மோர் கேட்க வந்தவர்களுக்குக் கொடுத்தல், 'வெளிக்குப்' போய்விட்டு வரும் குழந்தைகளுக்கு 'கால்' கழுவிவிடுதல் இப்படியாக அவள் ஒரு அட்டாவதானம் செய்து கொண்டிருந்தாள்.

காலை ஆகாரம் முடிந்து நாகையா உழவுக்குப் புறப்பட்டார். கெங்கம்மா தலையில் தண்ணீர் செம்புடனும் கையில் செது வெட்டும் வாச்சாத்துடனும் அவருக்கு முன்னதாகவே புறப்பட்டுப்போய் புஞ்சையில் முள்ளையெல்லாம் பொறுக்கி எடுத்துக்கொண்டு வந்து ஒரு இடத்தில் போட்டு தீ வைத்துப் பொசுக்கினாள். கற்களைப்பொறுக்கி தண்ணீர் போகும் தத்துக்களில் போட்டாள். முட்செடிகளையும், மஞ்சணத்தி,



சாரணத்தி முதலிய செடிகளையும் வாச்சாத்துவால் தோண்டி வெட்டினாள். நாகையா வந்து கலப்பைகட்டி உழத் தொடங்கினார். அதற்கு முன்னாள் இருவரும் ஒருவாய் வெற்றிலை போட்டுக் கொண்டார்கள். அருகிக் கலயத்தை காக்காய் வந்து உருட்டி விடாமல் இருக்க ஓர் இடத்தில் கொஞ்சம் மண் பறித்து அதில் கலயத்தை பதித்து வைத்தாள் அவள். இனி அவள் அவசரமாய்ப் புறப்பட்டுப்போய் ஆட்களை சத்தம் காட்டி கூட்டிக்கொண்டுபோய் தோட்டத்தில் அவர்களோடு சேர்ந்து களை வெட்டவேண்டும். மதியத்துக்கு வீட்டுக்கு வரும் சாப்பாட்டு வேளையில், ராத்திரிக்குக் கிண்ட வேண்டிய களிக்கு கேப்பை திரித்து வைத்துவிட்டுப்போகவேண்டும். நாகையாவுக்கு அவள் செய்யும் வேலையும் நேரமும் அத்துப்படி. நாளில் கொஞ்சநேரம்கூட 'உஸ்' என்று உட்காரமாட்டாள். தூங்கும் நேரம் தவிர மற்றநேரமெல்லாம் வேலைதான். தூக்கமும் கூட அவள் ஒரு வேலையாகத்தான் செய்கிறாள்! இப்படி ஏன் செய்யவேண்டும்? எதுக்காகச் செய்ய வேண்டும்... என்று கேட்டால் அவளுக்கு பதில் சொல்லத் தெரியாது. ஒன்றுமட்டும் தெரிகிறது ஒருநொடி கூட வேலைசெய்யாமல் இருக்க முடியாது அவளால்.

சித்திரை மாசத்தின் கரிசல் காட்டில் ஏறு வெய்யில் தாங்க முடியாததாய் இருந்தது. வியர்வை பெருகி வழிந்தது. மாடுகள் இளைத்தன. தூரத்தில் கானல்நீராகத்தெரிந்தது. இந்த வேளா வெய்யிலில் அவள் மற்றப் பெண்களோடு நிரை போட்டுக்கொண்டு வேகமாய் களைவெட்டிக்கொண்டிருப்பாள். மாடுகளின் வாயிலிருந்து சொங்கு நுரையாக வழிந்தது. காரணமில்லாமல் அவர் வலயனைத் தாண்ட தார்க்கம்பால் குத்தினார் அடித்தார்.

தூரத்தில் ஓர் அண்டங் காக்கை கரைந்தது. அவள் எதிர்பார்த்தபடியே கலயத்தை பார்த்து வந்தது. கோபத்தோடு ஒரு மண்கட்டியை எடுத்து அதை நோக்கி எறிந்தார்.

உழுது விட்டு சாயந்திரம் வீட்டுக்கு வந்தபிறகும் கெங்கம்மா வரவில்லை. 'அம்மா எங்கலே'? என்று கேட்டதுக்கு 'களை கொஞ்சம் தான் பாக்கி இருக்காம்.' தெதுக்கிட்டுத்தான் வருவாளாம்; சொன்னா;


மாடுகளுக்குத் தண்ணீர்காட்டி கூளத்தைப் போட்டார். விளையாடசென்றிருந்த குழந்தைகளும் பள்ளிக்கூடம் போயிருந்த குழந்தைகளும் ஒவ்வொன்றாக வந்தன. கடையில் 'வாங்கித்தின்ன' ஏதாவது - தானியமோ, பருத்தியோ - கொடுக்கச் சொல்லிக் கேட்டுக் குழந்தைகள் சிணுங்கின. நாகையா முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டார்.

கொஞ்சநேரத்துக்கெல்லாம் கெங்கம்மா களை கரண்டியுடன் சிரித்துக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தாள். சிரிப்புக்குக் காரணம் அவள் தெருவில் வரும்போதே வீட்டில் குழந்தைகளின் சிணுக் கட்டத்தையும் புருஷனின் எரிச்சலான சத்தத்தையும் கேட்டதுதான். கைக்குழந்தை அவளை நோக்கி 'பறந்து கொண்டு' வந்தது. அவசரமாக முகம் கைகால் கழுவிக்கொண்டு வந்தவள் முகத்தைத்துடைத்தும் துடைக்காமலும் குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

எல்லாக் குழந்தைகளுக்கும் வாங்கித் தின்க பருத்தி கொடுத்தனுப்பினாள். குத்துக்காலிட்டு முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த புருஷனின் முதுகுப் புறமாக அருகே வந்து உட்கார்ந்துகொண்டு குழந்தைக்குப் பால் கொடுத்தாள். நாகையாவின் மௌனம் அவளுள் புன்னகையை வரவழைத்தது. மெதுவாக புருஷனின் முதுகின் மேல் ஒருக்களித்துச் சாய்ந்துகொண்டு திரும்பி அவருடைய முகத்தைப் பார்த்து சிரித்தாள். பதிலுக்கு அவர் நறுக்கென்று அவளை ஒரு கிள்ளுகிள்ளவைத்தார். வலியால் முகத்தைச் சுளித்தும் கொண்டு அவருடைய புஜத்தைப் பிடித்துத்

(தொடர்ச்சி 22-ம் பக்கம்)

# மணிரத்னத்தின் உயிரே



‘உயிரே’ படத்தை-'ரோஜா', 'பம்பாய்' படத்தைத் தொடர்ந்து வரும் 'டிரிலஜி' பற்றிய மூன்றாவது பாகம் என்கிறார் மணிரத்னம். (ஆனந்த விகடன் நேர்முகம் / ஜூலை 1998) ரோஜா- காஷ்மீர் பிரச்சினை பற்றியது, பம்பாய்- இந்து முஸ்லிம் மதப் பதட்டம் பற்றியது, இந்த மூன்றாவது படம் உயிரே- அஸ்ஸாம், நாகலாந்து மிசோரோம் மாநிலங்களின் தனிநாட்டுக் கோரிக்கைப் போராட்டம் பற்றியது.

மணிரத்தினத்தின் இந்த மூன்று பாகம் (Trilogy) படவரிசையில் இரண்டு விடயங்கள் கூர்ந்து நோக்கத் தக்கவை.

(i) படங்களின் அரசியல்

(ii) சினிமா வடிவம் / தொழில்நுட்பம் / பாத்திரச் சித்தரிப்பு / இசை / நடனம் / கமெரா தொடர்பான பிரச்சினைகள்.

ரோஜா படத்தில் அரசியல் சமநிலை இல்லை. பம்பாய் படத்தில் கொஞ்சமேனும் சமநிலை பேணப்பட்டிருந்தது. உயிரே படத்தில் அரசியல் சமநிலை இருக்கிறது. போராளிகளின் நோக்கம் ஒருசில காட்சிகளில் / ஒருசில நிமிடங்களில் என்றாலும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்திய இராணுவத்தினால் கிராமம் சூறையாடப்படுவதும் சுட்டுக் கொல்லப்படுவதும் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்படுவதும் காட்டப்பட்டுள்ளது. காட்சிகள்: 1. போராளித் தலைவரின் நேர்முகம், 2. நேர்முகத்தை மீளவும் ஸ்டுடியோவில் போட்டுப் பார்ப்பது. 3. மனிஷா கொய்ராலா- ஷாருக்கான் இறுதி உரையாடல், 4. மனிஷா கொய்ராலா - சகோதரன் உரையாடல், 5. கிராமம் சூறையாடப்படும் பாலியல் பலாத்காரக் காட்சிகள்.

கிராமம் சூறையாடப்படும் காட்சிகளும் பலாத்காரக் காட்சிகளும் நேரடியானதாக இல்லை. வசனமும் காட்சிகளும் இடைவெட்டி, நிகழ்காலமும், கடந்த காலமும் கலந்து போகின்ற படியான காட்சிகளாகக் காண்பிக்கப்படுகின்றது. நேரடியாக இந்திய இராணுவத்தினரின் உருவச் சித்தரிப்புடன் தணிக்கையைத் தாண்டி காட்சி வைத்திருக்க முடியுமா என்கிற கேள்வியையும் நாம் இங்கு எழுப்பிக் கொள்ள வேண்டும்.

மணிரத்னம் படங்களில் விஸ்தாரமான வரலாறு என்பது குறிப்பான கதைத் தர்க்கத்துடன் இடம்பெறுவதில்லை. வெவ்வேறு சூழல்களில் வெவ்வேறு காலங்களில் ஒரு குறிப்பிட்ட சமகால இடைவெளியில் நடைபெற்ற பல்வேறு காட்சிகளை எடுத்துக்கொண்டு கதைசொல்வார். ரோஜா, பம்பாயில் கதை அமைப்பு முக்கிய பிரச்சினைகளாக இருந்தது. பாத்திர நடவடிக்கைகளும் அதையொட்டியே அமைந்தன. சில வரலாற்றுச் சம்பவங்களே இருந்தன. உதாரணம்: பம்பாய் மதக் கலவரம்.

'உயிரே'யில் அப்படியான வரலாற்றுத் தர்க்கம் ஏதுமில்லை. பிரதமரைக் கொல்ல வரும் தற்கொலைப் போராளிப் பெண்கள் அஸ்ஸாம் விடுதலை இயக்கத்தில் இல்லை. பிரதமரைக் கொல்ல அவர்கள் முயற்சி செய்ததாகச் சான்றும் இல்லை. இன்னும் ராஜீவ் காந்தி கொலைக்கும் அஸ்ஸாம் விடுதலைப் போராட்டத்துக்கும் சம்பந்தமில்லை. ஆனால் ராஜீவ் காந்தி கொலையில் பெண் தற்கொலையாளி இருக்கிறாள். வேறு வேறு சம்பவங்கள் கற்பனையில் அஸ்ஸாம் விடுதலைப் போராட்ட நடவடிக்கை ஆகியிருக்கிறது.

ரோஜா, பம்பாய் படங்களின் கதைகளில் வரும் மனிதர்களுக்கான உணவு, பழக்கவழக்கம், கலாச்சாரப் பின்னணி சித்தரிக்கப்பட்டிருந்தது. உதாரணம்: பம்பாயில் முஸ்லீம் வீடுகள்; குடும்பம், இந்து அரவிந்தசாமி வீட்டுச் சடங்குகள், பம்பாயில் குடியிருக்கும் வட இந்தியர் வீடு, நடனங்கள். ரோஜா படத்தில் கிராமத்தில் கல்யாண வீடு. காஷ்மீரத்துத் தெருக்கள். பாத்திரங்களின் உடைகள் குறைந்தபட்ச கலாச்சாரப் பின்னணியுடன் இருந்தது.

உயிரே படத்தில் மனிஷா கொய்ராலா அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்தவர். ஷாருக்கான் மலையாளி. மனிஷா கொய்ராலா ஒரு வட இந்தியப் பெண்ணாகத்தான் சித்தரிக்கப்பட்டிருந்தாரே தவிர அஸ்ஸாம் பெண்ணாக இல்லை. அஸ்ஸாமியப் பெண்ணின் ஆடைகள் கூட அவள் அணிவதில்லை. அம்மக்களின் கலாச்சாரப் பின்னணி, குடும்பம் போன்றன எந்தப் பாத்திரப் பின்னணியிலும் காண்பிக்கப்படவில்லை. ஷாருக்கான் குடும்பம் / பெண் குடும்பத்தினர் அசல் மார்வாடிக் குடும்பத்தினர் போல் சித்தரிக்கப்பட்டிருந்தனர். இந்தி மொழிக்காக எடுக்கப்பட்ட இப் படத்தில் அஸ்ஸாமிய / மலையாளிக் கலாச்சாரப் பின்னணி முற்றிலும் காணாமல் போக்கப்பட்டிருக்கின்றது.

இப் படத்தில் ரோஜா, பம்பாய் படங்களோடு ஒப்பிடும்போது பாத்திரச் சித்தரிப்பில் மூன்று விஷயங்கள் கவனம் கொள்ளத் தக்கவை.

1. இம் மூன்று படங்களிலுமே நாயகர்கள் தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த அதிகாரிகளாகவே வருகிறார்கள்.

**ரோஜாவில்:** கம்ப்யூட்டர் என்ஜினியர்.
**பம்பாயில்:** பத்திரிகையாளர்.
**உயிரேயில்:** வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்.

இம் மூவருமே நேரடியாக அதிகாரத்தில் பங்கு பெறாதவர்கள். அதேவேளை அதிகார அமைப்பின் சார்புத் தன்மையும், சமரசத்தில் விமர்சனமும் கொள்ளக் கூடியவர்கள்.

ரோஜாவில் நாயகன் விமர்சகனில்லை. பம்பாயில் விமர்சகன். உயிரேயில் அரச மதிப்பீடுகளுக்கும் அவனுக்கும் சம்பந்தமேயில்லை. அரசியலை சமநிலையுடன் புரிந்துகொள்ள முயல்கிறான்.

2. ரோஜா, பம்பாய் நாயகிகள் வழக்கமான ஆச்சார நாயகிகள்.

உயிரே நாயகி பாலியல் பலாத்காரத்திற்கு ஆளானவள். வாழவேண்டும் எனப் போராட நினைப்பவள். பரிதாபத்துக்கு உரியவள் அல்ல; புரிந்து கொள்ளப்படக் கோருபவள்.

3. ரோஜா, பம்பாயில் பெண்களின் பாத்திர வளர்ச்சியில் உளவியல் பரிமாணம் உண்டு. வெறும் உடல்களாக அவர்கள் இல்லை.

உயிரே படத்தில் 'தையதக்க' பாட்டுக்கு வருகின்ற பெண்ணும், விசில் விளம்பரப் பெண்ணும் உடல் தவிர வேறேதும் இல்லை. இன்னும் கல்யாணப் பெண் பாத்திரம் பாக்யராஜ் வகைப்பெண் பாத்திரம். உடலுறவே அவள் பிரதானப் பிரச்சினையாக இருக்கிறது.

மனிஷா கொய்ராலாவின் பாத்திரப்படைப்புக்கூட கல்யாணக்காட்சியில் வெறும் உடலாகச் சரிந்து விடுகிறது.

பெண்பாத்திரங்களின் சித்தரிப்பு எனும் மாபெரும் வீழ்ச்சி, அசிங்கம் உயிரே படத்தில் நிகழ்ந்திருக்கிறது. மிகச்சாதாரண ஹிந்திப் படங்களில் வருவது போன்ற காட்சிகள் மூன்று பாடல்களில் வருகின்றது. 'நெஞ்சினிலே' பாடல்காட்சி, 'உயிரே' பாடல் காட்சி, 'தையதக்க' பாடல்காட்சி. மூன்றுமே விகாரத்தின் எல்லையைத் தொட்டுவிடுகிறது. ராணுவ வீரர்கள் அர்த்தமற்று அங்குமிங்கும் ஓட, பின்னணியில் வண்ணவண்ணமாக குண்டுகள் வெடிக்க நிகழும் மனிஷா-கொய்ராலா ஷாருக்கான் பாடல் காட்சி அபத்தக் கற்பனையின் உச்சம். படத்தின் தீவிரத்தன்மையை முற்றிலும் குலைத்துவிடும் அசட்டுத்தனமான பாடல்காட்சி அது. இராணுவ வீரர்களின் உடை துப்பாக்கி போன்றவை இங்கு நகைச் சுவைக்கு உரியதாகி விடுகிறது.

படத்தின் பாடல் காட்சிகள் முழுக்கவும் மிகச்சாதாரணமான ஹிந்திப் படத்தின் வரிசைமுறையான காட்சிகள் தவிர வேறில்லை. ரோஜா பம்பாய் படத்தை ஒப்பிட, 'நெஞ்சினிலே' பாடல் காட்சியும் 'பூங்காற்றிலே' பாடல் காட்சியும் குறைந்த பட்ச கற்பனை வளமோ காட்சிப் பொருத்தமோ இல்லாமல் எடுக்கப்பட்டு இருக்கிறது.

படத்தின் கதையமைப்பில் நிறைய தடுமாற்றமும், பொருத்தமின்மையும் இடம்பெறுகிறது. படத்தின் இடைவேளை வரை ஆட்டம் பாட்டம் தவிர கதை என்று ஏதுமில்லை. மனிஷா கொய்ராலாவின் அழமுடியாத வேதனைக் கதைக்கான காரணம்கூட படம் தொடங்கி 2 மணி நேரத்துக்குப் பின் தான் தெரிகிறது.

ரோஜா, பம்பாய் படங்களில் கதையில் பிரச்சினையில் காதல் இடம்பெறுகிறது. உயிரே படத்தில் காதலுக்குள் தேசப்போராட்டமும், குண்டு வெடிப்பும் இராணுவ அணிவகுப்புக்களும் நடக்கிறது. அகமணமுறையை உடைப்பதற்கு, மதம், இனம், ஜாதி மீறிய திருமணங்களுக்கு, ஒருமையை உருவாக்குவதற்கு கலப்பு மணங்களும் காதலும் முக்கியமானவை என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. ஆனால் காதலை மட்டுமே பிரதானப் படுத்தி, பிறபிரச்சினைகளை பின்னுக்குத் தள்ளிவிடுவது சரியான அணுகல் முறையாக இருக்க முடியாது.

> அகமணமுறையை உடைப்பதற்கு, மதம், இனம், ஜாதி மீறிய திருமணங்களுக்கு, ஒருமையை உருவாக்குவதற்கு கலப்பு மணங்களும் காதலும் முக்கியமானவை என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. ஆனால் காதலை மட்டுமே பிரதானப் படுத்தி, பிறபிரச்சினைகளை பின்னுக்குத் தள்ளிவிடுவது சரியான அணுகல் முறையாக் இருக்க முடியாது.

உயிரே படம் ரோஜா, பம்பாய் படங்களோடு ஒப்பிடும் போது அதனது அரசியல் சமநிலைச் சித்தரிப்புக்காக முக்கியத்துவம் பெறுகிறது. மணிரத்னம் 'இருவர்' தோல்வியில் இருந்து மீள்வதற்காகவோ அல்லது ஹிந்திப் படவுலகு ரசனையைத் திருப்திப்படுத்துவதற்காகவோ பெண் பாத்திரச் சித்தரிப்பில் அதல பாதாளத்தில் வீழ்ந்திருக்கிறார். மணிரத்தினத்தின் நாயகன், அஞ்சலி, மௌனராகம், ரோஜா, பம்பாய், இருவர் படங்களில் காட்டி வந்திருக்கும் பாத்திரச் சித்தரிப்பின் வளர்ச்சியை இப் படத்தில் தவறவிட்டிருக்கிறார். மரியாதைக்குரிய சினிமா எடுக்கத்தெரிந்தவர் என்கிற மதிப்பீட்டில் இருந்து வீழ்ந்து விட்டிருக்கிறார்.

ஷாருகான், மனிஷா கொய்ராலாவை தன்னில் ஒரு பகுதியாக நேசிக்கிறார். அவளாகவே ஆகிவிட முனைகிறார். இந்தியாவின் பகுதியாகவே அஸ்ஸாம் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்கிறார். மனிஷா கொய்ராலா எனும் அஸ்ஸாமியப் பெண்ணுக்கு, இந்தியாவை நேசிக்க முடியாததற்கு காரணங்கள் உள்ளது போலவே, ஷாருகானையும் நேசிக்க முடியாமல் உள்ளதற்கும் காரணம் உள்ளது. தம்மினத்தை பலாத்காரப் படுத்திய இந்தியாவை அவளால் நேசிக்க முடியாதிருக்கிறது. தன்னைப் பலாத்காரப் படுத்திய ஆணுடனும் அவளுக்கு நெருங்க முடியாத பீதியைத் தருவதாகவே இருக்கிறது. இந்தியச்சூழலில் இருந்து சிந்திப்பது மட்டுமே ஷாருகான். மனிஷா கொய்ராலா காதலையும் சாவையும் புரிந்து கொள்வதற்கு உதவும்.

மனிஷா கொய்ராலாவின் நடிப்புக்காக இப்படத்தை நாம் நிச்சயமாகப் பார்க்கலாம். அவரது பாத்திரச் சித்தரிப்பும் அழுத்தமாக இருந்திருக்கிறது. பாடல்களைப் பார்ப்பதற்காக உயிரே படத்திற்கு போகவேண்டியதில்லை. கற்பனை ஆற்றலற்று காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. 'நெஞ்சினிலே' பாடலையும் 'பூங்காற்றிலே' பாடலையும் கேட்க நினைக்கிறவர்கள் ஒடியோவில் கேளுங்கள். மணிரத்தினம் தனது வளர்ச்சி நிலையை இப்படத்தில் காண்பித்திருக்கின்றார். ஈரடி பின்னால் போயிருக்கிறார். சந்தோஷ்சிவன், ரஹ்மான் போன்றவர்கள் இருந்தும் மணிரத்தினத்தால் இப்படித்தான் படம் கொடுக்க முடியுமானால் அது துரதிஷ்டமானது தான்.

மணிரத்தினம் உயிரே படத்தில் தனது நிலையிலிருந்து கீழே இறங்கியிருக்கிறார் என்று தான் இறுதியாகச் சொல்லமுடியும்.

சினிமா

யமுனா ராஜேந்திரன்

# தாய்நிலத்திற்கு அழைத்துச் சென்ற

துயர் சூழ்ந்து தடுமாறும் அவலமான அகதி வாழ்வு, புலம் பெயர் மண்ணில் இடர்களின் நடுவிலும் இயந்திரத் தனமாய் சுழன்று கொண்டேயிருக்கும். தாயகச் செய்திகள் நெகிழ்ச்சியையும், போரின் வெற்றிகள் புத்துணர்ச்சியையும் அவ்வப்போது அளிப்பதோடு சரி. அடுத்த நிமிடமே, கவி அடிமைகளாய் கோப்பை கழுவுவதும், காலையும் மாலையும் 'கூட்டல் பெருக்கலுமாய்' அவரவர் வாழ்க்கை அழுது வடியும்.

எம் இறுக்கமெல்லாம் தளர்ந்த நாள், நெருக்கடிகள் நிறைந்த எமது நாளாந்த வாழ்வுச் சூழ் வைப்புடைத்து மனம் நிறைந்த மகிழ்வோடு, இயல்புகள் இலைப் பாறுவதற்காய் அமைந்துத்தரப் பட்டிருந்த ஒரு அரிய சந்தர்ப்பமாயிருந்தது, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட தமிழர் விளையாட்டு விழா.

30.08.98 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் தமிழீழ தேசியக்கொடியை தமிழர் புனர்வாழ்வுக் கழக பொறுப்பாளரும், பிரெஞ்சு தேசியக் கொடியை பிரான்ஸ் நகரசபை உறுப்பினர் திரு. அலன் ஆவந்தல் அவர்களும் ஏற்றிவைக்க, மைதானம் தேசிய கீதத்தால் உயிர்த்தது. அதைத்தொடர்ந்து அமைதி வணக்கத்துடன் அன்றைய பொழுது தொடங்கியது.

'நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்!' போன்றதை ஒலி பெருக்கி 'ஸ்தாஸ்' மைதானம் முழுவதும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. எம்.ஜி.ஆர். மகேந்திரனுடன் ஹரிகரனும், உன்னிகிருஷ்ணனும் கூட காற்றில் தவழ்ந்து மைதானத்தில் இலகு நிலையை ஏற்படுத்தினர்.

ஞாயிற்றுக்கிழமைகளில் கூட இரத்தத்தை அட்டைகளாய் உறிஞ்சும் முதலாளிகளின் அவலங்களிலிருந்து, ஒரு நாளேனும் விடுதலையான உவகையும் உணர்வு பலர் முகங்களில் தெரிந்தது. எப்போதும் தாய் மண் பற்றாளர்களாகவும், நாங்கள் தமிழர்கள் என்றும் பெருமையுடனும் நின்றிருந்தவர்களையும்; போராட்டத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை என்று துண்டிப்பவர்களையும் ஒருங்கே இங்கு காண முடிந்தது.

இயல்பாகவும், எளிமையாகவும், சந்தோஷமாக சிரித்துப் பேசிக்கொண்டும் மக்கள் கூட்டம் கூட்டமாக மைதானம் முழுவதும் விளையாட்டுக்களைப் பார்த்து ரசித்துக் கொண்டு தம் வீட்டு முற்றத்தில் நிற்கும் உணர்வுச் சுதந்திரமாக உலாவிக் கொண்டும் ஆங்காங்கே குழுக்களாக உட்கார்ந்துகொண்டும் இருந்தனர்.

கோவில் திருவிழா நாட்களில் எம்மண்ணில் ஏற்படுமே! அப்படியொரு மகிழ்ச்சி; கொண்டாட்டங்களின் போது எம்மில் குடிகொள்ளுமே, அப்படி ஒரு குதூகலம்! சோகத்தின் சுவடுகளேயில்லாமல் அத்தனை முகங்களும் பூரிப்பில் மொய்த்திருந்தன.

புலம்பெயர்ந்து வளரும் பிள்ளைகள் பலருக்கு பல புதிய தமிழ் உணவுகளை அறிமுகப்படுத்தியது 'தமிழீழ உணவகம்'. ஒடியற் கூழின் சுவையை ரசித்து, ருசித்து புசித்தவர் ஏராளம். அப்பம் வாங்குவதற்காக வரிசையில் நின்ற அனைவருக்கும் அப்படி ஒரு பொறுமையா? இல்லையில்லை, அப்பம் அவ்வளவு ருசி! கொத்து ரொட்டி கொத்தும் சத்தம் மக்கள் அனைவரையும் கூவிக்கூவி அழைத்தது. ரோல்ஸ், கோழிக்கால் பொரியல், சுண்டல், போளி, கட்லட், சூசியம், போண்டா, இன்னும் எவ்வளவோ.. ஒவ்வொன்றின் ருசியும் ஒவ்வொரு விதமாய் நாக்கில நீர் ஊறவைத்தது. பல பழங்களைச் சேர்த்து உடன் தயாரிக்கப்பட்ட பழரசக் குளிர்மையும் சத்தும் ஊட்டுவதாய் வித்தியாசமாக இருந்தது.


தத்தித் திரிந்த இளம் தளிர்கள் 'தலையணைப் பாய்ச்சல்' பாய்ந்தன. பாதி எழுந்த நிலையிலும், குனிந்தநிலையிலும், முழுதாய் குதித்த தலையணையுமாய்.. ஒவ்வொரு தலையணையும் ஒவ்வொரு விதமாய்..

சிறுவர் சிறுமியர் தடைதாண்டி ஓட்டத்தில் அடைந்த மகிழ்ச்சி அதிகம். வாழ்வில் தம்முன்னே உள்ள அனைத்துத் தடைகளையும் தாண்டி ஓட வேண்டியவர்கள்.. இனவெறி அரக்கர் இங்கே ஓடி வந்தவர் பெற்றோர்; ஆனால் இங்கே இவர்களைத் துரத்துகின்றது நிறவெறி. தேசிய விடுதலையையும் வரை எமக்கெதிராய் உள்ள தடைகள் எல்லாம் தாண்டிப்போட இது ஒரு சிறு பயிற்சியோ!


தாயகத்தின் யதார்த்த வாழ்வைப் பிரதிபலித்தமை சிறுவர், சிறுமியர் கண்முன்னே நிறுத்தினர். யதார்த்தத்தை 'விநோதமாக' விநோத உடைப்போட்டியிலேயே சிறுவர்கள் பார்த்து அறிய வேண்டியிருந்தது கவலையைத்தான் அளித்தது. என்று எம் தாய் நாடு திரும்பி இவை யாவையும் நேரில் கண்டு களிப்போம் எனும் ஆதங்கம் எழுந்தது.

எமது பாரம்பரிய தமிழ் விளையாட்டுக்கள் மண்ணின் நினைவுகளை உயிர்ப்போடு கொணர்ந்தன.

மண்ணைக் கிழித்துக் கிடப்பட்டிருந்த 'கிளிக்கோடு', விளையாட்டின் போது காற்றில் கலந்து சுவாசத்தில் புகுந்த புழுதியனை... தலையெல்லாம் புழுதிபட்டு 'கண்ணோரம் மண் கசிந்தது. விட்டுப் பிரிந்து வந்த அன்னை மண்ணும், பள்ளிநாட்களும் இதயத்தில் 'கூண்டுக்கிளியாய்' சிறகடித்தது.




தமிழர்கள் கூடும் இடம் எங்கும் அவர்கள் இருப்பை — பெருமிதத்தை — கௌரவத்தை பிரதிபலிக்கும் தேசியக்கொடி உயரப்பறக்கட்டும்!
இரு தலைமுறைகள் சந்தித்த தமிழர் விளையாட்டு விழாவில் எமது தேசியக்கொடி அவர்கள் வேர்களை பொதுமைப்படுத்தியது. தேசியக்கொடி எமது தேசத்தை பிரதிபலிப்பது. ஆயிரமாயிரம் கருத்துக்களை — ரசனைகளை — யதார்த்தங்களை உள்ளடக்கியதே தேசம்.



எமக்கே... எமக்கே என இழுக்கும் இரு பகுதியினரும்...

ஒடியற் கூழை ரசித்து ருசிப்பவர்கள் இவர்கள்...






தப்பாத குறியோடு தமிழர்கள்.. எப்போது விழும் எதிரி இலக்கு...



புகலிடத்தில் உருவாகும் தலைமுறை, தம் சூழலில் தாம் நுகரும் பண்பாட்டு பரிமாணங்களை உள்வாங்குகிறார்கள். இது ஒரு சமூக பொருளாதார பண்பாட்டு நியதி. பிரான்சில் நிலவும் வெகுசன கலைவடிவங்களை உள்வாங்கிய இளையதலைமுறைத் தமிழர்கள், ஆங்காங்கே கலைபண்பாட்டுக் குழுக்களை உருவாக்கி பிரான்சின் பிரதான நீரோட்டத்தில் கலந்துவருகின்றனர். பிரான்சின் தேசிய தொலைக்காட்சிகளும், நாளேடுகளும் இவர்களை அறிமுகப்படுத்துகின்றன. இவ்வாறான நடனக் குழுக்களின் ரசனைகளையும் விளையாட்டுவிழா உள்வாங்கி பரிசளித்தது.

# தமிழர் விளையாட்டு விழா




எதிராளியைத் தாக்குவது எமதிருப்பைக் காக்கவோ?



தத்திவரும் தவளைகள்...



எட்டியெட்டி அடிப்பது எதற்காக...?



மண்வாசனையை நுகரவைத்த கிளித்கோடு



ஈழநிலாவின் இசை மழையில் இளசுகளின் அபிநயங்கள்

வேடிக்கை நிறைந்ததாயிருந்த 'முட்டியுடைத்தல்' பல சிறுவர்களுக்கு விநோதமாகவும் இருந்திருக்க வேண்டும். கண்கொட்டாது பார்ப்பவர்களும், கைகொட்டிச் சிரிப்பவர்களுமாய் தம்மை மறந்து லயித்திருந்தது சிறுவர்கள் மாத்திரமல்ல.

எமது இடத்திற்கான சண்டை. இருப்பிற்கான சண்டை. நீயா? நானா? எனும் போட்டி. எனது இடத்தில் எப்படி நீ இருப்பாய்? - எனும் கோபம்; அடித்தே நான் விரட்டுவேன்- எனும் வீரம். 'தலையணைச் சண்டை'யில் எதிராளியை தலையணையால் தாக்கித் தாக்கி வீழ்த்தினர். வெற்றியின் போதெல்லாம் ஆரவாரித்து வீரர்களை உற்சாகமூட்டினர் பார்வையாளர்கள். தாயகத்தில் எமது இருப்பிடங்களை போராளிகள் வெற்றிகொள்ளும் போதெல்லாம் மக்கள் இப்படித்தான் புளகாங்கிதம் அடைந்திருப்பாரோ?

'கயிறிழுத்தல்' போட்டியில் சுயரூபம் தெரிந்தது. 'எமக்கே.', 'எமக்கே.' என இரு தரப்பினரும் இழுக்கும் ஒற்றுமையும் வலிமையுமே வென்றது. ஒற்றுமையாய் நாமெல்லோரும் விடுதலைத் தேரின் வடம் பிடித்து இழுப்போமானால் எம் சுதந்திர பூமியில் அது விரைவில் தடம் பதிக்கும் என்பதற்கு இதுவே நல்ல உதாரணம்.

நம்பிக்கையுடன் குறிவைத்தால் தவறாது என்பதை 'குறிபார்த்துச் சுடுதல்' இடத்தில் பலரும் நிரூபித்தனர். தாயக விடுதலைக்கு இதே குறியும் குறிக்கோளும் அனைவருக்கும் இருக்குமானால் நாளையே எதிரி எம் காலடியில்.

வெளியின் பின்னால் நின்று வேடிக்கை பார்த்த பெண்கள்
தாலிதான் தரும் வாழ்வு என்று தயங்கி நின்ற பெண்கள்
தலைவன் அணியில் தம்மை இணைத்து
தரணி போற்றும் காவியமாகும் இன்றும்கூட
வெளிநாடுகளில் பெண்கள் விட்டுஞான்மேலே..

ஆயினும் இங்கு ஆர்வமுடன் பங்குபற்றிய பெண்கள் அதிகம்.

உதைபந்தாட்டம், கிரிக்கெட், கரப்பந்தாட்டம், 'வலைப்பந்தாட்டம்' போன்ற போட்டிகளும் இடம் பெற்றன. விளையாட்டுக்களின் குறிக்கோள் என்ன? ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, பரஸ்பர புரிந்துணர்வு, வெற்றி தோல்விகளை சமமாக எடுத்துக் கொள்ளும் மனப்பக்குவம், உடற்பயிற்சியின் மூலம் ஏற்படும் மனஅமைதி, திடகாத்திரமான, ஆரோக்கியமான உடல் நிலை போன்றவற்றையே விளையாட்டுக்கள் எமக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஒரு மனிதனை நற்பண்புகள் நிறைந்த வீரனாக விளையாட்டுக்கள் மாற்றுகின்றன. விளையாட்டை விளையாட்டாகவே எடுத்துக் கொள்ள முதலில் நாம் பழகிக் கொள்ள வேண்டும். ஆனால் எம்மில் சிலருக்கு ஏன் இந்த அடிப்படை உண்மை அடிக்கடி புரியாமல் போகின்றது என்பது கேள்விக் குறியே!

மாலையில் ஈழநிலாவின் இசை மழையிலும், 'கூல் கைக்ஸ்' நடனக் குழுவினரின் மேற்கத்தேய பாணியிலான நடன விருந்திலும் மக்கள் களித்திருந்தனர். பாடலின்போது பார்வையாளர்களாய் இருந்த பல சிறுவர்கள் தம்மை மறந்து மேடையின் முன்னே வந்து ஆடினர். இன்னொரு புறத்தில் ஒருவர் மத்தளம் அடிக்க, ஆடிய பல பெரியோர்களும் பலரது கவனத்தை ஈர்த்தனர்.

வழக்கமாக போராட்டம் சம்பந்தமான எழுச்சி நிகழ்வுகள், உணர்வு பூர்வமான ஊர்வலங்கள் ஒன்றுகூடல்களையே கண்டிருக்கின்றோம். ஆனால் தமிழ் மக்கள் அனைவரினதும், பலதரப்பட்ட, வித்தியாசமான ரசனைகளுக்கும், விருப்புகளுக்கும் ஏற்ப நடைபெற்றதே இத் தமிழர் விளையாட்டு விழாவின் சிறப்பு.

அன்னிய மண்ணில் அன்னிய கலாச்சாரத்தில் தமிழர்களிடையேயிருந்து அன்னியப்பட்டுப் போய்க்கொண்டிருக்கும் எமது சிறுவர்களுக்கு, இவ்விளையாட்டு விழாவின் பின், ஒருமுறையேனும் எம தாய் மண்ணை மிதிக்க வேண்டும் எனும் ஆசை தோன்றியதை அறிந்து, இத்தமிழர் விளையாட்டு விழாவின் வெற்றியையே காட்டுகிறது. இப்படியொரு எண்ணம் இவர்களிடையே வரக் காரணமாயிருந்ததும், பலதரப்பட்ட ரசனையுடைய மக்களை ஒரே குடையின் கீழ் இணைத்ததுமான இவ் விளையாட்டு விழா நல்லதொரு போர்ஒத்திகை முயற்சியே.

தமிழர் கலைகளான கும்மி, கோலாட்டம், காவடியாட்டம், பொம்மலாட்ட மனிதன், குதிரையாட்டம், நாட்டுக்கூத்து, தெருக் கூத்து போன்ற நிகழ்வுகளும் இடம் பெற்றிருக்குமானால், தமிழ் முற்றத்திலேயே நின்றது போன்ற உணர்வு ஏற்பட்டிருக்கும்.

மற்றும் இசை நடன நிகழ்ச்சிகளின்போது பார்வையாளர்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தால் எல்லோரும் வித்தியாசமாகத் தத்தமது திறமைகளை வெளிப்படுத்தி ஆடிப் பாடி மகிழ்ந்திருப்பார்கள். அடுத்தவருட தமிழர் விளையாட்டு விழாவில் இவையனைத்தையும் எதிர்பார்க்கின்றோம்.

'மண்ணை நினைத்து மகிழ்ந்தாடிய பொழுது
இறந்தனவெல்லாம் எப்போதும் போல்
எம் நெஞ்சில் துயர் மூட்டும்!
நிகழ்கால மனிதர் நாம்
ஒன்றாய் இன்றிங்கு நாம்
கூடிக் களித்த நிகழ்வு,
என்றோ ஒருநாள் - எம்
தாயக மண்ணிலும்
நிகழாமலா போய்விடும்?'

எனும் ஏக்கத்தோடு ஏமாளமானோர், இந்தநாள் இன்னும் கொஞ்ச நேரம் நீடித்திருக்கக் கூடாதா என சூரியனைச் சபித்தபடி தற்காலிக நாட்டில், நீண்டும் நாளை தொடரவிருக்கும் இயந்திர வாழ்வை எண்ணி நொந்தபடி தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினர்.

- மீரா



# புலம்பெயர்ந்த பாதையில் பெண்களின் இடர்பாடுகள்...

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இப்படி எனது நாட்டிற்கே நான் திருப்பப்படுவேன் என அவ் அதிகாரிகள் கூறியதும் முதலில் என் ஞாபகத்திற்கு வந்தது கொழும்பிலுள்ள கம்மாரச் சிறைக்கூடமே. அதன் பின்தான் என் சகோதரர்கள் எனக்காகச் செலவு செய்த பணம்பற்றி யோசனை வந்தது. இப்பொழுது நான் இங்கிருந்து தப்ப வேணுமென்றால் அவர்கள் கேட்பது போல முழு உண்மையையும் சொன்னால் நல்லது போல் பட்டது. ஆனால் என்கூட இச்சிறைவரை வந்த இளைஞரின் முடிவு எதுவாக இருக்குமோ எனப்பயமாகவும் இருக்கவே, எனக்கு நீங்கள் கேட்பது எதுவும் புரியவில்லை என அவ் அதிகாரிகளிடம் சைகை மூலம் தெரிவித்தேன். ஆனால் அவர்களும் சளைக்கவில்லை. இயலுமானவரை தாமும் சைகை மொழிமூலமும் கையிலுள்ள உலகப்படத்தில் இலங்கைநாட்டையும் தங்கள் நாட்டையும் கோடிட்டுக்காட்டி நிறைய விளக்கங்களைத் தந்த வண்ணமே இருக்க, என்றாலும் எனக்கு எதுவும் விளங்கவில்லை என்பதே தொடர்ந்தது. இதன் பின் சிறிது நேரத்தில் அவ் அதிகாரிகள் போய்விட்டனர். ஒரு 2 மணித்தியாலயம் கழித்திருக்கும் மீண்டும் உள்ளே வந்து ஒரு பெண் பொலிஸ் அதிகாரி என்னைத்தன்னுடன் வருமாறு அழைக்கவே, அவருடன் என் அறைக்கு அப்பாலுள்ள சிறு அலுவலகத்தினுள் நுழைகிறேன். அங்கே ஏற்கனவே என்னை வந்து விசாரித்த அதிகாரி கையில் ஒரு தமிழ்ப் பெண் படமுடைய கடவுச்சீட்டை ஆராய்ந்த வண்ணம் இருக்கிறார். என்னைக் கண்டதும்தான் தாமதம் உடனே அதிலுள்ள பெண்ணின் படத்தையும் என் முகத்தையும் மாறி மாறிப் பார்த்து விட்டு அதிலுள்ள பெயரை வாசித்தார். உடனேயே எனக்கு ஞாபகம் வந்தது. காரிற்குள் வைத்து என்னை அழைத்து வந்தவர் தன் சகோதரியின் பெயரைத் தான் என் பெயரெனச் சொல்லச் சொல்லி இங்கு வரும் போது கூறியிருந்தார். ஆகவே அவர்கள் தாங்கள் சொல்வதின்படி உண்மையெனத் தான் நடந்துள்ளார்கள். அதாவது பிரான்சிற்கு சென்று தங்கள் சகோதரியினது கடவுச்சீட்டை எனக்காக இங்கு எடுத்து வந்துள்ளான் என்பது எனக்கு பூரணமாக விளங்கியது. ஆனால் அவர்கள் கேட்பதற்கு சாதகமான பதிலை என்னால் இப்பொழுதுசொல்ல முடிந்தும் வாயைத்திறக்கவே முடியவில்லை. காரணம் ஏற்கனவே எனக்கு அவர்கள் சொன்னது எதுவும் விளங்கவில்லையென்று நடித்துள்ளேன். எனவே என் மார்பில் கையை வைத்து அவர்கள் குறிப்பிட்ட கடவுச் சீட்டிலிருந்து வாசித்த அந்தப் பெயர் நான்தான் என்று தமிழிலேயே திரும்பத் திரும்பச்சொன்னேன். சிறிது நேரம் தமக்கிடையே ஏதோ கதைத்தவர்கள் மீண்டும் என்னை நான் இருந்த அறைக்கே அழைத்து வந்து உட்காரச் சொன்னார்கள். சிறிது நேரத்தில் என் உடை, பொருட்கள், கைப்பை எல்லாவற்றையும் என்னிடம் தந்து அணியுமாறு சைகையில் கூறவே நானும் அதன்படி செய்தேன். சற்றுநேரத்தில் முன்பே என்னிடம் வந்த பெண் பொலிஸ் அதிகாரி மீண்டும் வந்து என்னை அழைத்தார். அவர் செல்லும் இடங்கள் எல்லாம் நானும் கூடவே சென்று இறுதியில் சிறியபடிக்கட்டு வாயிலாக வெளிநிலப்பரப்பு ஒன்றுக்கு ஏறினேன். ஏறியதும் நான் பார்த்தால் என்கூட இங்கு சிறைவைக்கப்பட்டிருந்த இளைஞரும் சற்றுத்தள்ளி அங்கே நிற்கிறார். அவரைக் கண்டதும் தான் எனக்குச் சிறு நிம்மதியே வந்தது. சிறிது நேரத்தில் எங்கள் இருவரையும் ஒன்றாக அழைத்துச்சென்று ஏதோ மீண்டும் சில பதிவுகளைப் பண்ணியதும் சந்தோசமாக போய்வருமாறு கூறி வெளியே வீதிக்குச் செல்லும் கதவைத் திறந்து விட்டனர். நாங்கள் வீதிக்கு வந்ததும் முதலில் கண்ணில் பட்டது எங்களை அழைத்துச் செல்ல வந்த மற்றைய இளைஞர்கள் தான். அவர்கள் என்னைப்பார்த்ததும் என் பயம் நிறைந்த முகத்தைப் பார்த்து, 'சிறையில் பூத்த சின்னமலர் என்றது உங்களுக்குத்தான் பொருந்தும்' என்று ஆர்ப்பாட்டமாக வரவேற்றது இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. இதன்பின் தான் எதுவித சோதனைகளையும் அடையாமல் பிரான்சை வந்தடைந்தேன்.

(அடுத்த வாரம் இங்கிலாந்துவரின் பயணம்)

## அன்பென்ற அழகு தீபம் அன்னை திரேசா



உலகத்தின் சமாதானச் சின்னமொன்று
சிதறுந்து விட்டதா... இல்லை
அன்பென்ற சொல்லிற்கே அர்த்தம்
கொடுத்த
அழகு தீபம் தான் அணைந்து
விட்டதா...
கருணை ததும்பும் உங்கள் கண்களை
காலனவன் ஏன் காலமெனும் மூடினான்
அந்தோ — உங்கள் கைகளைப்பிடித்து வாழ்ந்த
ஏழைகள் விழிகளெல்லாம் ஏக்கமாய் அழுகின்றன
எப்படியம்மா — எப்படி உங்களால் மட்டும்
இப்படி வாழ்ந்து செல்ல முடிந்தது?
நாம் எப்படியும் வாழுவோம் என்ற — இந்த
அக்கிரமமான மனிதர்கள் முன்னே
நாம் இப்படியும் வாழலாம் என்ற
பெரும் வரலாற்றைப் படைத்தீரே...
பெண்கள் எம் குலத்திற்கே
பெரும் பெருமை சேர்த்த வெண்புறாவே
புவியில் இன்னும் ஒரு பிறப்பிருந்தால் மீண்டும்
எங்கள் வசம் அன்னை திரேசா ஆகவே பிறந்துவிடுங்கள்.

## இளவரசி டயானாவின் நினைவை முன்னிட்டு எடுக்கப்பட்ட தீர்மானங்கள்



அண்மையில் இளவரசி டயானாவின் ஓராண்டு நினைவையொட்டி 3 தீர்மானங்கள் பிரித்தானிய அரசால் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. அவையாவன: 3 [illegible] வெளியீடு செய்தல், [illegible] ஒவ்வொரு வருடமும் பாடசாலையில் சிறந்த புள்ளிகளைப் பெறும் மாணவர்க்கு டயானா நினைவுப் பரிசு வழங்குதல், இதோடு இளவரசியின் பெயரில் புதிய பூங்கா ஒன்றும் திறக்கப்பட வேண்டும் என்பவையே இவ் விசேட தீர்மானங்கள் ஆகும்.

# தாய்ப்பால் குழந்தைகளுக்கு ஆபத்தானது - ஐ.நா.சபை அதிர்ச்சி

நைல்நதி ஓரத்தில் சதுப்பு நிலங்களுடன் கூடிய சிறிய கிராமமே உகண்டாவில் உள்ள சாகுது கிராமம். சமீபத்தில் இக்கிராமத்தில் ஐக்கியநாடுகள் சபையினர் பரந்து பட்ட அளவில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டபோது, ஆபிரிக்காவில் எயிட்ஸ் கண்டறியப்பட்ட நாள் முதலாக இன்றுவரை 30 மில்லியன் மக்கள் எயிட்சினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 10 மில்லியன் மக்கள் இறந்துள்ளனர் என அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டுள்ளது. இறந்தவர்களில் 3 மில்லியன் குழந்தைகள் உள்ளடங்குவார்கள் எனவும், கடந்த ஓராண்டில் மாத்திரம் புதிதாக 6 லட்சம் குழந்தைகள் எயிட்ஸினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் அதிகமானோர் தாய்ப்பாலில் இருந்தே எயிட்ஸ் கிருமிகளைப் பெற்றுள்ளார்கள் எனவும், பிறக்கும் குழந்தைகளில் 27 வீதமானோர் எய்ட்ஸினால் பாதிக்கப்பட்டுள்ள தாய்மாருக்கே பிறக்கின்றன எனவும் திடுக்கிடும் தகவல்கள் அறியப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் எயிட்ஸ் கிருமிகளினால் பாதிக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான தாய்மார், உடனடியாக பாலூட்டுவதை நிறுத்த வேண்டுமென அறிவித்துள்ள ஐ.நா.சபையின் உலக சுகாதார மையம் அதற்கு மாற்றீடாக புட்டிப்பால் பற்றிய அறிமுகத்தினையும் செய்துள்ளது.

தாய்ப்பால், புட்டிப்பால் என்பவற்றிற்கான விளக்கங்கள் பற்றியோ, A.Z.T. எனும் எயிட்ஸ் பராமரிப்பு முறைபற்றியோ போதிய அறிவின்மையுடன், அடிப்படை வசதிகளுக்கே கஷ்டப்படும் பொருளாதாரநிலையில் புட்டிப்பாலுக்கோ, A.Z.T பராமரிப்புக்கோ செலவுசெய்ய முடியாமல் இருப்பதுமே இவர்களின் குழந்தைகளின் மரணங்கள் அதிகரிப்பதற்கு காரணமாகவுள்ளது.

ஐநா அலுவலர்கள் ஒரு குழந்தைக்கான புட்டிப்பாலின் செலவானது, உகண்டாவின் கிராமங்களில் வருடாந்த வருமானத்தைப் போல் சராசரி 1.5 மடங்கு அதிகமானது எனக் கணக்கிட்டுள்ளதனால், இம்மக்களுக்கு புட்டிப்பாலுக்குத் தேவையான பால்மாவை வழங்குவதற்கான முயற்சிகளை எடுக்கவுள்ளனர்.

நல்ல சுத்தமான நீரினாலும், பொருத்தமான சுகாதாரம் நிறைந்த சூழ்நிலையிலும் தயாரிக்கப்படும் புட்டிப்பாலே ஆரோக்கியமானது எனக்கூறும் இவர்கள், சுத்தமான நீரினால் புட்டிப்பால் தயாரிக்கப்பட்டிருந்தால் அல்லது AZT பராமரிப்பு முறை சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இதுவரை 20,000 குழந்தைகளையாவது மரணத்திலிருந்து காப்பாற்றியிருக்கலாம் எனக் கூறுகின்றனர்.

தாய்ப் பாலூட்டுவதால், தாய் — பிள்ளை பாசம், உறவு வலுவடைவதாகக் கூறும் தமிழ்த் தாய்மாரிடையேயும், பாலூட்டுவதால் தமது உடல் அழகு கெட்டுவிடும் என எண்ணும் ஐரோப்பியப் பெண்களிடையேயுமிருந்து வேறுபட்டு, தாய்ப்பாலூட்டுவதால் குழந்தையின் உயிருக்கே ஆபத்து எமக்கு என அறியும் போது ஆபிரிக்கப் பெண்களினதும், அவர்களது குழந்தைகளினதும் நிலைமை மனச்சங்கடத்தை அளிக்கின்றதல்லவா!

# ஒரு ஆபிரிக்கப் பெண்ணின் தேர்வு


ஒரு பெண் தன் குழந்தைக்கு பாலூட்டுவதை தனது உரிமையாகக் கருதும் அதே வேளை, சமுதாயத்தினால் அது அவளது தார்மீகக் கடமையெனவும் வலியுறுத்தப்படுகின்றது. இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் எயிட்ஸ் ஒழிப்பு நிறுவனத்தினர், ஆபிரிக்க கிராமப்புறப் பெண்கள், தமது குழந்தைகளுக்குப் பாலூட்டுவதை உடனடியாக நிறுத்தும் பட்சத்தில், அக்குழந்தைகள் உயிர் வாழக்கூடிய அதிர்ஷ்டத்தைப் பெறுவார்கள் என அறிவித்துள்ளது.

உகண்டாவின் சாகுது கிராமப்பெண்களில் 95 வீதமானோரைப் போலவே, 20 வயதுடைய மார்கிரேட் பிருந்தி நான்யோன் கோவிற்கும், தான் எயிட்ஸ் கிருமிகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிந்த போது என்ன செய்வதென்றே தெரியவில்லை. எயிட்சுக்கு தனது இரண்டு சகோதரர்களைப் பலிகொடுத்ததன் மூலம் அதன் கொடூரத்தை மட்டும் அவள் நன்றாகவே அறிந்திருந்தாள்.

ஆனாலும் கூட, பிறந்து சில நாட்களேயான தனது மூன்றாவது குழந்தைக்கு, நாளாந்தம் பத்துத்தடவைகள் பாலூட்டும் இவள், தனது குழந்தைக்கு புட்டிப்பால் கொடுக்கக்கூடிய நிலையில் நான் தன் வாழ்நாளில் ஒரு போதுமே இருந்ததில்லை. அதேபோல் புட்டிப்பால் புகட்டுபவர்கள் எவரையுமே தான் தன் வாழ்நாளில் சந்தித்ததில்லை எனவும் கூறுகின்றாள். 'புட்டிப்பால் கொடுப்பதன் மூலம் உங்கள் குழந்தையின் உயிரைக்காப்பாற்ற முடியும் என்பதனால் இம்முறையைக் கையாளலாமே' என்றதற்கு, தனது மூத்த பெண்குழந்தையை அவ்வயையில் இழந்து விட்ட இவர் 'எனது கணவரையும், மிகவும் மோசமாக உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ள இரண்டாவது குழந்தையையும், வீட்டு வேலைகளையும் கவனித்துக்கொள்வதே மிகவும் சிரமம். இச்சூழ்நிலையில் தொலைவுக்குச் சென்று, தண்ணீர் எடுத்து வந்து, கொதிக்க வைத்து புட்டிப்பால் தயாரிப்பது மிக மிகச் சிரமம்' என்கின்றார். இவையாவையும் கையாள்வது மிகவும் கடினமான விடயமே. ஆனாலும் எனது குழந்தைக்காக நான் இதை முயற்சிக்கிறேன்' என கவலையுடன் கூறுகிறார்.

இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
செல்வி த. ஜெனித்தாவை பல்கலையும் கற்றுச் சிறப்புடன்
வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர
சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்



செல்வி வைதேகி தம்பிராஜா
வயது: 12 (02.12.85)
இடம்: London

லண்டனில் கடந்த 31.08.98 அன்று தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சம்மேளனத்தினரால் சிறுவர்களுக்காக நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் 3-ம் இடத்தைப் பெற்ற சித்திரம் இது.



பெயர்: பாஸ்கரன் சஞ்ஜீவன்
வயது: 09
இடம்: பிரான்ஸ்



தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்


## கவிதை முற்றம்

### அன்னை திரேசா



பிறந்த மண் அகன்று
பரந்த பாரதம் நாடி
அல்லலுறு வோரை ஒன்றிணைத்து
ஆச்சிரமம் அமைத்து சேவையாற்றி
காயமதில் நோய்வாய்ப் பட்டோரை
தாய் போல் பராமரித்து குணமாக்கி
இறை வார்த்தைகளுக்கு மதிப்பளித்து
இரவு பகல் அயராது தொண்டாற்றி
சமூகம் ஒதுக்கிய பிணியாளரை
மனமுவந்து ஏற்று, ஆறுதல் கூறி
தேறுதல் வார்த்தைகளை மருந்தாக்கி
மாறுதல் காட்டினாய் உள்ளங்களில்
அனாதைகளை அரவணைத்துத் தேற்றி
அம்மா என்ற சொல்லுக்கு பெருமை சேர்த்து
அன்பு வழி நின்று சமாதானப் பயிர் வளர்த்து
அகிலமே வியக்க சேவையின் சிகரமாகி
வெள்ளை உடையணிந்து
கள்ளமற்ற உள்ளத்தால்
மலை போல் குவித்த பட்டங்களை சிறிதாக்கி
மனித நேய வளர்ச்சியை குன்றாக்கி
ஆண்டவனை பிரார்த்தித்து உறங்கையில்
அவனோடு வாழ திடீரென சென்றதேனோ?
ஆண்டொன்று ஆனாலும் அழுத நீர் வற்றவில்லை
தவிக்கின்றனர் அன்னையே தரணியில் பலர்.

*ஏ.றி.இம்மானுவேல்*
*ஜேர்மனி*




## குட்டிக் கதை படிப்போம்

எழுதியவர்: கஜிநாத் தவம்
இடம்: என்னெப்பெற்றால், ஜேர்மனி



### அறிவுள்ள இரு ஆடுகள்

ஒரு சமயம் இரண்டு ஆடுகள் எதிரெதிர்த் திசையிலிருந்து வந்து ஒரு பாலத்தை கடக்க முயன்றன. பாலம் மிகவும் ஒடுக்கமான மரக்கட்டையால் ஆனது. ஒரு ஆடு மட்டுமே அதில் போகமுடியும். இரண்டு ஆடுகள் ஒரே சமயம் போகமுடியாத அளவு சிறிய பாலமாக இருந்தது.

இரண்டு ஆடுகளும் ஒன்றையொன்று முட்டிக் கொண்டு சண்டை போட்டுக் கொண்டன. பின்பு சற்று அசைந்தால் கீழே விழுந்து இறக்க நேரிடும் என்ற உண்மையை இரண்டு ஆடுகளும் உணர்ந்தன. இரு ஆடுகளும் நண்பர்கள் ஆயின. சமாதானமாக ஒரு முடிவு செய்தன.

அதன் பிரகாரம் ஒரு ஆடு மெதுவாகப் படுத்துக் கொண்டது. மற்றொன்று அந்த ஆட்டின் மீது ஏறி நடந்து பாலத்தைக் கடந்து சென்றது. பின்பு படுத்து உதவிய ஆடு எழுந்து பாலத்தைக் கடந்து சென்றது.

பார்த்தீர்களா! நமக்குள் சண்டையிட்டுக் கொள்ளாமல் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து போகும் மனப்பான்மை வேண்டுமல்லவா!

## உங்களுக்குத் தெரியுமா?



எழுதியனுப்பியவர்:
தெ. பிரியந்தா
வயது: 11
இடம்: Yverdon, Swiss

1. ஆங்கிலத்தில் போ தமிழில் வா இரண்டும் சேர்ந்தால் மரக்கறி அது என்ன?
   கோவா
2. வறுக்காத வறை எந்தவறை?
   ஏவறை
3. ஏறு ஏறு சங்கிலி இறங்கு இறங்கு சங்கிலி எட்டாத கொப்பெல்லாம் தட்டிவா சங்கிலி அது என்ன?
   அணில்
4. ஆங்கிலத்தில் ஓர் எழுத்தும் ஒரு புண்ணிய ஸ்தலம் ஒன்றின் பெயரும் சேர்ந்தால் தமிழில் ஒரு மாதம் அந்த மாதம் யாது?
   வைகாசி
5. கழுத்துண்டு தலையில்லை; கையுண்டு விரல் இல்லை; உடம்புண்டு காலில்லை அவர் யார்?
   சட்டை




எழுதியனுப்பியவர்:
தெ. பிரியந்தன்
வயது: 08
இடம்: Yverdon, Swiss

1. காய்க்காத பனை என்ன பனை?
   கற்பனை
2. மீன் ஓடுவதேன்?
   பிள்ளையின் கால் வளைவதேன்?
   பிடிப்பாரற்று
3. அல்லிப்பூ மலர்வது எதனால்?
   விதியை வெல்வது எதனால்?
   மதியினால்



அனுப்பியவர்:
ஜெலி தியாகராஜா
வயது: 08 (03.04.90)
இடம்: பாசல், சுவிஸ்



### அப்பா

* அப்பா வேலைக்குச் செல்வார்.
* அப்பா கடையில் மரக்கறி வாங்குவார்.
* அப்பா பழங்களும் வாங்குவார்.
* அப்பா பாடசாலைக்குக் கூட்டிக் கொண்டு போவார்.
* அவர் புத்தகம், மேசை, கதிரை, கற்பலகை, பென்சில் முதலியவை எல்லாம் வாங்கித் தருவார்.
* அப்பா மிதியுந்து வாங்கித் தந்தவர்.
* நானும் அப்பாவும் மாலையில் மிதியுந்தில் விரைவாக ஓடித் திரிவோம்.
* அப்பா நித்திரை செய்வார்.
* அப்பா மிதியுந்தில் வேலைக்குச் செல்வார்.
* அப்பா அன்பு உள்ளவர்.
* அப்பா மிக அன்பு உள்ளவர்.

# ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் கண்டியின் கடைசி மன்னன்

நாயக்க மன்னர் என்றால் நாங்கு நம்நினைவெல்லாம் மதுரை நாயக்கர், தஞ்சாவூர் நாயக்கர், செஞ்சி நாயக்கர் ஆகி யோர்களின் வரலாறுகள் தாம் நினைவுக்கு வரும். இவர்க ளைப் பற்றி வரலாற்று ஆசிரி யர்கள் ஓரளவுக்கு முழுமை யாக எழுதியுள்ளார்கள்.

ஆனால் இலங்கையில் உள்ள கண்டியில் தனி அரசு ஏற்படுத்தி நாடாண்ட மதுரை நாயக்க மன்னர்களின் வழித்தோன்றல் களை நாம் முழுமையாக அறிந் தோம் இல்லை. இலங்கை வர லாற்றை எழுதுபவர்களாகிலும் சரி, மதுரை நாயக்கர் வர லாற்றை எழுதுபவர்களாகிலும் சரி, கண்டியில் செங்கோலோச் சிய நாயக்க மன்னர்களின் வர லாற்றை யாரும் தெளிவாக அண்மைக் காலம் வரை எழுத வில்லை. இவ்வாண்டின் தொடக் கத்தில்தான் திருப்பதி வெங்க டேசுவரப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் எஸ். கோபாலகிருஷ்ணன் இவர்க ளது வரலாற்றை ஓரளவுக்கு முழுமையாக எழுதியுள்ளார்.

## கண்டி நாயக்க மன்னர்கள்

கண்டியை ஆட்சிபுரிந்த இலங்கை அரசன் ஸ்ரீவீரபராக்ரம நரேந்திர சிங்கன் கி.பி. 18-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆட்சி புரிந்தவன். அவனுக்குப் பின் கண்டிப் பகுதியை அரசாள, மதுரை நாயக்க வம்சத்திலி ருந்து தனது பட்டத்தரசியின் சகோதரனைக் கண்டிக்குக் கொண்டு சென்றான். அவ னுக்கு ஸ்ரீவிஜயராஜசிங்கன் என்று பெயர் சூட்டி ஆட்சிக்கட் டிலேற்றினான். இம்மன்னன் கி.பி. 1739 இலிருந்து 1747 வரை ஆட்சிபுரிந்தான். அவனுக்குப் பின்பு கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (கி.பி. 1747 — 82) ராஜாதிராஜ சிங்கன் (கி.பி. 1782 — 1798) மற்றும் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் (கி.பி. 1798—1815) ஆகியோர் கண்டி யில் அரசாட்சி செலுத்தினர்.

ஸ்ரீவிக்ரம ராஜசிங்கன்தான் கண்டி அரசின் கடைசி மன்னன். இவன் மிகவும் சிறந்த முறை யில் ஆட்சி செய்திருக்கிறான். அம்மன்னன் ஆட்சியின் தொடக் கப்பகுதி அமைதியான சூழ்நி லையிலும், இறுதிப்பகுதி போர் நிகழ்ச்சிகளிலும் கழிந்திருக்கின் றன. இலங்கை அரச வம்சத்தி னர் எவ்வாறு மதுரை அர சோடு தொடர்பு கொண்டிருந் தார்களோ அதே போன்று இம் மன்னனும் தொடர்பு வைத்தி ருந்தான். இம்மன்னனின் பட் டத்தரசியும் மற்றும் இரு அரசி களும் மதுரை நாயக்க வம்சத் தைச் சேர்ந்தவர்களேயாவர்.


## ஆங்கிலேயர் போர்

இம்மன்னனின் செல்வாக் கையறிந்திருந்த ஆங்கிலேய ஏகா திபத்தியம், தொடக்கக் காலத் தில் இவரோடு உறவு கொள்ள டிருக்கவே விரும்பியது. ஆனா லும் இம்மன்னனுக்குக் கண்டிக் குடிமக்களிடையே வளர்ந்து வந்த நன்னம்பிக்கையை அசை த்துக் கவனித்துவந்த ஆங்கில அரசு, இதை இப்படியே வளர விட்டால் தாங்கள் இலங்கை மண்ணிலேயே இருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுமோ என அஞ்சி, இம்மன்னனோடு போர்தொடுக்கக் காரணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தது. இலங்கைக் கடற்கரைப் பகுதியி லிருந்த வணிகர்களிடம் பாக்கு மூட்டைகளைக் கண்டி வேந்தன் கைப்பற்றியது தவறு என்று ஒரு தொண்டிக் காரணத்தைக் காட் டிக் கண்டி மன்னர் மீது போர் தொடுத்தது.

**சாளரம்**

இதை முன்னமேயே எதிர் பார்த்திருந்த விக்கிரமராஜசிங் கன் கண்டியைவிட்டு தம் அரசி யர் மற்றும் உறவினர்களோடு வேறொரு இடத்திற்குச் சென்று விட்டான். அரண்மனையை நோக்கி வந்த ஆங்கிலேயப் படையை எதிர்கொண்டு வர வேற்றது 'குரைக்கும் நாய்களின்' கூட்டமேயாகும்.

துரோகத் தளபதியின் உதவி யால் மன்னன் இருக்குமிடத்தை அறிந்துகொண்ட கும்பினிப் படை அவ்விடம் நோக்கி அதி வேகமாக முன்னேறியது. அத னையும் எதிர்பார்த்த விக்கிரம ராஜசிங்கன் அவ்விடத்தையும் விட்டு அகன்றுவிட்டார். பின் னர் ஆங்கிலேயப்படை விடுத்த அழைப்பை ஏற்று ஒரு உடன் படிக்கைக்கு விக்கிரமராஜசிங்கர் ஒப்புக்கொள்ள வேண்டியதா யிற்று. அதற்குப் பிறகு சில ஆண் டுகள் அமைதியாக ஆட்சி புரிந்




தார். திரும்பவும் ஆங்கிலேயர்க ளுக்கும் கண்டி மன்னர் விக் கிரமராஜசிங்கருக்கும் சச்சரவு மூண்டது. வழக்கப்படி மன்ன னும் அவரது குடும்பத்தினரும் அரண்மனையைவிட்டு வேறொரு பாதுகாப்பான இடத்துக்குச் சென்றுவிட்டனர். வழக்கம் போலவே இம்முறையும் ஆங்கி லேயப் படையை விசுவாசமான நாய்க்கூட்டமே வரவேற்றது.

## கண்டி மன்னன் கைது

பின்னர் மன்னனும் அவனது அரசமாதேவியர்களும் இருக் கும் இடத்தையறிந்து ஆங்கிலே யப்படை வேகமாக முன்னேறி யது. இம்முறை மன்னனால் அவர்களிடமிருந்து தப்பிக்க முடி யவில்லை. கும்பினிப் படை அவர்களைக் கண்டுபிடித்து அவர்களது ஆபரணங்களைப் பறித்துக் கொண்டு பன்றிகளைப் பிணைப்பது போலப் பிணைத் துப் பதுங்கியிருந்த இடத்தை விட்டு வெளியே கொண்டுவந் தது.

ஆங்கில உயர் அதிகாரிகள் இத்தகைய இழிந்தரமான செயல் களை அனுமதிக்கவில்லை. அவர் களுக்கு உடுக்க உடை அளித் துப் பட்டத்தரசிகளைப் பல்லக் கில் கொண்டு வரும்படி ஆணை பிறப்பித்தார்கள். கண்டி அர சன் உரிய மரியாதைகளோடு கௌரவிக்கப்பட்டான்.

அரசனும், அரசியரும் கொழும்புக்குக் கொண்டு செல் லப்பட்டு வீட்டுச் சிறைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட னர். பின்னர் அங்கிருந்து கப்பல் மூலம் தமிழகத்துக்குக் கொண்டு வரப்பட்டனர். கொண்டு வரப் பட்டவர்களில் மன்னனும், பட் டத்தரசிகளும் வேலூருக்கும், மற்ற உறவினர்கள் தஞ்சாவூருக் கும் அனுப்பிவைக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சி நடந்தது கி.பி. 1816 இல். வேலூரில் அமைதியாக வாழ்ந்து வந்த கண்டி மன்னர் விக்கிரம ராஜசிங்கர் 1832-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ம் நாள் மண்ணுலக வாழ்வை நீத் தார். அவரது அருமை மைந் தன் ரங்கராஜா கி.பி.1834 இல் உயிர் துறந்தார்.

## கல்லறைகள்

இவர்களது கல்லறைகள் இன்று வேலூரில் ஒரு ஒதுக்குப் புறத்தில் காணப்படுகின்றன. வேலூர் பஸ் நிலையத்திலிருந்து பழைய காட்பாடிச் சாலையில் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவு சென்றால் தோட்டப் பாளையம் என்னும் இடத்தை அடையலாம். இப் பகுதியின் பெயர் அருகைதம் பூண்டி என் பதாகும். இங்கு சுமார் 40 அடி சதுரத்தில் ஒரு சுற்று வளாயத் துள் ஏழுகல்லறைகள் காணப் படுகின்றன. அவற்றில் பெரி தாக இருப்பது கண்டி வேந்தன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் கல்லறையாகும்.

'கண்டி மஹாராஜா
ஸ்ரீ விக்கிரமராஜசிங்கர்
மரணம் 1832'

என்று எழுதப்பட்டுள்ளது. மேலும் இக்கல்லறை அம்மன் னனின் கொள்ளுப் பேரன் விக்ர மராஜசிங்கனால் 27.07.1932 இல் புதுப்பிக்கப்பட்டதாகத் தெரி கிறது. இதன் பக்கத்திலிருக்கும் இரு கல்லறைகளிலுள்ள கல் வெட்டுக்களிலிருந்து கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரமசிங்கரின் கொள்ளுப் பேரன் ஸ்ரீ.விரங்க ராஜா என்பதும் அவனது மனைவி சௌராஜலட்சுமி தேவி என்பதும் தெரிய வருகி றது. அதேபோல் ஸ்ரீவிக்ரமசிங்க ரின் மற்றொரு கொள்ளுப் பேரன் சி.கே.நரசிம்மராஜா என்பதும் உணரமுடிகிறது.

## கண்டி மன்னர் வாரிசு

மேலே கூறப்பட்டுள்ள மூன்று கல்லறைகளுக்குப் பின்னால் மூன்று கல்லறைகளும் ஸ்ரீ விக் ரம ராஜசிங்கரின் கல்லறைக்கு வலப்பக்கத்தில் சிறிது தூரத்தில் ஒரு கல்லறையும் காணப்படு கின்றன. இவை யாருடையவை என்பது அறிந்து கொள்ள முடி யாததாக இருந்தது. இக்கல்லறை களுக்குப் பக்கத்தில் வாழ்ந்து வரும் குடும்பத்தினரை விசா ரித்ததில் கண்டி மன்னரின் வழி வந்தவர்களில் ஒருவரான ஆர். பிருதிவிராஜ் என்பவர் அருகில் வசிக்கிறார், அவரைக் கேட் டால் முழு விபரமும் கிடைக் கும் என்று கூறினார்கள். அதன் அடிப்படையில் அவரைச் சந் தித்தபோது பல புதிய செய்தி கள் புலப்பட்டன.

கண்டி மன்னர்களின் பூர்வி கம் தஞ்சை மாவட்டம் பட்டுக் கோட்டை என்றும், சத்திரிய வம் சத்தவர் என்றும், சூரிய குலத்த வர்கள் என்றும், தெலுங்கு மொழி பேசுபவர்கள் என்றும் அறிய முடிந்தது.

கல்லறைகளில் நான்காவது, ஐந்தாவது, ஆறாவதாக உள்ளவை ஸ்ரீ விக்ரம ராஜசிங்கரின் மற்ற மனைவியருடைய எவை என்றும், ஏழாவதாகத் தனித்து இருப்பது ஸ்ரீ விக்ரம ராஜசிங்கரின் பட் டத்தரசி சாவித்திரி தேவியுடை யது என்றும் தெரியவந்தது. சாவித்திரி தேவி இலங்கையிலி ருந்து பயணம் வருகையிலேயே இயற்கை எய்தி விட்டதாகப் பிருதிவிராஜ் கூறினார். அவரது உடல் வேலூர் கோட்டைக்கு முன்வைக்கப்பட்டு பின்னர் தக னம் செய்யப்பட்டுச் சாம்பலைக் கொணர்ந்து இங்கு வைத்துக் கல்லறை எழுப்பப்பட்டது என் றும் தெரிவித்தார்.

ஸ்ரீ விக்ரம ராஜசிங்கரின் தம்பது அழகிய மணவாளசிங்கர் என்றும், அழகிய மணவாளசிங் கரின் தம்பி சி.கே.நரசிம்மராஜசிங் கன் என்றும், அவர் மனைவி ராஜ லட்சுமி என்றும் பிருதிவிராஜ் கூறினார். மேலும் விக்ரம ராஜ சிங்கர் சாவித்திரியை மணந் தார் என்றும் அவரையடுத்துப் பட்டத்துக்கு வந்தவர், அவர் மைந்தன் ஆ.விரங்கராஜா என் றும் அவர் ராஜலட்சுமியைத் திருமணம் செய்து கொண்டார் என்றும் பிருதிவிராஜ் புலப் படுத்தினார். பிருதிவிராஜ் 1936, இல் பிறந்தவர். இவருக்கு இரு புதல்வர்கள் உள்ளனர். ஒருவர் விக்ரமராஜா, மற்றொருவர் விஜ யதுமார். இவர் தான் வேலூரில் உள்ள இவர் வம்சத்தவர் கல்ல றைகளுக்குச் கண்ணாம்பு பூசிச் சுற்றுச் சுவரில் வடக்குப் பக்க முக்கிய வாயிலை அடைத்து விட்டு, தெற்குப் பக்கத்தில் சிறிய வாயில் ஏற்படுத்திச் சிறு கதவு அமைத்திருக்கிறார்.

இந்தக் கல்லறைகளைத் தமிழ் நாடு அரசு பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவித்திருக்கிறது. இவற்றைச் சிறந்த முறையில் பாதுகாக்கத் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையால் தக்க நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

நன்றி: தொல்லியல் நோக்கில்

# நாற்று

இளம் ஆக்கங்கள்


## அந்தோ அவலங்கள்..!

— இளம்பிறையனன்

சோறுமிலே கறியுமிலே, கஞ்சியிலே, கூழுமிலே
தொட்டுத் தின்ன சாறுமிலே
பணுமிலே றொட்டி தானுமிலே
படுக்கப் பாயுமிலே துணியுமிலே
சீனியிலே தேயிலையிலே தெருவிலே
ஆருமிலே அயலட்டை எங்குமிலே
குடியிலே கொட்டில் இலே குடியிருக்க
வழியிலே வாழவுமோ வக்கிலே
கேணியிலே கிணறிருந்தும் நீரிலே
நீரிருந்தால் பட்டையிலே வாளியிலே
இவையிருந்தால் கயிறிலே
எல்லாமிருக்குமிடம் தேடிப்போனால்
வசதியிலே வரிசையிலே நெடுநேரம்
அசதியுடன் நிற்கின்ற அவலங்கள்
நோயிலே நொடியிலே
படுத்து வீட்டால் மருந்திலே
மற்று வசதியுமிலே
மல்லியிலே மருந்தவிக்க
மருந்துக்கும் சரக்கிலே
கோயிலிலே குளமிலே
கும்பிடவோ வழியிலே
கும்மிருட்டில் வாழ்கின்றோம்
ஆருமிலே அகதிகட்கு துணையிலே
மண்ணிலே வைச்ச மரமிலே
தோட்டமிலே துரவிலே
வாட்டமுடன் வாழ்கின்ற வன்னித்
தமிழ் மக்களின்று அகதிகளாய்
அவலமுறும் அவலங்கள் ஆயிரமுதி
ஆரழுது என்ன பயன் அந்தோ தமிழினமே!

பிராங்பேர்பட் மாநகரில்

# ஆதவா ஆசியா சென்ரர்



**தங்க மாளிகை**

- ஜவுளியகம், நூலகம்
- விமானப் பயணச் சீட்டுக்கள்
- வீடியோ ஓடியோ விஷன்
- எவர் சில்வர் பாத்திரங்கள்
- மளிகைப் பொருட்கள்
- மரக்கறி வகைகள்
- கடலுணவுப் பொருட்கள்
- தொலைபேசி அட்டைகள்
- அன்பளிப்பு – அலங்காரப் பொருட்கள்

உங்கள் அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் மன நிறைவுடன் பூர்த்தி செய்ய நாடவேண்டிய ஒரே இடம்.


## Adavaa Asiya Centar

Taunusstr. 19, 60329 Frankfurt/Main
Tel: 069/250361 + 250362 / Fax: 069/234045
Travels - 069/92919139

நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம்

சூரிச் மாநகரில்

மரக்கறி + பலசரக்கு + மீன் +
றெடிமேற் ஆடைத் தினுசுகள் யாவும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்.






## Rajah Asiya Center

J. Gabrielpillai
Stauffacherstrasse 104,
8004 Zurich.
Tel: 01 242 42 60

பிரித்தானியாவில் ஆரம்பமாகிவிட்டது

# GNANAM Telecom Centers




| | | |
|---|---|---|
| *சிறீலங்கா | 1min | 0.35p |
| *இந்தியா | 1min | 0.30p |
| கனடா | 1min | 0.05p |
| அமெரிக்கா | 1min | 0.05p |
| ஜேர்மனி | 1min | 6p |
| பிரான்ஸ் | 1min | 0.06p |

| | | |
|---|---|---|
| லண்டன் Mobile | 1min | 0.15p |
| லண்டன் National | 1min | 0.03p |
| அவுஸ்திரேலியா | 1min | 0.08p |
| சிங்கப்பூர் | 1min | 0.20p |
| சுவிற்சர்லாந்து | 1min | 0.08p |

வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு. கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்

## GNANAM Telecom Centers

180 High Street North,
East Ham, London E6, U.K.
Tel: 0181-4708844 Fax: 0181-4708777

பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது லண்டனில் சகல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

* இரவு 6 மணி முதல் காலை 7 மணி வரை

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

## வேலை...

தள்ளினாள்.

அவர் எம்பி விழ சாயாமல் கையை ஊன்றிக் கொண்டார். தாயார் தகப்பனருக்கு இடையில் நடக்கும் இந்த விளையாட்டை என்ன என்று தெரியாமல், காம்பிலிருந்து முகத்தைத் திருப்பி அதிசயத்தோடு அவர்களை பார்த்தபோது குழந்தையின் தோளின் மேல் பால் சொட்டாமல் குழந்தையை இறக்கி விளையாட விட்டுவிட்டு செங்கம்மா திரும்பவும் பம்பரமாக இயங்க ஆரம்பித்தாள். கேப்பைக்களி கிண்டி கருவாட்டுக் குழம்பு செய்தாள். ஊர் பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் சுமந்து கொண்டு வந்து பானைகளிலும் தொட்டிகளிலும் நிரப்பினாள். ஒருநாளைக்குத்தான் கிராமத்தில் சம்சாரி வீட்டுக்கு எத்தனை குடங்கள் தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கிறது. எருமை மாடுகளுக்கும், பசுமாடுகளுக்கும் உழவுகாளைகளுக்கும் நாளொக்கு ரெண்டு தரம் குடிக்க தொட்டி தொட்டியாய் தண்ணீர் வேண்டும். குழந்தைகள் பெரியவர்கள் குளிக்கணும், குடிக்க, கைகால் முகம் கழுவ, பண்டபாத்திரங்கள் கழுவ, சை; சன்னத்தண்ணீராக சுமக்க வேண்டியிருக்கிறது. நாகையாவுக்கு வேலையில்லாத நாட்களிலும் மனசு ஆரோக்கியமுள்ள நாட்களிலும் அவளோடு சேர்ந்து தண்ணீர் சுமப்பார். கோடை நாட்களில் - கடும் தண்ணீர் கட்டுப்பாடு உள்ள காலத்தில் - சுமந்தே தீரவேண்டும். இதனால் அவளுக்கு உச்சம் தலையில் ஒரு ரூபாய் அகலத்தில் பொட்டல் விழுந்துவிட்டது.

அனைவரும் குளிக்க பெரிய மடாவில் வெந்நீர் காய்ச்சி முடித்தது. கூட்டில் அடைய வந்த கோழிகளுக்கு தவிடுபோட்டுப் பிசைந்த கம்மஞ்சோறு வைத்தாள். நாய்க்கு சோறு போடப்பட்டது. கறவை மாடுகளில் பால் கறந்தாள். பூனைக்கு பாலும் சோறும் கலந்து வைத்தாள். குழந்தைகளை குளிப்பாட்டி, புருஷனுக்கு முதுகில் அழுக்குத்தேய்த்து விட்டு. வேலைக்காரர்களுக்கெல்லாம் சோறுபடைத்து. பிச்சைக்காரர்களுக்கெல்லாம் போட்டு, யாவரும் உண்டு படுத்த பிறகு செங்கம்மா குளித்து, சாப்பிட்டு அடுப்பங்கூடத்தை ஒதுங்கவைத்து, காய்ச்சி ஆறிய பாலை இதம்பார்த்து, உரைகுத்தி, மாடுகளுக்கெல்லாம் ஒருதரம் கூளம் போட்டுவிட்டு வந்து படுக்க வர ஊர் அரவம் ஒடுங்கிவிட்டது.

புருஷன் பக்கத்தில் வந்து படுக்கையை விரித்தாள். லாந்தரை சுருக்குவதற்கு முன் நாகையா அவளை ஒருதரம் பார்த்தார். அந்த முகத்தில் துளிகூட களைப்போ ஆயாசமோ இல்லை. எப்படி அவளால் இப்படித் திகழ முடிகிறது? அந்தக் கணத்தில் அவருக்குப் பளிச்சென்று மனசில் ஒன்று தட்டுப்பட்டது. 'நாம் வாழ்க்கை வேறு வேலை வேறு என்று நினைக்கிறோம். இவளோ வேலையே வாழ்க்கையாக விளங்குகிறாள்' தன்னருகே தலைசாய்த்த தன் மனையாட்டியை இறுகப்பற்றி முகர்ந்தார். பூசப்பொடியோ சோப்பு வாடையோ முதலிய எதுவும் இன்றி சுபமான, தனிமனித வாடைதான் அவளிடம் இருந்தது.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## தமிழ்...

**அமைப்புக்கள் அரச சார்பற்ற நிறுவனமாகத்தானே இருக்க வேண்டும்?**

பதில்:- உண்மைதான்! ஆயினும் அவை செயற்படுவது சில அரசாங்கங்கள் சார்பாகத்தான். இன்று சமூகத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் காட்டும் அக்கறையை விட அவை சொா ஆக்கிரமித்துள்ள நிலத்தில் காட்டும் அக்கறை கூடுதலாக உள்ளது. இதற்கான சரியான பதிலை வரவழைக்க வேண்டியது புகலிட நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் கையில் தான் உள்ளது.

**கேள்வி:- அதை எப்படிச் சொல்கின்றீர்கள்?**

பதில்:- நாம் எந்த ஒரு மனித உரிமை மீறல்களையும் அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாது. இன்று மனித உரிமைகள் உடாகுடி செம்மணியில் புதைக்கப்பட்ட 400 பேரைப் பற்றி சபையில் கதைப்பதற்கு எங்களுடைய அரசியல்வாதிகள், சபை உறுப்பினர்களைத் தூண்டவில்லை. அவர்கள் என்ன கூறுகின்றார்கள் என்றால், அரசியல் தீர்வுக்கு விடுதலைப் புலிகள்தான் முட்டுக்கட்டையாக உள்ளார்கள் என்று எமக்கு வேண்டியவை எல்லாம் - ஸ்ரீலங்காவில் தமிழ் மக்கள் ஏன் தம்முடைய உயிருக்கு உரிமை இல்லாதவர்களாக வாழவேண்டும் என்பதுதான்!

இன்று அரசியல்வாதிகள் ஸ்ரீலங்கா பாராளுமன்றத்திலும் சரி வெளியுலக அரங்குகளிலும் சரி, இவ்விவகாரம் தொடர்பாக விவாதிக்காமல், விண்ணப்பம் செய்யாமல் இருப்பது பெரிய மனவருத்தத்திற்குரியது. ஐ.நா. சபையின் அங்கத்தவர்கள் சொல்கிறார்கள் - அரசியல்வாதிகள் ஒரு அரசியல் தீர்வுக்கு வர வேண்டும் என்று. ஆகவேதான் நாம் அதற்கு கூடுதலான முக்கியத்துவம் கொடுத்துப் பேசினோம்.

என்னைப் பொறுத்தவரை அரசியல் தீர்வல்ல முக்கியம் தமிழ் மக்களுடைய உயிருக்கு ஆபத்து வரக்கூடாது. அவர்களுக்கு உயிர் வாழும் உரிமை உண்டு. அவ்வுரிமையை யாரும் தடுக்க முடியாது. எந்தச்சட்டத்திலும் மனித உயிரைப்பறிப்பதற்கு அதிகாரம் இல்லை. இதைத்தான் நான் வலியுறுத்துகிறேன். அரசியல் தீர்வு ஒன்றைப்போ அல்லது இதைப்பற்றியோ நான் எப்பொழுதும் கதைப்பதில்லை.

**கேள்வி:- தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக மனித உரிமை அமைப்புக்கள் போதிய கவனம் செலுத்தவில்லை எனக்கருதுகிறீர்களா, அல்லது கவனம் செலுத்தியும் எவ்வித ரீதியில் எடுபடவில்லை என்று கருதுகிறீர்களா?**


பதில்:- மனித உரிமை அமைப்புக்களோ அல்லது ஒரு ஸ்தாபனமோ தனியாக இதை செய்து முடிக்க முடியாது. இதற்கு உறுதுணையாக அனைத்து தமிழ் மக்களும் ஒட்டுமொத்தமாக ஒருமுகமாக குரல் கொடுக்க வேண்டும். சிங்கள அரசு தமிழ் மக்களின் உயிரை மதிக்கின்றது இல்லை என்பது அனைவருக்கும் தெரியும். இதற்கு அரசியல் பேசவேண்டிய அவசியமில்லை.

**கேள்வி:- வெளிநாட்டில் உள்ள புலம்பெயர் தமிழ் மக்களின் தற்போதைய பணிகள் எவ்வாறு உள்ளன?**

பதில்:- ஒற்றுமையாக ஒரே வழியில் இருக்க வேண்டும். ஆனால் நான் அரசியல் பேசிக்கொண்டு, மனித உரிமை பேச முடியாது. இன்றைய நிலைமையில் ஸ்ரீலங்காவின் அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும். இதில் அரசு விசாரணை வைக்காது விட்டால் அரசைவிட்டு விலகிப் போகிறோம் என்று அறிவிக்க வேண்டும்.

**கேள்வி:- ஆர்மேனியாவில் முதலாம் உலகப்போரில் நடைபெற்ற படுகொலைகளை, அங்குள்ள அனைவரும் ஒன்றிணைந்து கிட்டத்தட்ட 60 ஆண்டுகளின் பின் இன்று மனித உரிமை அமைப்பில் ஏற்க வைத்து இன்று அதற்கொரு நீதியைப் பெற்றுள்ளார்கள். எமது நாட்டிலும் 1958 தொடக்கம் மிகப்பெரிய அவலங்களுக்கு உட்பட்டு படுகொலைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகிறோம், ஏன்? நாம் எங்களையும் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களாக உலக அரங்கில் தெரியப்படுத்தி ஒரு நீதியை, மனித உரிமை அமைப்புக்களுடைய வேலையை, திட்டத்தை நாங்களும் வைத்திருக்கக் கூடாதா, அப்படி வைத்திருந்தால் எமக்கும் நீதி கிடைக்கும் என்று நம்புகின்றீர்களா?**

பதில்:- கட்டாயமாக அப்படிக் கிடைக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய நோக்கம். அது ஒரு பாரிய திட்டம். இதை ஒரு மனித உரிமைக் குழுவோ, ஒரு ஸ்தாபனமோ செய்ய முடியாது. அனைத்து தமிழ் மக்களும் ஒன்றிணைந்து ஒரே ரீதியாக உலகம் முழுவதும் நெரிய வரும்வரை ஆகவேண்டிய நடவடிக்கை அனைத்தையும் எடுக்க வேண்டும் என்பதுதான் எனது அடிப்படை வேண்டுகோள்.







எங்கும் கிடைக்கிறது

Marketed & Distributed

Ayngaran Limited
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
E-mail: bhasky@aol.com

BHASKY







போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரையை பார்த்து வாங்குங்கள்

# புலம்பெயர் மரணங்கள் - தற்கொலைகள் - கொலைகள்

## ஒரு சிறப்பு புலனாய்வுத் தொடர்

அந்தச் சிறுமியின் பெயர் கௌசல்யா. வயது 12. ஜேர்மனியின் தென்பகுதியிலுள்ள சிறு நகரமொன்றில் தனது தாய் தந்தையாருடன் வசித்து வந்த அந்த சிறுமியை அவளது வீட்டின் சுற்றாடலிலுள்ள எல்லோருக்கும் பிடிக்கும். எல்லோரும் என்று சொல்லுகின்ற போது ஜேர்மனியர்களையும் சேர்த்துத்தான்.

அந்தச் சிறுமியின் சுறுசுறுப்பும் சுட்டித்தனங்களும் அதே நேரத்தில் வயோதிபர்களுக்கு உதவுகின்ற தன்மையுமே அவளை எல்லோரும் விரும்புவதற்கு காரணமாகும்.

பாடசாலை நேரங்கள் தவிர்ந்த மிகுதி நேரங்களில் யாதாவது ஒரு வீட்டில் அவர்களுக்கு உதவும் விதத்தில் ஏதாவது ஒரு வேலையை அவள் செய்து கொண்டிருப்பாள்.

வயோதிப காலத்தில் பிள்ளைகளின் துணையின்றி தனிமையில் வாடிக்கொண்டிருக்கும் மூதாட்டிகளுக்கும் உதவி செய்வதில் அவளுக்கும் விருப்பம் அதிகம்.

அவர்கள் அன்பாகச் சொல்லித் தடுத்தாலும், வீடு மற்றும் சமையலறைகளை சுத்தம் செய்ய உதவுவது, தோட்டத்தை செப்பனிட உதவுவது, கடைக்கு கூடச் சென்று வருவது, இப்படியான செயல்களால் அவள் அவர்களின் பேரக் குழந்தை போல் ஆகிவிட்டாள்.

இப்படிப்பட்ட அன்பான துடிப்பான அந்தச் சிறுமி ஒரு நாள் இறந்து போன போது அந்த வட்டார வாசிகள், தங்களது பிள்ளை இறந்து விட்டது போல் கலங்கித் துடித்துப் போய் விட்டார்கள்.

அவர்களுக்கு அந்தச் சிறுமியின் பெற்றோர்கள் மீது வெறுப்பும், ஆத்திரமும் ஏற்பட்டது. சிலர் அந்தப்பெற்றோர்களுக்கு குடியிருக்க வீடு கொடுத்த வீட்டுரிமையாளரிடம் அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றும் படி வற்புறுத்தினார்கள்.

வேறு சிலர் அந்த பெற்றோர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும்படியும், அவர்களை அந்த நகரத்தைவிட்டு வெளியேற்றும்படியும் அந்த நகர முதல்வருக்கு கூட்டாகக் கடிதம் எழுதினார்கள்.

பிள்ளையை இழந்த பெற்றோர்களுக்கு ஆறுதல் சொல்வதைவிடுத்து எதற்காக அந்த பெற்றோர்கள் மீது அந்த வட்டார வாசிகள் இவ்வளவு ஆத்திரப்பட்டார்கள்?

அந்தச் சிறுமியை, அந்தப் பெற்றோர்கள் கொலை செய்து விட்டார்களா என்ன? ஆம்! அந்த வட்டார வாசிகள் அப்படித்தான் நினைத்தார்கள். எந்தப் பெற்றோராவது தாங்கள் பெற்றெடுத்த பிள்ளையை 'சுய புத்தியோடு' கொலை செய்ய முனைவார்களா? இது என்ன கொடுமை!

நடந்தது வேறொன்றுமில்லை 'மதம்' பிடித்த யானை, மனிதர்களை மிதித்துக்கொல்வதுபோல 'மதம்' பிடித்த பெற்றோர் தங்கள் பிள்ளையை ஆண்டவரிடம் அனுப்பிவிட்டார்கள்.

அந்தச் சிறுமி கௌசல்யாவுக்கு திடீரென்று 'சளிக்காய்ச்சல்' தொற்றியிருந்தது. அதிதீவிர இந்துக்களாக இருந்து ஜேர்மனிக்கு வந்த பின் மதக்குழு ஒன்றினால் கர்த்தரின் விசுவாசிகளாக மாற்றப்பட்ட அவளின் பெற்றோர்கள், அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. காலையும் மாலையும் கர்த்தருக்கு தவறாது தோத்திரம் செய்வதன் மூலம் நோய் மாறிவிடும் என்று நம்பினார்கள்.

குறைந்த பட்சமாக நான்கு ஐந்து நாட்களில் மாறிவிடும் அந்தக் காய்ச்சல் ஒரு வாரமாகியும் மாறவில்லை. அதன் வேகம் இன்னும் அதிகரித்திருந்தது. அந்த நிலையிலும் அவளை வைத்தியரிடம் அழைத்துச் சென்று காட்டுவதற்கு அவளின் பெற்றோர்களை பிடித்திருந்த 'மதம்' இடந்தரவில்லை. அவர்கள் தங்கள் மதகுருவை அழைத்து வந்து தோத்திரம் சொல்லி நோயை குணப்படுத்த முயன்றார்கள்.

கௌசல்யா நோய் வாய்ப்பட்டிருக்கின்றாள் என்பதை அறிந்து அயலிலுள்ளவர்கள் வீடு தேடிவந்து அவளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் படி வற்புறுத்திய போதும் அவளின் பெற்றோர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை.

அயல் வீட்டுக்காரரான ஜேர்மனியர் இவர்கள் செய்யும் பைத்தியக்காரத் தனத்தைப் பொறுக்க முடியாமல், அவசர வைத்தியப் பிரிவுக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து விட்டார்.

அவர்கள் அம்புலன்ஸில் விரைந்து வந்து கதவு மணியை அழுத்திய போது, தங்கள் வீட்டில் ஒருவரும் சுகயீனமாய் இல்லை. உங்களுக்கு யாரோ தவறான தகவல் தந்து விட்டார்கள் என்று முகத்திலடித்தாற் போல் சொல்லி, அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

அவர்கள் அங்கு வந்ததற்கான செலவை, அவர்களுக்கு அழைப்பு விடுத்த ஜேர்மனியரே செலுத்தினார்.

கடைசியில் நோய் முற்றி சன்னிபாக்கி வலிப்பெடுத்து வாயால் நுரைதள்ளி கௌசல்யா இறந்து விட்டாள்.

'மதம்' பிடித்த பெற்றோர் தங்கள் மகள் கர்த்தரிடம் சென்று விட்டதாக 'சமாதானம்' சொல்லிக்கொண்டாலும், அயலவர்களைப் பொறுத்தவரை மருத்துவ வசதி உள்ள ஒரு நாட்டில், தங்கள் முன்னால் ஒரு குழந்தை, நோய்க்கு மருத்துவம் செய்யப்படாமல் அநியாயமாகக் கொல்லப்பட்டு விட்டதே என்று ஆத்திரப்பட்டார்கள். இதுவே அவர்கள் அந்தப் பெற்றோர்களை தங்கள் நகரத்தை விட்டு துரத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதற்குக் காரணமாக இருந்தது.

கௌசல்யாவின் பெற்றோரான சேதீஸ்வரனும் பரிமளாவும், யாழ்குடாநாட்டில் வலிகாமம் வடக்குப்பகுதியைச் சேர்ந்தவர்கள்.

### அகதி வாழ்வின் அவலங்கள்

1970களின் பிற்பகுதியில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு விரதமிருந்து 7 செவ்வாய்க்கிழமைகள் தொடர்ந்து சென்றால் திருமணமாகாதவர்களுக்கு திருமணம் நடக்கும் என்ற ஐதீகத்தின் படி அதை நம்பி தொடர்ந்து சென்று அந்தக்கோவிலேயே இருவரும் கண்களால் பேசிக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள்.

துர்க்கை அம்மனின் அருளால் தாங்கள் ஒன்று சேர்ந்ததால், அம்மன் மீது அவர்களுக்கு தீவிரமான பக்தி இருந்தது. அந்தப்பக்தியின் காரணமாக மாமிசம் உண்பதையே கைவிட்டு, தங்கள் மகளுக்கு அம்மனின் பெயரையே வைத்தார்கள். அவர்களுக்கு கௌசல்யாவுக்குப்பின் இரண்டு ஆண் பிள்ளைகள் பிறந்திருந்தார்கள். அவர்களுக்கும் மகேஸ்வரன், கணேஸ்வரன் என்று இந்த தெய்வங்களின் பெயர்களையே வைத்திருந்தார்கள்.

இந்திய இராணுவ நடவடிக்கை காலகட்டத்தில் ஊரிலிருந்து வெளியேறி, ஜேர்மனிக்கு வந்தபின், தற்போது இந்த சிறு நகரத்துக்கு அருகிலுள்ள பெரிய நகரமொன்றில் தங்கியிருந்தார்கள். வந்த மூன்று வருடத்தில் அவர்களுக்கு வதிவிட அனுமதி கிடைத்துவிட்டது. முதலில் சிறு சிறு வேலைகள் செய்து வந்த போதிலும், பிறகு பெரிய அளவுக்கு சம்பாதிக்க நினைத்து 'சிங்கப்பூர் வியாபாரம்' செய்ய முற்பட்ட போது, உள்ளதையும் இழந்து கடனாளியாகி விட்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் அந்த மதக்குழுவினரின் வலையில் அவர்கள் விழ நேர்ந்தது. அந்த மதக்குழுவினரின் ஏற்பாட்டின்படியே அவர்கள் தற்போது தங்கியிருந்த அந்தச் சிறு நகரத்துக்கு குடிபெயர்ந்திருந்தார்கள்.

கடந்த வருடம் நான் ஜேர்மனிக்குச் சென்றபோது, எனக்குத் தெரிந்த நண்பர்களிடம் அவர்களைப்பற்றி விசாரித்த போது, ஊரவர்கள் கொடுத்த புகாரின் பேரில் ஜேர்மன் பொலிசார் அவர்களைக் கைது செய்ததாகவும் அதற்குப்பின் என்ன நடந்தது என்று தங்களுக்குத் தெரியவில்லை என்றும் சொன்னார்கள்.

*(பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன)*

*- நக்கீரன்*

## மதங்களால் ஏன் முடியாது?

கடந்த வாரம் மூன்றாம் உலகநாடுகளின் அரசியல் பொருளாதார - சமூக விடுதலையை சிறுமைப்படுத்தக்கூடிய உலகப் பொலிஸ்காரர்களின் [illegible] அமைப்புக்களால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ உருவாக்கப்பட்டவை தான் 'செக்ட்' எனப்படும் மதக்குழுக்கள் என்று நான் எழுதியதைப் படித்த பலர், ஏற்கனவே மூன்றாம் உலக நாடுகளை அடிமைப்படுத்துவதற்கு [illegible] 'மதம்' இருக்கும்போது, புதிதாக மதக்குழுக்களை உருவாக்க வேண்டிய அவசியம் என்ன என்பது பற்றி தெரிவிக்குமாறு கேட்டிருந்தார்கள்.

உண்மையில் இதிலே இரண்டு விடயங்கள் இருக்கின்றன. ஒன்று உலகப் பொலிஸ்காரர்களது தேவை. இரண்டாவது மதத்தினது பலவீனம்.

முன்பு இந்த உலகப்பொலிஸ்காரர்கள் மூன்றாம் உலகநாடுகளை நேரடி காலனித்துவ நாடுகளாக வைத்திருந்தது போல் இன்று செய்ய முடியாது. உலக அரசியல் சூழல் மற்றும் காலனிய நாடுகளில் ஏற்படும் விடுதலைப்போராட்டங்களை அடக்க ஏற்படும் இராணுவச் செலவு, காலப்போக்கில் வரும் இலாபத்தை குறைத்து விடுவதனால் அந்த முறை கைவிடப்பட்டது.

அதற்குப் பதிலாக இந்த மூன்றாம் உலக நாடுகளில் தங்களுக்கு சேவகம் செய்யக்கூடிய 'கங்காணிகள்' ஆட்சியையும் தரகு முதலாளிகளையும் உருவாக்கி, அவர்களை வைத்து மக்களை [illegible] அந்த நாடுகளின் வளங்களை, செல்வத்தை அபகரித்துச் செல்லும் முறை உருவாக்கப்பட்டது. இதற்குப் புதிய காலனித்துவம், அல்லது நவகாலனித்துவம் என்று பெயர்.

இந்த முறை கூட மூன்றாம் உலகநாடுகளில் உள்ள [illegible] இளைஞர்கள் மற்றும் சமூகக் குழுக்களிடையே ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்ச்சி, மற்றும் விடுதலைப்போராட்டங்கள் காரணமாக தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வந்தது.

இதனால் இந்த முறையைக் காப்பாற்றுவதற்கு 'கலாச்சார' யுத்தம் ஒன்றை நடத்தவேண்டிய தேவையை உலகப் பொலிஸ்காரர்களுக்கு ஏற்படுத்தியது. அதாவது மூன்றாம் உலக நாட்டுமக்களின், குறிப்பாக இளைய தலைமுறையினரின் இன, சமூக விடுதலை உணர்வுகளை சிதைக்கும் விதத்தில், பாலியல் வக்கிர உணர்வுகளைப் புகுத்துவது. உள்ளூர் அதாவது தேசிய உற்பத்திகளை விட தங்களது உற்பத்திப் பொருட்களே சிறந்தவை என்ற உணர்வை புகுத்துவது, அதாவது நுகர் பொருள் கலாச்சாரத்தை வளர்ப்பது, (உ+ம்- மூன்றாம் உலக நாடுகளில் உருவாக்கப்பட்ட கொக்கோ, பெப்சி, மற்றும் குடிபான கலாச்சாரம்) இனங்கள் மற்றும் சமூகங்களது கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை சிதைக்கும் புதிய சமூகக் கலாச்சாரம் ஒன்றை திட்டமிட்டு உருவாக்கி, தொலைக்காட்சி மற்றும் திரைப்படங்கள், இசை வடிவங்கள் ஊடாக பரப்புவது. இவற்றை விட மூன்றாம் உலக நாட்டு மக்களின் ஆன்மீகத் தளத்தில் ஊடுருவி, அவர்களை அடிமைப்படுத்துவது; மதக்குழுக்களை உருவாக்குவது என்பன இந்தக்கலாச்சார யுத்தத்திற்காக இந்த உலகப் பொலிஸ்காரர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாடுகளாகும்.

இரண்டாவது 'மதத்தினது பலவீனம்'. கிறிஸ்தவ மதம் தொடக்க காலத்தில் மூன்றாம் உலகநாடுகளை அடிமைப்படுத்த மிகப்பெரிய உதவி செய்திருந்தாலும் சமூக நிறுவனம் என்ற வகையில் அது தனக்குள் கொண்டிருந்த சில ஜனநாயகத் தன்மைகள் காரணமாக ஒரு குறிப்பிட்ட இலக்கிற்கு மேல் அதனால் செல்ல முடியவில்லை. மேற்குலகில் அரசின் மேல் இருந்த அதனுடைய ஆளுமை குறைக்கப்பட்டபோது, அதனால் மூன்றாம் உலக நாடுகளில் வலிமைமிக்க மதங்களாக இருக்கும் இஸ்லாம், இந்து, பௌத்தம் ஆகிய மதங்களுடன் போட்டி போட்டுக்கொண்டு, மக்களை மதம் மாற்றி ஆளுமை செய்யும் ஆற்றலை அது இழந்து விட்டது என்றே சொல்லவேண்டும். சில இடங்களில் அரசியல் தலைவர்களின் மாற்றங்களுக்கு உதவினாலும், பெரும்பாலும் தங்களது மத நிறுவனத்தின் மீது நம்பிக்கையுள்ள மக்களின் மெய்யியல் அதாவது ஆன்மீகத்தேவைகளில் மட்டும் செயல்படுவது என்று தனது இலக்கை குறுக்கி விட்டது.

எனவே நிறுவனமயப்படுத்த கிறிஸ்தவ மதத்தை தம்முடைய தேவைகளை பூர்த்திசெய்ய உலகப் பொலிஸ்காரர்களால் நம்பிக்கையோடு உபயோகப்படுத்த முடியவில்லை.

இதனாலேயே, தனிமனிதர்களது செயற்பாட்டுத் தளத்தில் ஊடுருவக்கூடிய விதத்தில், மதக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. அதுவும் கூட தங்களால் உலகில் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் அதிகமாக திணிக்கப்படும் சீரழிவுக்கலாச்சாரத்தை விமர்சிப்பவர்களை, எதிர்ப்பவர்களை திசை திருப்புவதற்காக, தாங்கள் அவற்றின் மிகப்பெரிய எதிர்ப்பாளர்கள் என்ற போர்வையில் இந்த மதக்குழுக்கள் உருவாக்கப்பட்டன.

அதாவது, சீரழிவுக்கலாச்சாரத்தை எதிர்க்கின்றோம், நிராகரிக்கின்றோம் என்று சொல்லிக்கொண்டே மூன்றாம் உலக நாட்டு மக்களின், அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளை சீரழித்துவிடுவது தான் இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலை.

# ரஷ்யாவின் இன்றைய சிக்கல்கள் எங்கு போய் முடியும்?

உலகின் வல்லரசு நாடுகளில் முதலிடம் வகித்து வந்த சோவியத் யூனியனின் தாங்கிகள் ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்த போதும், அதன் அணுகுமுறைகளைக் கொண்டு ஏவுகணைகள் தயாரிக்கப்பட்ட போதும், ஆபிரிக்க நாடுகளில் அதன் ஆலோசகர்கள் நிலைகொண்ட போதும் மேற்கு நாடுகள் சோவியத்தின் பலத்தின் முன்னால் ஒரு படி கீழே தான் நின்றன. நேரடியாக எதிர்க்க முடியாத நிலையில் மறைமுகமான எதிர்ப்புரட்சிகளை உண்டு பண்ணியவையும் இந்த மேற்கு முகாம் நாடுகள் தான்.

அன்று சோவியத்தின் பலத்தின் முன்னால் பயந்து போய் நின்ற நாடுகள் இப்பொழும் கூடப் பயப்படுகின்றன ஆனால் இன்று சோவியத்தின் பின் நெறிய பின் ரஷ்யாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல்களைக் கண்டு இவை பயப்படுகின்றன. கடந்த சில வாரங்களாக ரஷ்யப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளால் உலகின் பங்குச் சந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளது உண்மைதான்.


1991ம் ஆண்டு டிசெம்பர் மாதம் கிறிஸ்மஸ்தினத்தன்று சோவியத் யூனியனின் சிவப்புக் கொடி இறக்கப்பட்டு ரஷ்யாவின் மூவர்ணக் கொடி கிரெம்ளின் சதுக்கத்தில் ஏற்றப்பட்ட போது ரஷ்யாவின் தலைவர் பொறிஸ் ஜெல்ட்சின் உலக நாடுகளால் கதாநாயகனாக சித்தரிக்கப்பட்டார். சோவியத்தின் கட்டுப்பாடான கம்யூனிசக் கொள்கைகளால் மூழ்கடிக்கப்பட்டு புதிய மாற்றங்கள் வராதா? என எதிர்பார்த்திருந்த இளைஞர்களும் நடுத்தர மக்களும் தமது எதிர்காலத்தை எண்ணி அன்று ஆர்ப்பரித்ததில் ஆச்சரியம் இல்லை. அதேவேளை அதே கொள்கைகளால் வாழ்ப் போய் இருந்தவர்கள் அடுத்து என்ன நடக்குமோ என்று கேள்விக்குறியோடு காத்திருந்தனர்.

புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்ற பொறிஸ் ஜெல்ட்சின் மேற்கு நாடுகளின் செல்லப் பிள்ளையாக உற்றநண்பனாக அவர்களது கைப்பொம்மையாகவே விளங்கிவந்தார். தனது பதவிக் காலத்தில் ரஷ்யாவில் பெரும் மாற்றங்களைச் செய்து பலம் மிகுந்த நாடாக அதனைப் பாதுகாப்பேன் எனக்கூறியவர், இன்று ஆட்சி செய்யும் பலத்தையும் இழந்து 'ரஷ்யாவின் நிர்வாக யந்திரமே சிதறுண்டதற்கு' முக்கிய காரணகர்த்தாவாகவும் மாறியுள்ளார். யெல்சினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் கிரிஜென்கோவ் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களுக்கமைய மேற்கொண்ட சில நடவடிக்கைகள், ஓரளவு ஒடுக்கி கொண்டிருந்த ரஷ்ய பொருளாதார நீரோட்டத்தை திடீரென ஸ்தம்பிதமடைய வைத்தன. ரஷ்ய நாணயமான ரூபிள் மீள மதிப்பீடு செய்யப்பட்ட போது, வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக அதன் பெறுமதி பெருமளவில் வீழ்ச்சியடைந்தது ஒரே நாளில் பலமடங்காக பொருட்களின் விலைகள் ஏற்றப்பட்டன. வங்கிகள் பணத்தை முடக்கின, திடீரென நாட்டில் பணத்தட்டுப்பாடு. மக்கள் மொஸ்கோவின் வங்கிகளின் முன்னால் கூடிபணத்தினை மீளப்பெறுவதில் மும்முரமாக அடித்தனர். ஆனால் கிராமப் பகுதிகளில் மக்கள் 'அடுத்து என்ன நடக்கப்போகிறதோ' என்ற எதிர்பார்ப்புடன் வீடுகளுக்குள் காத்திருந்தனர்.

ரஷ்யாவின் ஜனாதிபதியாக பொறிஸ் ஜெல்ட்சின் தெரிவானாலும் 'டூமா' எனும் பாராளுமன்றத்தில் கம்யூனிஸ்ட் கட்சியே பெரும்பான்மை அங்கத்தினரைக் கொண்டுள்ளது. ஆனால் தனது மேலதிக அதிகாரங்களைப் பாவித்து பொறிஸ் ஜெல்சின் கடந்த ஏழு வருடங்களாக பாராளுமன்றத்தைப் புறக்கணித்து வந்துள்ளார். மேற்கு நாடுகளின் கைப்பொம்மையான ஜெல்சினால் ரஷ்ய மக்களுக்கு வாக்குறுதிகளை மாத்திரம் வழங்க முடிந்ததே தவிர, தொடர்ந்து நலிவடைந்து வந்த




பொருளாதாரத்தையோ சீர்கெட்டுப் போயிருந்த பாதுகாப்பையோ அவரால் சீர்படுத்த முடியவில்லை. இரண்டாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் வெற்றிகொள்வதற்காக தனது பிரதான எதிரியாகக் காணப்பட்ட அலெக்சாண்டர் லெபெட் டுடன் உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டு ஜனாதிபதியாக இரண்டாவது முறையும் பதவி ஏற்றார். ஆனால் அதன் பின் அவர் செய்த காரியம் லெபட்டை



உதறித்தள்ளியது தான் இப்படி இவர் பயமடைந்ததாக தோன்றவில்லை எனலாம். இந்த வகையில் இறுதியாக வந்தவர் இளம் வயதுப் பிரதமரான கிரிஜென்கோவ். கடந்த மார்ச் மாதம் அவரைப் பிரதமராக்கி மேற்கு நாடுகளுக்கு உலா அனுப்பி உதவிகளைப் பெற்றுக் கொண்ட ஜெல்சின், இன்று அனுபவம் இல்லாதவர் எனக்கூறி அவரைப் பதவி நீக்கம் செய்தார். தொடர்ந்து அதிகாரத்தை தனது கையில் அவர் வைத்திருந்த போதும், நிர்வாகத்தை நடத்துவதிலும் பார்க்க மது போதையில் உல்லாசமாக இருப்பதிலும் உலக வலம் வருவதிலும் தான் முக்கிய கவனத்தைச் செலுத்தினார்.

இறுதியாக இன்று ரஷ்யா பொருளாதார ரீதியாகவும் பாதுகாப்பு ரீதியாகவும் மிகவும் பாதிப்படைந்த நிலைக்கு வந்த போது, தன்னால் பதவிநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் விக்ரர் செர்னமெடினை மீண்டும் வந்து பதவியேற்கும்படி வேண்டினார். அதுமட்டுமல்ல இம்முறை தனது கையில் உள்ள அதிகாரங்கள் பலவற்றையும் விட்டுக்கொடுக்க அவர் முன்வந்துள்ளார். ஆனால் ஜெல்சின் பதவிவிலக வேண்டும் என கம்யூனிஸ்ட்டுகள் கோரி நின்றனர்.

ரஷ்யாவில் கடந்த 23ம் திகதியில் இருந்து ஆட்சிசெய்யும் அரசு எதுவும் இல்லை. ஜெல்சினால் மீண்டும் நியமிக்கப்பட்ட புதிய பதில் பிரதமரையும் 'டூமா' ஏற்றுக்கொள்வதாக இல்லை. ஆனால் அனுபவம் நிறைந்த செர்னமெடின் எப்படியாவது ரஷ்யப் பொருளாதாரத்தை நிமிர்த்திக்காட்ட முயன்று வருகிறார். பிராந்திய ஆளுனர்களை சந்தித்து உரையாடினார். பாராளுமன்ற கீழ்ச்சபையுடன் உடன்பாட்டிற்கு வந்தார். இந்நிலையில் டூமாவில் பெரும்பான்மை வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியினர் செர்னமெடினின் பதவியை உறுதிப்படுத்துவதானால் சில நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கின்றனர். விலைக்கட்டுப்பாடு, பிஸ அரசுடைமை, வரிகுறைப்பு, நிதி முறைமாற்றம் போன்றவை இவற்றில் பிரதானமானவை. ஒரு வகையில் இன்றுள்ள நிலைமையில் எதிர்க்கட்சியினரின் கோரிக்கைகள் நியாயமானவையே.

1991ம் ஆண்டு சோவியத் யூனியன் சிதைவடைந்து ரஷ்ய ஒன்றியம் தோற்றம் கண்ட போது அதன் தலைவர்கள் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் கொள்கைகளையும் மாற்ற முயன்றனர். கம்யூனிச பொருளாதாரக் கொள்கையில் இருந்து தாராள பொருளாதாரக் கொள்கைக்கு ரஷ்யா மாறியபோது, கட்டுப்பாட்டு விலைமுறை இல்லாது போய் சுதந்திரமான போட்டி விலைமுறைகள் அறிமுகமாகின. இப் போட்டி விலை முறைகள் சாதகமான பலன்களை தரவேண்டுமானால் சந்தைப்படுத்தலும் அவ்விதமான தாக இருக்க வேண்டும். ஆனால் ரஷ்யாவில் கம்யூனிச காலத்தில் இருந்த கைத்தொழில், விவசாய முறைகள் மாற்றமடைந்து புதிய முறைகள் ஏற்படத்தொடங்க, விற்பனையாளர்கள் தாம் நினைத்த விலைகளுக்கு பொருட்களை விற்கத் தொடங்கினார். ஆனால் மக்களின் தேவைகளை அரசு ஈடுசெய்யவில்லை. இந்நிலையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் ரஷ்ய சந்தையில் விற்கப்பட்டபோது அவற்றின் விலைகள் அதிகமாகிக் கொண்டே போனது. இதற்குக் காரணம் இறக்குமதியிலும் சில குறிப்பிட்டவர்களின் ஆதிக்கம் தான். தாராள பொருளாதார கொள்கைக்கு ரஷ்யா மாறிய போது அரசுடைமை சொத்துக்களும் தனியார் மயமாகின. ஆனால் ரஷ்யாவில் ஏற்பட்டது உண்மையான தனியார் மயமாக்கல் அல்ல.

அரசின் செல்வாக்கு கொண்டிருந்தவர்கள் சிலர் தங்களது செல்வாக்கைப் பயன்படுத்தி அரச நிலங்களையும், தொழிற்சாலைகளையும், தமது உடமையாக்கிக் கொண்டனர். இன்று ரஷ்யாவில் பெரும்பாலான வங்கிகள், மற்றும் பத்திரிகைகள் போன்றவை ஒரு சிலராலேயே நிர்வகிக்கப்படுகின்றன. இவர்கள் தங்கள் பாதுகாப்புக்கு, முன்னாள் இராணுவ அதிகாரிகளையே அமர்த்திக் கொண்டுள்ளனர். இந்த பெரும் தொழிலதிபர்கள் அரசிற்கு செலுத்த வேண்டிய வரிகளையும் செலுத்துவதில்லை. அத்துடன் ஏற்றுமதி, இறக்குமதி, கடன் முதலான சகலவற்றையும் இவர்களே கட்டுப்படுத்துகின்றனர். இந்நிலையில் ரஷ்யத் தொழிற்சாலைகளில் தயாராகும் பொருட்களும் இவர்களது இறக்குமதியினால் பாதிக்கப்படுகின்றன. இங்கு தயாராகும் பொருட்கள் விற்பனையாவதில்லை. இதனால் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கமுடியாத நிலை தொழிற்சாலை நிர்வாகத்திற்கு ஏற்படுகின்றது. இன்று மொஸ்கோ வீதிகளில் சட்டிபானைகள், உடுபுடவைகள் போன்றவற்றை விற்க பெருவாரியான தொழிலாளர்கள் கூடுகின்றனர்.

**இன்று ரஷ்யாவில் பெரும்பாலான வங்கிகள், மற்றும் பத்திரிகைகள் போன்றவை ஒரு சிலராலேயே நிர்வகிக்கப்படுகின்றன. தொழிலதிபர்கள் அரசிற்கு செலுத்த வேண்டிய வரிகளையும் செலுத்துவதில்லை. அத்துடன் ஏற்றுமதி, இறக்குமதி, கடன் முதலான சகலவற்றையும் இவர்களே கட்டுப்படுத்துகின்றனர்.**

ரஷ்யாவில் பொருளாதாரக் கொள்கை சீர்கெட்டுப் போயிருக்க, மொஸ்கோவிலும், செண்பீற்றர்ஸ்பேர்க்கிலும் ஒரு பிரிவினர் வெளிநாட்டுப் பாவப் பழக்கத்தில் உல்லாசமாக வாழ்க்கையை போக்கிக் கொண்டிருக்கின்றனர். பிரெஞ்சு,ஜேர்மனிய, இங்கிலாந்து உல்லாச - வர்த்தக - போகப் பொருட்களுக்கியங்கள் இவர்களால் நிரம்பி வழிகின்றன. ஒரு வகையில் சொல்லப் போனால் மாபியா ரக அபசாங்க நிர்வாகமே ரஷ்யாவில் இன்று அரங்கேறுகின்றது. உறுதியான பல்கட்சி கூட்டாட்சியொன்றின் இறுக்கமான கொள்கைகளாலேயே ரஷ்யாவின் சிக்கல்கள் தீர்க்கப்பட முடியும்.

- உதயன் -

Radio Asia
Canada
24 மணிநேர தமிழ் ஒலிபரப்பு
ஐரோப்பிய நாடுகளில்:
Astra Satellite Video Channel 7 இல்
Audio Frequency : 7.38 mhz
Video Carrier: 11.303 Ghz
சிற்றலை வரிசை ஒலிபரப்பு:
Gmt 20:00 -22:00 -15,245 Mhz
GMT 22:00 -24:00-11.960 Mhz
GMT 24:00 -02:00 -9.560 Mhz
GMT 02:00 -04:00 -9:855 Mhz
அவுஸ்திரேலியா: 24 மணிநேரம்
Stereo -173.6 Mhz
தலைமையகத் தொடர்புகளுக்கு
Radio Asia Canada
680 Progress Avenue, Unit 1
Scarborough, Ontario, M 1H 3A5, Canada.
Tel: 416-289-1522 / Fax: 416-289-1840

# சிட்னியிலிருந்து வன்னிக்கு – 9

*அவுஸ்திரேலியாவில் இருந்து வரும் திரு. பொன்னி வேந்தன் அவர்கள் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கொழும்புக்குச் சென்று அதன் பின் வன்னிக்கும் சென்றிருந்தார். அங்கு தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் தனக்குக் கிடைத்த அனுபவங்களையும் ஒரு பயணக் கட்டுரையாக வடித்திருக்கிறார். இக் கட்டுரை தொடராக சுழற்சி முறையில் வெளிவருகின்றது. — ஆர்.*

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நிவாரணங்கள் பலருக்கு கிடைத்து இருக்கிறது. சிலருக்கு 5 மாதம் ஆகியும் இன்னும் கிடைக்கவேயில்லை. அவர்கள் படும் பாடு சகிக்கமுடியாது. அதே வேளை சிலர் இரண்டு மூன்று தடவையும் ஒரே தரத்தில் நிவாரணம் பெற்ற கதைகளும் உண்டு. சில அரச உத்தியோகத்தர்கள் மிகவும் செழிப்பாக வசதியுடன் காணப்பட்டார்கள். பலருக்கு நிவாரணம் பெறும் படிவங்களுடன் அங்கும் இங்குமாய் பஞ்சாய்ப் பறப்பதைக் காண முடிந்தது. அரச அலுவலர்கள் இவர்களையெல்லாம் எவ்வாறு அலைக் கழித்து சிரமப்படுத்துகிறார்கள். சிலர் அலைச்சல மிகுதியால், சில அதிகாரிகளின் அடாவடித்தனத்தால்: இந்த நிவாரணமே வேண்டாம் என்று படிவங்களை கிழித்துவீசிய சதைகளும் உண்டு. சில அரச ஊழியர்கள் தம்மால் ஆன உதவிகளை நேரம் காலம் பாராது செய்து கொடுப்பதும் மக்களுக்கு பெரும் ஆறுதலாக இருப்பதையும் சுாணாமல் இல்லை. வெளிநாடுகளில் இருந்து வந்து இப் பகுதிகளில் வேலை செய்யும் தொண்டர்கள் ஊழியர்கள் பலர் தங்களைப் பல சந்தர்ப்பங்களில் மிகவும் கேவலமாக நடத்துகிறார்கள் என்றும் சிலர் சொல்லிக் கவலைப்பட்டார்கள். மானம் மரியாதையோடு நாம் உண்டு, நம் பாடு உண்டு என்ற மனப்பான்மையோடு, மண்ணோடு கட்டுண்டு வாழ்ந்த எமக்கு ஏற்பட்ட இக்கதியை நினைத்து, பலர் கண்ணீர் விட்டது நெஞ்சைப் பிழிந்தெடுத்தது. என்ன செய்வது? நமது இலட்சியங்களை அடைந்து நாம் இவ்வாறு நசுக்கப்படாமல் சுதந்திரர்களாக வாழ்வதற்கு எம் இளைய தலைமுறை வாழ்வதற்கு நாம் கஷ்டப்பட்டுத் தான் ஆகவேண்டும் என்று பலர் ஆறுதல் அடையாமலும் இல்லை. அவர்கள் இன்னும் நம்பிக்கை இழந்து விடவில்லை என்பது மகிழ்ச்சியாக இருந்தது.

வெளிநாட்டு வருமானம் உள்ளவர்களுக்கு அகதிகளாக வந்ததைப் பற்றியோ நாட்டின் நிலைமை பற்றியோ பெரிதாக ஒரு தாக்கம் ஏற்பட்டதாக தெரியவில்லை. அவர்கள் வாழ்க்கையில் வெறும் தொகைப்பணத்தைக் கண்டவர்களுமில்லை. சில குடும்பங்களில் பலர் வெளிநாட்டில் உள்ளார்கள். இப்படி இருக்கும் குடும்பம் வன்னியைப் பொறுத்தமட்டில் மிகச் சிலரே. அவர்களுக்கு முழுக்க பல்வேறு வழிகளில் வெளிநாடுகளில் இருந்து உழைத்து அனுப்பும் பணங்களில் தங்கியிருந்து சொகுசு வாழ்க்கை நடாத்துபவர்கள். இந்த அகதி நிலையிலும் பிறந்த நாள் வைபவங்கள், புனித நீராட்டு விழா, திருமண விழா என்பன மிக ஆடம்பரமாக— விமரிசையாக கொண்டாடிய சம்பவங்களும் உண்டு. இவர்கள் இப் பகுதிகளில் ஓரளவு வசதியான வீடுகளை அதிக வாடகை கொடுத்து வாங்கி அதில் தமது பகட்டு வாழ்க்கையை நடத்திக் காட்டுவதை அனேகமாக காண முடிகிறது. அவர்களுக்கு ஏனையவர்களைப் பார்க்க 'அருவருப்பாக' இருப்பது போலவும் உணர முடிகிறது. இவர்களின் போக்கு ஏனைய அனறாடம் காய்ச்சிகளாக வாழும் மக்களை எவ்வளவு புண்படுத்தும் என்று நினைத்துப் பார்க்கின்றேன். மறுகணம் ஏன் நாம் கூட வெளிநாடுகளில் இவற்றை விட எவ்வளவு ஆடம்பரமான அட்டகாசமாக வாழ்கின்றோம். நாம் தமிழ் இனம், ஒரு வித்தியாசமான இனம். இது வரலாறு காட்டும் உண்மை. இது பெரும்பான்மை சமூகத்திற்கும் அரசிற்கும் நன்றாகத் தெரிந்த விடயம். இது எமது பலவீனம், என்று மனம் அலட்டிக்கொள்கிறது.

> **எமது சமூகத்தில் புரையோடிப்போன 'சாதி' என்னும் கொடிய பிசாசு இந்த பஞ்சத்துக்குப் பயந்து தானும், ஓடவில்லையே என்று எனக்குள் ஏளனமாக சிரித்துக் கொள்கின்றேன்.**

ஏன் இத்தனை அனுபவத்திற்கும் இழப்புகளுக்கும் துன்பங்களுக்கும் மத்தியில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழும் எம் மக்கள், அகதி என்னும் சூறைக்காற்றில் சிக்குண்டு சிதறி ஓடி வந்தவர்கள். வந்த பின் தம்மைச் சேர்ந்தவர்களை இனம் கண்டு தமக்கு ஏற்றவாறு தனித்தனியாக குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். இத்தனித்தனி பகுதிகளை அதில் வாழும் குடும்பங்களை உற்று நோக்கிய என் பார்வைக்கு, அவர்களுடன் கதைக்கும்போது ஏற்பட்டுக் கொண்ட என் சிந்தனைக்கு சில கசப்பான உண்மைகளையும் காண முடிந்தது. எமது சமூகத்தில் புரையோடிப்போன 'சாதி' என்னும் கொடிய பிசாசு இந்த பஞ்சத்துக்குப் பயந்து தானும், ஓடவில்லையே என்று எனக்குள் ஏளனமாக சிரித்துக்கொள்கின்றேன். அதனைத் துரத்த இன்னும் இதனைவிட அழிவுகளும்; அனர்த்தங்களும்; இழப்புக்களும் வறுமையும் பசியும் பட்டினியும் தேவையோ என்று மனம் நொந்து ரமாக நினைத்தவாறு விடிவிற்கு இன்னும் பல கால வழி தூரம் உண்டுபோலும் என்னிவாறு மெல்லமாக நகர்கின்றேன்.

போகும் வழியில் பல வீடுகள் கொட்டில்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு சாகவீடப்பட்டும் பல வீடுகள் இன்னும் வெள்ளத்திலும் இருக்கின்றன. இவற்றை விசாரித்தபோது, கண்டி வீதியில் உள்ள வன்னி மக்கள் இடம் பெயர்ந்து இப் பிரதேசங்களுக்கு வரும்பொழுது, மிகவும் வரட்சி பொருந்திய கோடைகாலம். மூன்று வருடங்களாக இப்பகுதியில் மழையே இல்லையாம். விளை நிலங்கள் அப்படியே கைவிடப்பட்ட படி இருந்ததாம். நிலத்தில் புல்லே காண முடியாதவாறு வெண்தரையாய் பாலைவனமாய் இருந்ததாம். வந்தவர்களுக்குப் பிரதேசம் பற்றியே அனுபவம் இல்லை. எங்கு வெளியாக இருந்ததோ அங்கு சென்று கொட்டில்களை அவசர அவசரமாக போட்டு விட்டார்கள். மேடு பள்ளம் கூட பார்க்கும் மன நிலையில் அவர்கள் இல்லை. காரணம் அவர்கள் தாம் அங்கு ஓரிரு வாரம் அல்லது ஒரு மாதம் மட்டில் தான் தங்க வேண்டிவரும் என்று தப்புக் கணக்கு போட்டிருந்தார்கள். ஆனால் நிலைமை மாறாக இருந்தது. ஜெயசிக்குறுய் நடவடிக்கை மாதக் கணக்காக தொடர்கிறது. மாரி காலம் நெருங்குகிறது. 3 வருடங்களாக இல்லாத மழை இப்பொழுது தொடர்ச்சியாக கொட்டுகிறது. குளங்கள் கால்வாய்கள் நிரம்பி வழிகிறது. மேடு பள்ளம் பாராது கொட்டில் போட்டவர்கள் மீண்டும் அகதிகளாக்கப்பட்டார்கள். விதியே என்னவொரு நோவது!

> **மரணவீட்டு மேள சத்தம், ஓலம் ஒப்பாரி, இருள் நிறைந்த மேகம் என்பன ஒரு இனம் தெரியாத பீதியை ஏற்படுத்தினாலும் கூட, மனம் சந்தோசமாக கூட்டிலிருந்து தப்பிக்கொண்ட சிட்டுக்குருவி போல் சுதந்திரமாக அங்கும் இங்கும் பறந்து திரிவதில் உள்ள சுகத்திற்கு முன்னால் அந்த பீதி பறந்து போய்விட்டது.**

பார்க்க கூடியவைகளை பார்த்துவிட்டு நண்பர் ஒருவரின் மோட்டார் சைக்கிளில் ஏறி மல்லாவிக்குப் போனோம். மாலை நேரம் எத்தனை கடைகள், சந்தைகள், ஹோட்டல்கள், தலைக் கடை, புடவைக் கடைகள், கராச்சுகள், வங்கிகள், தபால் கந்தோர், ஆஸ்பத்திரி, பாடசாலை, அரச அலுவலகம், பொலிஸ் காவல் நிலையங்கள், நிர்வாக அலுவலகங்கள் ஏதோ எல்லாம் முடிந்த அளவிற்கு நடப்பது போல் தெரிந்தது. மக்கள் சனக்கூட்டம் எல்லா இடங்களிலும் நிரம்பி காணப்பட்டது. நகர வாழ்க்கை போல் மிக சுறுசுறுப்பாகக் காணப்பட்டார்கள். பல வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் நவீன ரக வாகனங்கள் வெள்ளைக் கொடி பறக்க அவர்களின் அடையாளச் சின்னங்களுடன் அங்கும் இங்கும் ஆக பறந்து திரிகின்றன. அந்த ஊரில் இருந்த பிள்ளைகளுக்கு பாடசாலைகள் காலை நேரத்திலும் இடம்பெயர்ந்து வந்த பிள்ளைகளுக்கு பாடசாலைகள் மாலை நேரத்திலுமாக தமது வகுப்புக்களை நடத்த கல்வி இலாகா வசதி கொடுத்திருக்கிறது. பிரத்தியேக கல்வி நிறுவனங்களும் அங்கும் இங்கும் இருப்பதைக் காணமுடிந்தது. ஆஸ்பத்திரிகளில் கூடுதலாக வெளிநாட்டு வைத்தியர்கள் கடமை புரிவதைக் காணமுடிந்தது. கடுமையான வருத்தம் உடையவர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாத பட்சத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி பெற்று வவுனியா கொழும்பு ஆஸ்பத்திரிகளுக்கும் மடுப் பாதை ஊடாக அனுப்பி உதவி புரிகிறார்கள் என அறிய முடிந்தது. அரச வாகனங்களும் அரச சார்பற்ற வெளிநாட்டு வாகனங்களும் வன்னி பிரதேசத்தில் இருந்து மடுப்பாதை வழியாக வவுனியா செல்ல அனுமதிகள் வழங்கப்பட்டு இருக்கிறார்கள். இப்பாதையை வேறுயாருமே பாவிக்க முடியாது என்பதும் தெரிவாகிறது.

மேலும் எனது பயணம் சந்திப்புக்கள் தொடர்கிறது. மழை ஒரு புறம். சேறும் சகதியும் நிறைந்ததோடு கன்றுக் கெட்டா உயரத்தில் அதிவேகத்தில் பறந்து செல்லும் புக்காரா, கிபிர் குண்டு வீச்சு விமானங்கள், செல்லில் ஆரவாரம், விடுதலை வீரர்களுக்கும் இராணுவத்தினர்களுக்கும் இடையில் நடைபெறும் இடைவிடாத போரினால் எழும் வெடிச்சத்தங்கள் அதனால் வெளிக்கிளம்பும் புகை மண்டலங்கள் தான் தப்பாது நாலாபுறமும் இருந்து கேட்கும். மரணவீட்டு மேள சத்தம், ஓலம் ஒப்பாரி, இருள் நிறைந்த மேகம் என்பன ஒரு இனம் தெரியாத பீதியை ஏற்படுத்தினாலும் கூட, மனம் சந்தோசமாக கூட்டிலிருந்து தப்பிக்கொண்ட சிட்டுக்குருவி போல் சுதந்திரமாக அங்கும் இங்கும் பறந்து திரிவதில் உள்ள சுகத்திற்கு முன்னால் அந்த பீதி பறந்து போய்விட்டது. சில நாட்கள் இவ்வாறு கழிந்தது. என் கூடன் பிறப்புக்கள் என்னை உடன் திருப்பி என் மனைவி பிள்ளைகளிடம் போகும் படி நச்சரித்தபடி இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு என் மன நிலை எங்கே புரியப்போகிறது. தொடர்ந்தும் பல நாட்கள் அங்கு நிற்க வேண்டும் போல் தான் இருந்தது. கொழும்பில் எனக்காக எனது பல்கலைக்கழகம் பணித்த கடமைகளை மறந்து என் மனைவி மக்களை மறந்து, என் அன்றாட கடமைகளை மறந்து, என்னால் எப்படி நிற்க முடிந்தது. யாருக்குத்தான் என்னை புரியமுடியும்!

(பயணம் தொடரும்)

AUDIO - CD களில்
மனங்கவர்ந்த
பழைய, புதிய பாடல்கள்....

டென்மார்க்கில்

தரமான பிரதிகளில்
பழைய, புதிய
திரைப்படங்கள்
வாடகைக்கும்
விற்பனைக்கும்...

நவீன டிசைன்
தங்க நகைகள்...

இவையனைத்தின் சங்கமம்

HAPPY ENTERPRISE

VIJAYAKANTHAN
Ostervold-5
8900 Randers
Tlf: 86422094, 86438027
Mob: 30407266

சிங்கப்பூர், பாங்கொக் இந்தியா
போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட நவீனரக ஆடைகள்...

நம் நாட்டு
கடல் – மரக்கறி உணவு வகைகள்...
மளிகைப் பொருட்கள்...

முத்துமணி மணவறை
திருமணங்களுக்கு வேண்டிய
அலங்காரப் பொருட்கள்...

WESTERN UNION
20 நிமிடங்களில்
நாணயமாற்று சேவை




மகாபாரதத்திலை தர்மனும் துரியோதனனும் நாட்டைச் சுத்திப்பாக்க போனவை எண்டொரு கட்டம் வருகுது. ரெண்டுபேரும் சுத்திப் பாத்திட்டு வந்து தர்மன் சொன்னானாம் நாட்டிலை இருக்கிற மக்கள் எல்லாரும் நல்லவர்கள் பண்பானவர்கள் மரியாதையோட நடந்து கொள்கிறார்கள் எண்டு. துரியோதனன் வந்து

வெளிநாடெண்டு வந்து உப்பிடியான விளையாட்டுக்களை ரீவியிலை கூட பாக்க முடியாம இருந்த சனங்களுக்கு இதுவொரு வரப்பிரசாதமாத்தான் இருந்திருக்கும். அதுவும் இங்கினை பிறந்து வளருற பிள்ளையளுக்கு நல்லொரு வித்தியாசமான அனுபவம் தான். வந்திருந்த சனங்களும் தங்களுக்கும் ஒரு வாய்ப்புக் கிடைக்காதோ எண்ட எதிர்பாப்போடதான் வந்திருந்தவை. ஆனா வழக்கம்போல கொஞ்சப் பேர் விளையாட பெரும்பாலான சனங்கள் பார்வையாளரா மட்டும் இருந்திட்டுப் போறது மாதிரி இல்லாமல் வந்திருக்கிற எல்லாரும் விரும்பின விளையாட்டுகளிலை பங்கு கொள்ளலாம் எண்டவுடனை சனங்களும் தங்கட வீட்டுத் திருவிழா மாதிரி

கும். ஆனா சில பூசையிலை கரடி புகுந்த மாதிரி அதையும் குழப்பி குழம்பின குட்டையிலை எங்கை மீன் பிடிக்கலாம் எண்டெல்லோ சில பேர் பாத்துக் கொண்டு திரியினம்.

அதுவொரு ஐரோப்பிய தமிழ் வானொலி. தமிழ் உணர்வாளர் தான் மட்டும் எண்டு தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுற ஒருத்தர்தான் தொலைபேசி விவாதங்களிலை கலந்து கொள்ளுறவர். தலைப்பொண்டை வைக்கிறது, தாங்களே நாலு பேரை தொலைபேசி எடுத்து தங்கட விவாதத்தின்ரை தலைப்புக்கு சார்பா கதைக்க ஏற்பாடு பண்ணிப் போட்டு விவாதத்தை தொடங்கிறது தான் இவருடைய வேலை. போன கிழமை அவர் எடுத்திருந்த தலைப்பு

ருப்ப காய் கவர்ந்தற்று' எண்டு வள்ளுவர் சொன்னமாதிரி எங்கை முட்டையிலை முடி பிடுங்கலாம் எண்டு அலையிறவையளை என்ன செய்யிறது? விவாதத்திலை ஒருத்தர் கேட்டதுக்கு தாங்கள் விளையாட்டு விழா நடக்க முதலே விவாதத்தை தொடங்கிவிட்டோம் எண்டு விளக்கம் வேறை குடுத்திருந்தார்! விளையாட்டு விழா பற்றி வெளியிட்டிருந்த விளம்பரங்களிலை இந்த நடனங்கள் இடம்பெறப்போறது- ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்ததை ஏனைய ஐரோப்பிய சனங்கள் அறிஞ்சிருக்காட்டியும் இஞ்சையுள்ள சனங்களுக்கு தெரிஞ்சிருக்கும். இப்பிடியான தலைப்புகளை வைச்சு மக்களுக்கு நல்லது கெட்டதை எடுத்துச் சொல்லுற இவையள் ஆரெண்டு ஊருலகத்துக்

# தக தைய.. தைய.. தையா..
# தமிழ் உணர்வாளர் நான் மட்டும் தானையா...

சொன்னானாம் நாடே கெட்டுப்போய்க் கிடக்கு, மக்களுக்கு பண்பாடு மரியாதை ஒண்டும் தெரியுதில்லை என்ன மனிசர்கள் இவர்களெண்டு. அவர்கள் பாத்த மக்கள் எப்பிடியானவர்கள் எண்டதல்ல பிரச்சினை. தர்மனோட பார்வை நல்ல நோக்கத்தோட இருந்தது. அதாலை மக்களெல்லாம் நல்லவர்களாகத் தெரிஞ்சிருக்கிறார்கள். துரியோதனனோட பார்வை கெட்ட நோக்கத்தோட இருந்திருக்கு அவனுக்கு எல்லாரும் கெட்டவர்களாகத் தெரிஞ்சிருக்கிறார்கள். மக்களிலை எந்த மாற்றமுமில்லை. அவர்களுடைய பார்வையள்தான் மாறுபட்டுக் கிடந்திருக்கு எண்டதைத்தான் இது காட்டுது. இங்கையும் சில பேர் இப்பிடித்தான் பார்வையளை வைச்சுக் கொண்டு திரியினம்! அதாலை தாங்களும் குழம்பி மற்றவையளையும் எல்லோ குழப்போ குழப்பெண்டு குழப்புகினம்....

போனகிழமை பாரிசிலை விளையாட்டு விழா ஒண்டு நடந்தது. கிளித்தட்டு, முட்டியுடைத்தல், தலையணைச் சண்டை இப்பிடிக்கனக்க.... தமிழரோட தேசிய விளையாட்டெண்டு அறிவிச்சிருந்ததாலை சனங்களும் வலு மும்முரமாத்தான் வந்திருந்தவை.

மைதானத்திலை இறங்கிவிட்டுதுகள். குஞ்சு குருமனிலை இருந்து வளந்தவை வரைக்கும் இந்த இயந்திர வாழ்க்கையை எப்பன் மறந்து சந்தோசமா ஒண்டுபட்டு நிண்டதைப் பாக்க உண்மையிலை வலு சந்தோசமாய்த்தான் இருந்தது.

> தமிழ் உணர்வாளர் தான் மட்டும் எண்டு தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுற ஒருத்தர்தான் தொலைபேசி விவாதங்களிலை கலந்து கொள்ளுறவர். தலைப்பு ஒண்டை வைக்கிறது, தாங்களே நாலு பேரை தொலைபேசி எடுத்து தங்கட விவாதத்தின்ரை தலைப்புக்கு சார்பா கதைக்க ஏற்பாடு பண்ணிப் போட்டு விவாதத்தை தொடங்கிறதுதான் இவருடைய வேலை.

சனங்கள் அந்நியநாடு வந்து அந்நியப்பட்டுப்போய் நிக்குதுகள் எண்டு சொல்லிக்கொண்டு இருக்கிறதிலை பிரயோசனமில்லை. இடைக்கிடை இப்பிடியான விளையாட்டுக்கள் விழாக்கள் எண்டு வைச்சாத்தானே அதுகளும் ஊர் நினைப்புகளை மீட்டு ஒற்றுமையா ஒண்டுபட வாய்ப்பிருக்

'மேற்கத்தேய நடனங்கள் சமுதாய வளர்ச்சிக்கு நல்லதா கூடாதா' எண்டதுதான். இதை எடுக்கிறதுக்கு காரணமா இருந்தது நடந்து முடிஞ்ச விளையாட்டு விழாத்தான்.

முதன் முதலா ஐரோப்பிய மண்ணிலை தமிழரோட தேசிய விளையாட்டுக்கள் நடந்திருக்கு. அதுகளைப்பற்றி எடுத்துச் சொல்லி வளருற தலைமுறைக்கு எங்கட கலாச்சாரங்களை விளையாட்டுக்களை புரியவைச்சு வழி காட்டுற விதமா ஏதாவது செய்வோம் எண்டதை விட்டுப்போட்டு 'இனிய உளவாக இன்னாத கூறல் கனியி

தெரியாதெண்டு நினைச்சுக் கொண்டிருக்கினமாக்கும்?

இந்தியச் சினிமாப் பாடல்களுக்கு மேற்கத்தேய நடனங்களை ஆடுறதால இளம் தலைமுறை சீரழிஞ்சு போயிடும். எண்டதுதான் இவையளின்ரை கவலையெல்லாம். இதைப் பாக்க 'ஆடு நனையுதெண்டு ஓநாய் அழுத' மாதிரித்தான் இருக்குது. ஒரு அறிஞர் சொன்ன மாதிரி, சந்திரனைக் காட்ட சுட்டு விரலைப் பாத்திட்டு சந்திரன் நீளமானதெண்டு வர்ணிக்கிற இவையளின்ரை ஒலி பரப்புகளிலை விரசம் கொண்ட சினிமாப் பாட்டே கிடையாது கண்டியளோ!

சனங்களுக்கு நல்லதெது கெட்டதெது எண்டு பிரிச்சு ஆராஞ்சு கொள்ளத் தெரிஞ்சிருக்குதுகள். இவையள் தாங்கள்தான் மக்களின்ரை பிரதிநிதியள்... மக்களுக்கு நல்வழி காட்டிறம் எண்டு சொல்லிக்கொண்டு சனங்களை மெல்ல மெல்லத் திசைதிருப்ப முனையிற இந்தப் புல்லுருவிகளை மக்கள் இனம் கண்டு கொள்ள வேணும் எண்டதுதான் அடியேனின் அபிப்பிராயம்.

**அருமைத்தம்பி**

10வது ஆண்டில் காலடிபதிக்கும்
இமாலயாவின்
தொடரும் சேவையில்.... மற்றுமோர் அறிமுகம்
100 இடியப்பம் 100 பிராங்குகள் மட்டுமே
உங்கள் இல்லங்களையும்; உங்கள் தொழிலகங்களையும் நோக்கிய எமது....
கடுகதி பார்சல் சேவை
பிரியாணி, கொத்துறொட்டி, இடியப்பப்பிரியாணி, தந்தூரி வகைகள், நான், சிக்கன், சப்பாத்தி, சமூசா, றோல்ஸ், சோறு - கறி
இவற்றை உங்களின் இல்லங்களில் இருந்தபடியே உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து உண்டு மகிழ்ந்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
தொலைபேசி: 01 42 06 03 50 / 01 42 03 06 51
றெஸ்ரோறன் இமாலயா
9, Rue Jacques Louvel Tessier, 75010 Paris (M°: Goncourt)

சாந்தினி உணவகம்
குதூகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது
14, Rue Perdonnet, 75010 Paris.
Métro: La chappelle / Gare du Nord
Tel: 01 42 09 37 99
காலை – 9.00 மணி முதல் இரவு – 11.30 மணிவரை
உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு
காலை: இட்லி, அப்பம், தேங்காய்த்தோசை, மசாலாத்தோசை, இடியப்பம், பிட்டு
மதியம்: சோறு (பலவகைக்கறிகளுடன்), பிரியாணி, இடியப்பக்கொத்து, கொத்துறொட்டி, றொட்டி மற்றும் பலவகையான உணவுகள்.
இரவு: நீங்கள் விரும்பிய உணவு வகைகள் உண்டு
மகிழ்ந்திட நாடவேண்டியது
சாந்தினி உணவகம்

# எல்லை + தகுதி = முன்னேற்றம்?!

வாழ்க்கையில் முன்னேற்றம் காண வேண்டும் எனும் எண்ணம் தற்போது மிகுந்து காணப்படுவது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

எனினும் முன்னேற வேண்டும் எனும் ஒரே எண்ணம் உள்ள எல்லோரும் முயற்சி செய்வதில் மட்டும் மிகவும் வேறுபட்டு இருக்கிறார்கள்.

ஒவ்வொரு மனிதனும் முன்னேற்றம் என்றால் என்ன என்பதற்கு தனக்குள்ளேயே ஒரு எல்லை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் மேற்கொள்ளும் முயற்சியில் தெளிவாகத் தெரியவரும்.

பலர் ஓரளவு வெற்றி பெற்றவுடன் இதுவே தன்னுடைய தகுதிக்கு மீறியது என்று அங்கேயே நிறுத்திக் கொள்வார்கள். தன்னைச்சுற்றியுள்ளவர்கள் போன்று அல்லது அவர்களைவிட ஓரளவு உயர்வு கண்டுவிட்டால் அதுவே அவர்களின் முன்னேற்றமாக கருதும் மனோபாவமே இதற்கு தடையாக இருக்கின்றது.

## ஆசையா? அல்லது தாகமா?

இத்தகைய மனோபாவம் ஏற்பட்டது எப்படி? முன்னேற வேண்டும் எனும் ஆசையா? அல்லது தாகமா? என்ற வினாவில் தான் இதற்கு விடை உள்ளது.

ஒரு விருந்துக்கோ அல்லது உணவு விடுதிக்கோ செல்கிறோம். அங்கே வைக்கப்பட்டுள்ள உணவு வகைகளைப் பார்த்தவுடன் மற்றவர்கள் உண்பதை கண்டவுடன் மனதில் ஆசை ஏற்படும். இது பசியினால் வந்த தேவையல்ல. மற்றவர்களின் மகிழ்ச்சியை பார்த்து, அவர்களைப்போல் தானும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் எனும் ஆசையில் எழுந்த உணர்வாகும்.

அவ்வாறே தன்னைச் சுற்றியுள்ள - முன்னேறியுள்ளவர்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டு அதுதான் மகிழ்ச்சியென, அதனையே ஒரு இலக்காக வைத்து முன்னேறுகிறவர்கள் அத்தகைய நிலையை அல்லது அதைவிட சிறிது உயர்ந்த நிலையை அடைந்தவுடன் அதையே முன்னேற்றமாக கருதுகிறார்கள்.

## ஒப்பீட்டு மனப்பான்மை

ஒன்றுமே செய்யாமல் இருப்பதை விட இது எவ்வளவோ மேல் என்ற போதிலும், இவர்களால் இன்னும் புதிய சாதனைகள் படைக்க முடியும். சாதனை செய்யும் சக்திக்கு முட்டுக்கட்டையாக இருப்பது ஒப்பீட்டு மனப்பான்மைதான்.

அதே வேளையில் இத்தகைய ஒப்பீட்டு மனப்பான்மையை முன்வைத்து வாழ்க்கையில் முன்னேறியவர்கள் சிலர், எக்காலத்திலும் திருப்தியாக வாழ்ந்ததில்லை. இவர்கள் அடுத்தவர்கள் என்ன செய்கிறார்கள், என்னை விட முன்னேறி விட்டார்களா? என்று பார்த்து பொறாமைப்படுவதிலேயே காலத்தைக்கழித்து வருகிறார்கள்.

தன்னை சார்ந்த யாராவது ஒருவர் ஏதாவது புதுமையாகச் செய்து விட்டால் இவர்களும் வரிந்து கட்டிக் கொண்டு ஏதாவது ஒன்றை செய்ய முனைவார்கள்.

மனிதனைத் தவிர வேறெந்த உயிரினமும் இத்தகைய ஒப்பீட்டு மனப்பான்மையை கொண்டிருக்கவில்லை. ஒப்பீட்டு மனப்பான்மை புதிய விடயங்களை கற்றுக்கொள்வதற்கும் மேலும் மேலும் வளர்ச்சி பெறவும் ஒரு உரைக்கல்லாக பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை.

ஆனால் மற்றவர்களை மிஞ்சி விடவேண்டும், அவர்களைவிட உயர்ந்து விடவேண்டும், அவர்களை விட பெரிய கார், பெரிய பங்களா வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஒப்பிட்டு வாழும் மனிதன், 'இயற்கை நியதிக்கு' மாறாக நடக்க தலைப்பட்டு விடுகிறான்.

ஒரு பூ மலர்கிறது. இது யாரோடு தன்னை ஒப்பிட்டுக் கொண்டு, போட்டி போட்டுக் கொண்டு மலர்கிறது. யாரைப் பார்த்து தாழ்வு கொள்கிறது. அது படைக்கப்பட்ட தருமத்துக்கேற்ப மலர்ந்து மணம் வீசுகிறது. 'அது யாருக்காகவும் மலரவில்லை.' தன் படைப்புக்கேற்ப செயல்படுகின்றது.

## மனிதனின் தருமம் தான் என்ன?
## இவன் வாழ்க்கையின் அர்த்தம்தான் என்ன?
## மனிதன் எவ்வாறு செயல்பட வேண்டும்?
## எப்படி வாழவேண்டும்?

பிறரோடு ஒப்பிட்டு போட்டி போட்டுக்கொண்டு வாழ்வது தான் மனித தர்மமா? இதுதான் மனிதனின் முழுத்திறமை வெளிக்கொணருமா?

இன்னொருவனை வீழ்த்தி எழும்பியிருக்க விடாமல் செய்வதுதான் மனிதப்படைப்பின் தத்துவமா? இதற்காகவா மனிதன் படைக்கப்பட்டான்?

முன்னேற வேண்டும் எனும் வேட்கை வேகமாக பரவி வரும் இந்நாளில் இன்னொரு மனிதன் பாதிக்கப்படுவான் என்று அறிந்தும், அவன் வீழ்ந்து விட்டான் என்று தெரிந்தும் அவன் எழுவதற்குள் அவன் நெஞ்சில் கால் வைத்து மிதித்து ஏறிச்செல்வதுதான் முன்னேற்றமா?. மனிதனின் இயல்பு இது தானா?

தான் வாழவேண்டும், முன்னேற வேண்டும் என்பதற்காக இன்னொரு மனித ஜீவனை துன்பத்திற்குள்ளாக்கி, அதைப் பற்றி துளியும் கவலைப்படாமல், அதனை கெட்டிக்காரத்தனம் என்று பறைசாற்றிக் கொள்வது தான் மனித தர்மமா?

## பிரபஞ்ச நியதி

இவ்வுலகம் ஒரு 'பிரபஞ்ச நியதிக்கு உட்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றது. இவ்வுலக நடப்புக்கு இயற்கைத் தத்துவங்கள் நிரந்தரமாக வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன. இத்தத்துவங்களை மாற்றியமைக்க முடியாது. இதனைப்புரிந்து கொண்டு அதற்கேற்றால் போல் வாழக் கற்றுக்கொள்வதுதான் மனித தர்மம். இயற்கை நியதிக்கு மாறாக மனிதன் செயல்படும் போது, இயற்கை அவனை பேரிடர்கள் வழி கடுமையாக தண்டிக்கிறது.

பூமிக்கு 'ஈர்ப்பு சக்தி' இருக்கிறது என்பதை புரிந்து கொண்டு அதற்கேற்றால் போன்று நடந்தால்தான் வாழ முடியும். எனக்கு 'புவி ஈர்ப்பு சக்தி' தத்துவம் தெரியாது. அதனால் எனக்கு ஒன்றும் ஆகாது என்று இருபது மாடிக் கட்டிடத்திலிருந்து குதித்தால் என்னவாகும்? இயற்கைத்தத்துவத்திற்கு மாறாக நடந்தால் தண்டனை அனுபவித்துத்தான் ஆகவேண்டும்.

இயற்கையோடு இணைந்து வாழும் அறிவு மனம் கொண்ட மனிதன் இயற்கைத்தத்துவத்தையும் புரிந்து வாழ வேண்டும். இயற்கை யாரோடு போட்டி போடுகிறது? யாருடைய பாராட்டுக்களை காத்திருக்கிறது. அது தன் போக்கில் தனது கடமையை செய்கிறது.

'உலகையே ஆளும் மாபெரும் பிரபஞ்ச சக்தியே தன் கடமையை தவறாமல் செய்கிறது. ஆனால் மனிதன் அங்கீகாரத்துக்காக அலைகிறான். பாராட்டப்பட வேண்டும் என்று துடிக்கிறான். பிறர் முன்னிலையில் தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்று தவிக்கிறான். தான் பாராட்டப்பட வேண்டும், தனக்கு அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதும் எவ்வளவு பிரபஞ்ச சக்திக்கு உட்பட்டதுதானா? பிறரோடு ஒப்பிட்டு பார்த்து அவர்களை வெல்ல நினைப்பது இயற்கைத் தத்துவங்களுக்கு உட்பட்டது தானா?

தன்னம்பிக்கை பாலசுப்பிரமணியம்

## மாயையில் மனிதகுலம்

முன்னேறுவதற்கு பிறரை வஞ்சிப்பதும், வீழ்ச்சியுறச் செய்வதும் கெட்டிக்காரத்தனம் என்னும் மாயையில் மனிதகுலம் சிக்கிக் கொண்டு விட்டது.

தான் விரும்பிய பணியில் தன் முழுத்திறனை வெளிப்படுத்தும் கடுமையான உழைப்பு - சளைக்காத மனம் - சாதனை செய்யும் உந்துதல் இவைதான் மனிதனுக்கு அறிவு வளர்ச்சியை வழங்கி மேம்படுத்துபவை.

தன்னுள்ளே இருக்கும் சாதனை செய்யும் மகத்தான சக்தியை பயன்படுத்த தவறி விட்ட மனிதர்கள் பிறரோடு ஒப்பிட்டுக் கொண்டு, போட்டி போட்டுக் கொண்டு ஒருவரை ஒருவர் வீழ்த்தும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பிறரோடு ஒப்பிட்டு, தன்னை உயர்வாக கருதிக் கொண்டும் அல்லது தாழ்த்திக் கொண்டும் தன்னுள்ளே இருக்கின்ற மகத்தான சக்தியை மனித குலம் மறந்து போய்க்கொண்டிருக்கின்றது.

## ஏன் பிறரோடு ஒப்பிட வேண்டும்?

பிறரோடு ஒப்பிட்டு பார்த்து தன்னுடைய 'தரம்' பற்றிய நிர்ணயம் செய்யும் மனோபாவமே இதற்கு வித்தாக இருக்கிறது. இத்தகைய மனோபாவம் ஏற்பட வகை செய்தது, வளர்ப்பு முறையும் போட்டி நிறைந்த இன்றைய வாழ்க்கைச் சூழலுமே ஆகும்.

மனிதன் - தன் சிந்தனை ஆற்றலை பயன்படுத்தி மென்மேலும் உயர்வு காணும் படைப்பு. இதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது - கூடாது. வளர்ச்சி காணவேண்டியது, உயர்வு காண வேண்டியது மனிதப் படைப்பின் தர்மம். ஆனால் இதனை அழிவுப் பாதையில் அல்ல! ஆக்கப் பாதையில் செய்ய வேண்டும்.

> இன்னொரு மனிதனோடு போட்டி போடும் மனோபாவம், அந்த மனிதனை தன்னை விட தாழ்ந்த நிலையில் பார்க்கவேண்டும் என்னும் குறுகிய புத்தியை அடையாளம் காட்டுகிறது என்பதை உணர்ந்து கொள்வது அவசியம்.

இத்தகைய சிந்தனை இயற்கை தர்மத்துக்கு உள்ளிட்டதுதானா என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும். மனிதன் தன்னுள் இருக்கும் 'மகத்தான சக்தியினை' ஆக்க வேலைக்கு பயன்படுத்த வேண்டும்.

## மனிதப் படைப்புக்கே களங்கம்

தன்னுடைய செயல்பாட்டின் விளைவாக இன்னொரு மனிதனின் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதுதான் தர்மம். அடுத்தவன் எக்கேடு கெட்டாலும் எனக்கு கவலையில்லை என்று நினைத்து செயல்படுபவன் மிருகம். மனிதப் படைப்புக்கே களங்கம்.

ஒரு துறையில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். அதில் உங்களை ஐக்கியப்படுத்திக் கொள்ளுங்கள். படிப்படியாக அத்துறையில் தேவைப்படும் அறிவை வளர்த்துக்கொள்ளுங்கள். மென்மேலும் உயர்வு காணும் வழி வகைகளை சிந்தியுங்கள். பிறரை வீழ்த்தும் மனோபாவத்தை கைவிடுங்கள்.

அடக்கமாக - ஆனால் அழுத்தமாக காரியமாற்றுங்கள் - உயர்வு காணுங்கள்.

**வெற்றி நிச்சயம்!!**

---

# ஐரோப்பா தழுவிய குறும்பட போட்டி -1998

**கலைஞர்களே!**


உங்கள் கமராக் கண்களைத் திறவுங்கள், எங்கள் முன்னால் விரிந்து கிடக்கும் எம்மவர் பற்றிய பிரச்சினைகளை படமாக்கிக் கொள்ளுங்கள். சமூகத்தைப் பற்றிய பார்வையும் எதிர்காலம் பற்றிய தெளிவும் உங்கள் குறும்படத்தில் பிரதிபலிக்கட்டும்.

**குறும்படப் போட்டியில் பங்குபற்றுவோருக்கான விதிமுறைகள்**

1. இவ்வருட ஜூலை மாத இறுதிப் பகுதிக்குள் போட்டியில் பங்குபற்றும் அனைவரும் தங்களது விண்ணப்பங்களை தொலைபேசி மூலமாக பதிவு செய்து கொள்ளுங்கள்
2. குறும்படங்கள் எம்மை வந்து சேரவேண்டிய இறுதித் திகதி ஒக்ரோபர் 15 இற்கு முன்.
3. ஆக்க தளம் - புலம் பெயர் வாழ்வின் அவலங்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் விரும்பத்தக்கது.
4. திரைக்கதை, இசை, பாடல், நெறியாள்கை யாவும் சுயமானதாக இருத்தல் வேண்டும்.
5. இப்போட்டியில் கலைக்குழுக்களாகவோ, தனிநபர்களாகவோ கலந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ் (01 43 58 11 42)

# முதலாம் ஆண்டு நினைவில்



தாயின் மடியில்
21.07.1961

தாயக மண்ணில்
10.09.1997

## லெப். கேணல் பாவரசன்

சின்னத்துரை ஆனந்தகுமார்
(சிறுப்பிட்டி வடக்கு)

பிறப்பிருந்தால் இறப்பிருக்கும் - பிரமனவன்
படைக்கையிலே கிடைத்த உண்மை
இது தானே - என்றாலும் உன் பிரிவில்
உடைந்துவிட்ட எம் இதயம்
ஒப்புதற்கு மறுக்குதடா -
எம் உயிரே ஆனந்தா ...
காலையும் வருகிறது, மாலையும் வருகிறது
கருமங்களும் தான் நிறைவேறிப்போகின்றன - ஆனாலும்
உன்நினைவு மூச்சுக்காற்றாய் ஓடிக்கொண்டே
இருக்கிறது.
ஆண்டொன்று போனதுவா? அது கூடத்
தெரியவில்லை. வெம்பி அழுகின்றோம் நாம்!
மாளவில்லை நீ மறத்தமிழன், எம் மனங்களிலே
என்றென்றும் வாழுகின்றாய்!!

வாழ்க உன் புகழ் - மலர்க தமிழீழம்


**மனைவி – சிவகௌரி ஆனந்தகுமார்**
**- சகோதர சகோதரிகள்**

தவமணி - இரத்தினம் (தமிழீழம்), சின்னத்துரை - நடராசா (சுவிஸ்), பராசக்தி - சுந்தரலிங்கம் (தமிழீழம்), புவனேஸ்வரி - கனேஸ்வரன், சின்னத்துரை - தனபாலசிங்கம், லோகேஸ்வரி - ஸ்ரீரங்கநாதன்.

# பிரெஞ்சு மக்களினால் நடாத்தப்பட்ட தமிழ் கலாச்சார நிகழ்வு

சனிக்கிழமை 22.08.98 அன்று பிரான்சின் மேற்குப் பகுதியாக, பாரிஸில் இருந்து சுமார் 500 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருக்கும் Ile d'Oléron எனும் சிறிய தீவில் இராஜ பரம்பரையினரால் கலாச்சார நிகழ்ச்சி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வருடாவருடம் ஒவ்வொரு நாட்டு கலாச்சாரத்திற்காக ஒதுக்கப்படும் இந் நிகழ்வு, இவ் வருடம் தமிழ் கலாச்சாரத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

இவ் வருடம் தமிழ் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கான அனுமதியை, 93-ம் பிரிவில் Drugny நகர சபை உறுப்பினர் திரு. அலன் ஆனந்தன் அவர்கள் மகாராஜாவிடம் இருந்து பெற்றுத்தந்தார்கள். மகாராஜா குடும்பத்தினரும், அக் கிராம மக்களுமாக சுமார் 150 பேர் கலந்துகொண்ட இந் நிகழ்ச்சியில், ஆண்கள் குர்தா, தலைப்பாகையுடனும்,



புப் பட்டியுடனும், கையில் ஈட்டியுடனும் குதிரையில் வந்த இளம் பிரெஞ்சு வீரர்கள், பிரெஞ்சு இசைக்கு ஏற்றவாறு அசைவுகளை வெளிப்படுத்தி



பெண்கள் அனைவரும் சேலை உடுத்து பொட்டிட்டும் வந்திருந்தமை எம் கலாச்சாரத்தின் மீது அவர்களுக்குள்ள ஈடுபாட்டை வெளிக்காட்டியது.

வரவேற்பு நிகழ்ச்சியின் போது வெள்ளையுடையுடன் இடுப்பிலும் தலையிலும் சிவப்

மகாராஜாவை வரவேற்றனர்.

எமது தமிழ் சிற்றுண்டிகளும் உணவுகளும் பரிமாறப்பட்டபோது அனைவரும் மிகவும் ரசித்து உண்டு மகிழ்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இதனைத் தொடர்ந்து சோதியா கலைக்கல்லூரி மாணவிகளான

வர்ஷினி சுரேந்திரன், சுகந்தினி சுரேந்திரன் சகோதரிகளின் பரதநாட்டிய நிகழ்வு இடம்பெற்றது. இந் நடன நிகழ்விற்கு, சோதியா கலைக்கல்லூரி நடன ஆசிரியை திருமதி ரட்ணலக்சுமி சோமசுந்தரம் நட்டுவாங்கம் செய்ய, சோதியா கலைக்கல்லூரி வயலின் ஆசிரியை திருமதி கோமளா சுந்தையா அவர்களின் வயலின் இசைக்க, திரு. ரவி தர்மராஜா அவர்களின் மிருதங்கத்துடன், சோதியா கலைக்கல்லூரி சங்கீத ஆசிரியை திருமதி சுகந்தி ஸ்ரீநேசன் பாடலிசைத்தார்.

நிகழ்ச்சிகள் இரவு வெகு நேரம்வரை நடைபெற்றதனால், பாரிஸில் இருந்து சென்ற கலைஞர்கள் நிகழ்ச்சியில் இறுதிவரை கலந்துகொள்ள முடியவில்லை. ஆயினும் இவர்கள் புறப்படும் வேளையில் மகாராஜா மிகவும் மகிழ்ச்சியுடன் எம் கலைஞர்களை வாழ்த்தி கௌரவித்து வழியனுப்பி வைத்தார்.

# புகலிட நிகழ்வுகள்

## பரதநாட்டிய அரங்கேற்றம்

டென்மார்க் கலாகேந்திரா நாட்டியாலய நடன ஆசிரியை திருமதி சுமித்திரா சுகேந்திராவின் மாணவியான செல்வி யாழினி மகேந்திரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 22.08.98 அன்று சனிக்கிழமையன்று கோர்னிங் கொங்கிரஸ் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

பாரிஸ் கலாலய நாட்டியப் பள்ளியிலிருந்து திருமதி செல்வசுல்பா ஆனந்தராஜா பிரதமவிருந்தினராகவும், கவீர்சர்லாந்து கலைக்கோவில் நாட்டியாலயத்திலிருந்து திருமதி நிமலினி ஜெயக்குமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். திரு. எஸ்.ரீ. அருள் வாழ்த்துரை வழங்கினார்.

சங்கீத வித்தகி சங்கீத ரத்னம் திருமதி சிவசக்தி சிவனேசனின் குரலிசையுடன் திரு. பவானிசங்கர் - மிருதங்கம்; திரு. பாலு ரகுராமன் - வயலின்; செல்வன் ஹரி சிவனேசன் - வீணை என பக்கவாத்திய கலைஞர்கள் நிகழ்ச்சியை மெருகூட்டினர்.

சுமார் எட்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக நடனம் பயின்று இவ் அரங்கேற்றத்தை நிகழ்த்தியுள்ள செல்வி யாழினியிடம் நீண்ட பயிற்சி, ஆழ்ந்த அவதானிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் சிறந்த அபிநய வெளிப்பாடுகளைக் காணமுடிந்தது குறிப்பிடத் தக்கது. இவ் அரங்கேற்ற நிகழ்ச்சியை செல்வி ஜாஸ்மி தனபாலன், திரு. கிரு-



ஷ்ணா செல்லச்சாமி ஆகியோர் டெனிஸ் மொழியில் தொகுத்து வழங்கினர்.

இறுதி நடன நிகழ்ச்சி முடிவடைந்ததும், பார்வையாளர்கள் அனைவரும் 'எழுந்துநின்று தொடர்ச்சியாக கைகளைத் தட்டி வாழ்த்தும் முறையான' ஸ்கண்டிநேவிய முறையில் சைபர்சார் செல்வி யாழினியையும், கலைஞர்களையும் வாழ்த்தினர்.

## டென்மார்க் சித்திவிநாயகர் ஆலயத் திருவிழா

டென்மார்க் அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 14.08.98 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொடியேற்ற நிகழ்வில் சுவிஸிலிருந்து வருகை தந்திருந்த சங்கீதபூஷணம் திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்கள் இன்னிசைக் கச்சேரி வழங்கினார். பாரிசில் இருந்து வருகை தந்திருந்த நாதஸ்வரக் கலைஞர்

தார். இதன்போது காவடியாட்டம், அங்கப்பிரதட்சணை, கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திக் கடன்களை அடியார்கள் பக்திப்பெருக்கோடு நிறைவேற்றினர்.

அலங்கார உற்சவக் குருவாக சிவஸ்ரீ நடராஜ ஸ்ரீகாந்தக் குருக்களும், உதவிக் குருக்களாக சிவ ஸ்ரீ பாலகணபதி சர்மாவும் மற்றும் டென்மார்க்கிலுள்ள சகல இந்துமத வேதி



திருநீ எம். ரவீந்திரனும், டென்மார்க்கை வதிவிடமாகக் கொண்ட தவில் கலைஞர் சந்தரதாசும் இணைந்து மங்கல வாத்தியம் இசைத்தனர்.

டென்மார்க்கின் சகல பாகங்களில் இருந்தும் பெருந்திரளாகக் கலந்துகொண்டிருந்த மக்கள் வெள்ளத்தின் நடுவே 22.08.98 அன்று விநாயகப் பெருமான் தேர் ஏறி வீதிஉலா வந்

யர்களும் கலந்துகொண்டு திருவிழாவைச் சிறப்பித்தனர்.

அத்துடன் தேர், தீர்த்தம் ஆகிய இரு தினங்களிலும் அன்னதானம் வழங்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. மேலும் புதிய மூலஸ்தானத்தை அமைக்கும் பொருட்டு 26.08.98 அன்று நூதன ஆலய நிர்மாண அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது.

- கி.செ. துரை

## எழுச்சி கானங்கள்-98 இற்கு வயது ஐந்து


விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் பிரித்தானியக் கிளையினரால் கடந்த நான்கு வருடங்களை தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வந்த எழுச்சிகானங்கள் இசை நிகழ்ச்சி, ஐந்தாவது தடவையாக கடந்த 22.08.98 அன்று மாலை 7 மணிக்கு 'வோல்தம்ஸ்ரோ அசெம்பிளி' மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் அமைதிவணக்கத்தைத் தொடர்ந்து தேசியக்கொடி ஏற்றிவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வரவேற்புரையுடன், தமிழ் முதியில் சிறந்த பாடகர்களில் ஒருவரான மேஜர் சிட்டு அவர்களையும், பிரித்தானியக் கிளையின் கலைபண்பாட்டுக் கழகம் பல நிகழ்ச்சிகளைச் சிறப்பாக



நடாத்தக் காரணமாகவிருந்த 'லோரன்ஸ்' திரு. பாலா அவர்களையும் நினைவு கூர்ந்தனர்.

'பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே..' எனும் வாத்திய இசையுடன் ஆரம்பமாகிய இந் நிகழ்ச்சியில் 28 எழுச்சிப் பாடல்கள்



பாடப்பட்டன. இவ் எழுச்சி இசை நிகழ்ச்சியில் பல இளம் கலைஞர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத் தக்கது. உதிரி வாத்தியங்களையும், தபேலா, கீபோர்ட் போன்ற வாத்தியங்களையும் இளம் கலைஞர்கள் மிகவும் வாசித்துச் சிறப்பித்தனர்.

நான்கு பெண் பாடகிகளும், பத்திற்கும் மேற்பட்ட ஆண் பாடகர்களும் கலந்துகொண்ட இந் நிகழ்ச்சியில் கிருஷ்ணி எனும் சிறுமி பாடிய 'புலிமாமா புலிமாமா வீட்டுக்கு வாங்க' பாடல் மண்டபத்தில் சூழ்ந்திருந்த அனைத்து மக்களினதும் கரகோஷத்தையும், பாராட்டுக்களையும் பெற்றது.

விடுதலைப் புலிகளின் அனைத்துலகப் பிரதிநிதி ஒருவர் சமகாலப் போராட்ட நிகழ்வுகளைப் பற்றிச் சிறப்புரையாற்றினார்.

இசை நிகழ்ச்சியின் நடுவே விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினரால் மண்டபத்தில் உண்டியலில் சேர்க்கப்பட்ட பணம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இறுதியாகப் 'போரம்மா..' பாடலின் பின்பு தேசியக் கொடி இறக்கலுடன் 'எழுச்சி கானங்கள்- 98' இனிதே நிறைவு பெற்றது.

- கண்ணன்

மீண்டும் 01.09.98 முதல் உங்கள் திருப்திக்காக

# வூட்லன்ஸ் கோல்

நிமிடங்கள் அதிகரித்துவிட்டன

## தொலைபேசி அட்டை வெளியாகிவிட்டது




60 UN

50 Frs TTC

120 UN

100 Frs TTC




| | |
|---|---|
| இந்தியா.................. | 50 நிமிடங்கள் |
| இலங்கை ............... | 50 நிமிடங்கள் |
| ஐரோப்பா.................. | 70 நிமிடங்கள் |
| பிரித்தானியா........... | 102 நிமிடங்கள் |
| அமெரிக்கா............. | 100 நிமிடங்கள் |
| கனடா..................... | 100 நிமிடங்கள் |

இன்னும் பல நாடுகள் அதிகரிக்கப்படவுள்ளது. நீங்கள் எங்கள் தொலைபேசி அட்டை மூலமாக எவ்வளவு கூடிய நேரம் உரையாடுகின்றீர்களோ அவ்வளவிற்கு ஒவ்வொரு மாதமும் நிமிடங்கள் அதிகரிக்க வாய்ப்புண்டு.

வர்த்தக ஸ்தாபனங்களுக்கு 15% கழிவுடன் வழங்கப்படும்

| 60un | Local | Vert |
|---|---|---|
| இந்தியா | 26 | 16 |
| இலங்கை | 30 | 16 |
| UK | 50 | 30 |

நிமிடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது

நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!!

## இலங்கை 50mn இந்தியா 50mn

தொடர்புகளுக்கு: அனைத்து தமிழர் வர்த்தக நிலையங்கள்

**Tel: 0140370820 0680626095/ Fax: 0140372820**

25.09.98 முதல் லண்டன், ஜேர்மனி, சுவிஸ், டென்மார்க், இத்தாலி, இலங்கை, இந்தியா இன்னும் பல நாடுகளில் இருந்து உரையாடுவதற்கான தொலைபேசி அட்டை வெளியாகிறது.

விநியோகத்தர்கள் தேவை

அரிய சந்தர்ப்பங்களை நழுவவிடாதீர்கள்

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 1.73 | 0.60 | 5.82 | 1.42 |
| பிராங்பேட் | 0.58 | – | 0.34 | 3.35 | 0.82 |
| லண்டன் | 1.67 | 2.89 | – | 9.70 | 2.38 |
| பாரிஸ் | 0.17 | 0.30 | 0.10 | – | 0.24 |
| சூரிச் | 0.70 | 1.22 | 0.42 | 4.08 | – |
| பம்பாய் | 42.65 | 24.66 | 71.30 | 7.33 | 30.01 |
| கொழும்பு | 66.28 | 38.32 | 110.80 | 11.39 | 46.64 |

# ஈழவர் விளையாட்டுக் கழகம் வெற்றி

கடந்த 30.08.98 ஞாயிறு அன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்திய தமிழர் விளையாட்டு விழாவின் ஒரு பகுதியாக, 'துரோர் சொப்' ஆதரவில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியும் நடைபெற்றது.

இப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக சிவப்பு அணி, ஈழவர் விளையாட்டுக் கழகம் ஆகிய கழகங்கள் மோதின. ஈழவர் விளையாட்டுக் கழகம் ஒரு கோல் போட்டிருந்த நிலையில், ஆட்டம் முடிவடைய 5 நிமிடங்கள் மாத்திரமே இருந்த நிலையில் ஏற்பட்ட அசம்பாவிதத்தினால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டதோடு வெற்றி தோல்வி பின்னர் அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அடிப்படையில், கடந்த 01.09.98 அன்று நடைபெற்ற ஈழத் தமிழர் தமிழர் உதைபந்தாட்ட சம்மேளன செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், குறிப்பிட்ட போட்டியில் ஈழவர் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டியில் சிறந்த விளையாட்டு வீரர்களாக ஈழவர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வன் ரமணன், வவுனியா சாவா இறீஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சிவனேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


## மரண அறிவித்தல்

மலர்வு: 12.06.1941

உதிர்வு: 03.09.1998



### சீனியர் தியாகராஜா

வடமராட்சி, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். ஆசீர்வாதம் வீதியை இருப்பிடமாகக் கொண்டவருமான சீனியர் தியாகராசா அவர்கள் 03.09.1998 ம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சீனியர் - தெய்வானை தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற ரீட்டாவின் அன்புக்கணவரும், பாக்கியம், ஜெயமணி, தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசந்தன் (பிரான்ஸ்), வதனி (தமிழீழம்) காமினி (தமிழீழம்) மாலினி (ஜேர்மனி), டொஸ் (பிரான்ஸ்) நளாயினி (தமிழீழம்) வன்னன் (தமிழீழம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசிங்கம் (தமிழீழம்), ஞானப்பிரகாசம் (தமிழீழம்), சந்திரலிங்கம் (ஜேர்மனி), வத்சலாதேவி (தமிழீழம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்: வசந்தன் (மகன்) பிரான்ஸ்.
டொஸ் (மகன்) பிரான்ஸ்
Tel: 06 14 25 53 65


# முக்கிய போட்டியாளர் ஸ்ரெபி கிறாப் தோல்வி

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அமெரிக்கன் ஒப்பன் டெனிஸ்போட்டிகளில் பெண்கள் பிரிவில் முக்கிய போட்டியாளராக எதிர்பார்க்கப்பட்ட யேர்மனியின் ஸ்ரெபி கிறாப், வளர்ந்துவரும் ஒரு புதிய நட்சத்திரமான சுவிசின் சினிடரிடம் (SCHNYDER) 6-3, 6-4 என்ற கணக்கில் ஒரு மணித்தியாலத்திற்கும் குறைவான நேரத்தில் தோல்வியை தழுவிக் கொண்டார். கடந்த ஒரு வருடமாக போட்டிகளிலிருந்து ஒதுங்கியிருந்த முன்னாள் நம்பர் 1 வீராங்கனையான ஸ்ரெபி, தற்போது 8ம் இடத்திலும், சினிடர் 11ம் இடத்திலும் இருக்கும் போதே இவ் அரைக்கால் முதல் இறுதிப்போட்டி நியூயோர்க்கில் 06.09.98 அன்று நடைபெற்றது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### இராணுவக்....

என காரணமும் கூறியுள்ளது.

இதேவேளை கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு செவ்வி வழங்கிய ஒரு சிங்கள அரசியல் வாதி, புலிகள் தங்களிடம் போதிய அளவு எரிபொருட்களையும், உணவுவகைகளையும் வைத்திருக்கின்றனர் என தெரிவித்துள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகளுடன்....

அமுல்படுத்தக்கூடிய ஆற்றல் உள்ளது என்ற நம்பிக்கையே புலிகளுடனான பேச்சுவார்த்தை வெற்றி பெறுவதற்கு அடிப்படைத் தேவையாகும் என பீரிஸ் கூறினார்.

பீரிசின் இக் குற்றச்சாட்டை ஐ.தே.க. பிரமுகர் ரெஜோமல் பெர்னாண்டோ மறுத்துள்ளதுடன், புலிகளுடனான பேச்சுவார்த்தையையும் உடன்பாட்டையும் தமது கட்சி மதிக்கின்றது எனவும் புலிகளுடன் பேசுவதே தீர்வுக்கான ஒரே வழி எனவும் கூறியுள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறிலங்காவின்....

சிறிலங்காவின் 98-ம் ஆண்டிற்கு உரிய நிதிப் பற்றாக்குறை கணிசமான அளவு அதிகரிக்கும் என சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளது. போரினால் பெருந்தொகை நிதி விரயமாக்கப்படுவதை சுட்டிக்காட்டியுள்ள நிபுணர்கள், சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளை சிறிலங்கா அரசால் ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கருதுகின்றனர்.


பாரிஸ் லாசப்பலில்

உங்கள் அனைத்து இறைச்சி வகைகளுக்கும்

# BOUCHERIE LA CHAPELLE

கோழி, கோழிக்கால், ஆட்டிறைச்சி
மாட்டிறைச்சி வகைகளுடன்
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்
உடன் மீன் வகைகள்
இவை மட்டுமா?
சனி, ஞாயிறு தினங்களில்
ஆட்டிறைச்சிப் பங்குகள், உயிர்க்கோழி
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்


**BOUCHERIE LA CHAPELLE**

62, Rue Louis Blanc, 75010 Paris
Tel: 01 40 38 34 08
Mo: La Chapelle ou Gare du Nord
(மக்கள் கடைக்கு முன்பாக)



## மரண அறிவித்தல்

தோற்றம்: 03.11.1911



மறைவு: 02.09.1998

### பஸ்ரியாம்பிள்ளை சுவாம்பிள்ளை வில்ஃபிரட்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பஸ்ரியாம்பிள்ளை சுவாம்பிள்ளை வில்ஃபிரட் அவர்கள் கடந்த 02.09.98 அன்று காலமானார்.

இவர் திரு. திருமதி பஸ்ரியாம்பிள்ளை சுவாம்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற ராபி, அல்பிரட், போ ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மேரி மாகிரட் (அக்காச்சி) அவர்களின் அன்புக் கணவரும், இம்மானுவேல், மேரி ஜெசிந்தா, நிர்மலா, வில்பிரட், காலஞ்சென்ற அன்ரன் அலோசியஸ், பேனாட் அஞ்சலோ, ஸ்ரீபன், ஜொய்சன், கமில்டா ஆகியோரின் அன்புத் தந்தையும், குணமலர், லெனி, சின்னராசா, செல்வராணி, ரஞ்சம், கலா, அன்ரனி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பொன்னம்பலம், மணி, ஞானப்பிரகாசம், சுகிர்தம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜொனி, ஜெரோமட், கிரேஸ்குமார், சுதானி, சதீஸ்குமார், தனலக்ஷ்மி, சிவலக்ஷ்மி, சுதவை கிரேஸ், போல், திலக்சன், காலஞ்சென்ற நிரோஜினி, நிரோ, நிரோ, நிரோசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்:

திரு. திருமதி சேனா அந்தனிமேரா (ஜேர்மனி) - 202 44 4561
திரு. திருமதி அன்ரனி பிரான்சிஸ் (பிரான்ஸ்) – 01 45 95 25 66



# AMV

IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும்
மொத்த விலையில் கொடுக்கப்படும்.
மரக்கறி வகைகளும் மலிவான
விலையில் மொத்தமாகப்
பெற்றுக்கொள்ளலாம். Rungis
மரக்கறி வகைகளும் மொத்த
விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
Nº: 199, The BROADWAY, Southall, Middx. T.P: 0181 / 813 9126

# இரகசிய சித்திரவதை மையங்களை மூடவேண்டும்

## மன்னிப்புச்சபை அரச தமிழ் குழுக்கள் மீது குற்றச்சாட்டு

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ போன்ற ஆயுதக் குழுக்களின் வதைமுகாங்களை இழுத்து மூட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை சிறிலங்கா அரசைக் கோரியுள்ளது. சிறிலங்கா இராணுவத்தினராலும், பொலிசாரினாலும் பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்படும் இக் குழுக்கள் சித்திரவதை, காணாமல்போதல் மற்றும் படுகொலைகளில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ள மன்னிப்புச்சபை, இக் குழுக்களை புலிகளைத் தேடுவதற்காக அரச படைகள் பாவிக்கின்றன எனக் குறிப்பிட்டுள்ளது.

தமது அதிகாரிகள் இதுபற்றி இராணுவ பிரிகேடியர் ஒருவருடன் கலந்துரையாடியபோது வவுனியாவில் உளவு வேலைகளுக்காக புளொட் பாவிக்கப்படுவதாக அவர் கூறியிருந்தார். எமது எதிர்ப்புக்கள் காரணமாக மட்டக்களப்பில் ஈ.பி.ஆர்.எல்.எப். குழுவினை அரச படைகள் தமது நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தார்கள். எனினும் வவுனியாவில் ஈ.பி.ஆர். எல்.எப். அரசின் நேரடிக் கட்டுப்பாட்டினுள் இயங்குவதில்லை என மன்னிப்புச்சபை அறிவித்துள்ளது.

புளொட், ரெலோ என்பன இருபது வதை முகாங்களை வவுனியாவில் வைத்துள்ளன. சர்வதேச மன்னிப்புச்சபை இவற்றினுள் மூன்று முகாம்களில் நீண்டகாலமாக பல தமிழர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். இவற்றில் ரம்பைக்குளம், லக்கி அவுஸ் எனப்படும் புளொட்டின் வதை முகாமும், கோவில்குளம் வதை முகாமும் உள்ளடங்குகின்றன. புளொட்டின் ரம்பைக்குளம் வதைமுகாமில் 15ற்கு மேற்பட்ட தமிழர்கள் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர். இதேபோல் கோவில்குளம் முகாமிலும் 15ற்கு மேற்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

மன்னிப்புச் சபையின் இக் குற்றச்சாட்டுக்களை ரெலோ குழு மறுத்துள்ளது.

## இராணுவ கட்டுப்பாட்டில் வராதவர்களை பட்டினி போட்டு தண்டிக்கும் சிறிலங்கா அரசு

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள நிவாரணவெட்டினால் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 8500 பொதுமக்கள் உணவின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் வராத மக்களை பட்டினி போட்டு தண்டிக்கும் அதே வேளை, இந்நிவாரண வெட்டின் மூலம் மீதப்படுத்தப்படும் பணத்தை போரை முன்னெடுத்து செல்ல பயன்படுத்துகின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர். அரசின் இவ் நிவாரண வெட்டால் மக்கள் கிழங்கு வகைகளையும், கீரைகளையுமே தமது உணவாக கொண்டுள்ளனர். இதனால் போசாக்கு நிலைமை மிகவும் பாதிப்படைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. விடுதலைப் பிரதேசங்களில் உள்ள மக்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதி வந்தால் மட்டுமே நிவாரணம் வழங்கப்படும் என சிறிலங்கா அரசு கடந்த இரண்டு மாதமாக அறிவித்து வருகின்றது. அரசின் அறிவிப்பை ஏற்று மக்கள் செல்லாததனாலேயே தற்போது தனது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு நிவாரணத்தை தடைசெய்துள்ளது. இதற்கு மக்களுக்கு அனுப்பப்படும் நிவாரணங்கள் புலிகளின் கைகளிற்கே செல்கின்றது

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## புலிகளுடன் பொக்ஸ் உடன்பாட்டின் கீழ் பேசத் தயார் -பீரிஸ்

(09.08.98)

விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு சிறிலங்கா அரசு தயாராக உள்ளதாக சிறிலங்கா நீதிஅமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார். 1997 மார்ச்சில் முன்னைய பிரித்தானிய அமைச்சின் இணை வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸ் அவர்கள் மேற்கொண்ட உடன்பாட்டின் அடிப்படையில் பேசுவதற்கு தனது அரசு தயாராக உள்ளதாக வத்தளையில் இடம்பெற்ற வட அயர்லாந்து உடன்பாடு தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய அமைச்சர் பீரிஸ் அறிவித்துள்ளார்.

பொக்ஸ் உடன்பாடானது சிறிலங்காவின் பிரதான அரசியல் கட்சிகளையும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு பொது நிலைப்பாடு ஒன்றை வலியுறுத்தியது ஆனால், ஐ.தே.க இவ் உடன்பாட்டை மீறியதாக அரச குற்றஞ்சாட்டுகின்றது.

அரசினால் ஏற்றுக் கொள்ளப்படும் உடன்பாட்டை ஏற்றுக்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## தென்னாபிரிக்காவில் புலிகளின் செல்வாக்கு சிறிலங்கா அச்சம்

(07.09.98)

தென்னாபிரிக்காவில் விடுதலைப் புலிகளுக்கு அதிகரித்து வரும் ஆதரவு, சிறிலங்காவை அச்சத்திற்கு உள்ளாக்கி உள்ளது. அங்கு வாழும் சுமார் ஆறு இலட்சம் தமிழர்களின் ஆதரவினை புலிகள் பெற்றுவருவதாக சிறிலங்கா அரசு கருதுகின்றது.

அங்கு விஜயம் செய்த சந்திரிகாவிற்கு எதிராக அணிசேரா மாநாட்டு மண்டப வாயிலில் இடம்பெற்ற எதிர்ப்புப் போராட்டங்களும், மண்டேலாவிடம் சமர்ப்பிக்கப்பட்ட தென்னாபிரிக்கத் தமிழர்களின் கோரிக்கைகளும் சிறிலங்கா ஜனாதிபதியின் நேரடிப் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து தென்னாபிரிக்க அதிபர் மண்டேலாவின் சந்திப்பின் போதும், தொலைக் காட்சியிலும் புலிகளுக்கு எதிரான கருத்துக்களை சந்திரிகா தெரிவித்துள்ளார்.

## சிறீலங்காவின் பொருளாதாரம் ஆபத்தில்? சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

(07.09.98)

சிறிலங்கா அரசானது தனது அரச ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் எனவும், ஓய்வு ஊதியத்தை குறைக்க வேண்டும் எனவும் சர்வதேச நாணய நிதியம் கோரியுள்ளது.

தற்பொழுது அரச கட்டுப்பாட்டில் உள்ள மின்சாரம் போன்ற அத்தியாவசியத் துறைகளையும், வங்கிகளையும் தனியாரிடம் கையளிக்குமாறு நிதியம் அரசிடம் கூறியுள்ளது.

தற்போது இடம்பெறும் போரினால் சிறிலங்காவின் பொருளாதாரம் பலத்த ஆபத்தை எதிர்நோக்குகிறது என சுட்டிக்காட்டியுள்ள நிதியம், சந்திரிகா விரும்புகின்றாரோ இல்லையோ இதுதான் சிறிலங்காவிற்கு தேவைப்படும் பொருளாதார திட்டமாகும் எனக் கூறியுள்ளது.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

லண்டனில் புதுப் பொலிவுடன்

கணபதி தமிழ்க்கடை
உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள், மளிகைப் பொருட்கள்
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்வதற்கு
Ganapathy Food & Wine
34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185